
கோகுலம்

GOKULAM

ஜூலை ரூ 2





பெருந்தலைவர் காமராஜ்

பிறந்த நாள் : 15-7-1903

மறைந்த நாள்: 2-10-1975



கோகுலம்

மலர் — 3 இதழ் — 6
1985 ஜூலை மாத இதழ்
தனிப்பிரதி ரூ 2/-
ஆண்டு சந்தா ரூ 24/-

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

கௌரவ ஆசிரியர் அழ. வள்ளியப்பா

அருமைச் சிறுவர் சிறுமியரே!

'கோகுலம்' வாசகர்களாகிய நீங்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். ஆண்டுத் தேர்வில் அநேகமாக எல்லோருமே வெற்றி பெற்றிருப்பீர்கள். பெற்ற வெற்றியின் மூலம் உங்களுக்கு மட்டுமன்றி, உங்களுடைய பெற்றோர், உற்றார், உறவினர், ஆசிரியர்கள் அனைவருக்குமே மகிழ்ச்சியைத் தேடித் தந்திருக்கிறீர்கள். உங்கள் எல்லோருக்கும் 'கோகுலம்' சார்பில் மனங்கனிந்த வாழ்த்துக்கள்.

ஒரு சிலர் வெற்றி பெறாமல் போயிருக்கலாம். அதற்காக அவர்கள் சோர்ந்து விடக் கூடாது. 'நாம் வெற்றி பெறாமல் போனதற்கு என்ன காரணம்? ஆசிரியர் பாடம் நடத்தும் போது கவனமாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லையா? வீட்டுக்கு வந்ததும் அன்று வகுப்பில் நடந்த பாடங்களில் முக்கியமானவற்றைப் படித்துப் பார்க்கத் தவறிவிட்டோமா? பாடங்களில் சந்தேகம் ஏற்பட்ட போது, ஆசிரியர்களிடத்திலோ அல்லது வகுப்பிலே நன்றாகப் படிக்கும் நண்பர்களிடத்திலோ கேட்டு நம் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளாமல், கூச்சப்பட்டுக் கொண்டு இருந்து விட்டோமா? அளவுக்கு மீறி விளையாட்டில் ஆர்வம் காட்டிவிட்டோமா? தேர்வு நெருங்கும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியமாக இருந்து விட்டோமா?' — என்றெல்லாம் தங்களுக்குத் தாங்களே கேள்விகள் கேட்டு உண்மையான காரணத்தை அறிய வேண்டும்.

உண்மையான காரணம் தெரிந்த பிறகும், சும்மா இருக்க முடியுமா? தங்களிடமுள்ள குறைகளைத் தீர்க்க முயல வேண்டும். முயற்சி உடையார் மேன்மை அடைவார். இது உறுதி.

— அழ. வள்ளியப்பா.



இந்த இதழ் எழுத்தாளர்கள்



எஸ்.கனகவல்லி சாரங்கபாணி



லட்சுமி ராஜரத்னம்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



பி.குமரகுரு



கோ.சுரேஷ்




சு.சிவகுமார்




வி.சரவணசுரேஷ்



த.தட்சிணமூர்த்தி



ஆர்.கணேஷ்



நா.ரா.சித்தார்த்தன்

பிருந்தாவனக் கவிஞர்கள்




எஸ்.விஜயநந்தினி




கே.கண்ணன்

மேல் அட்டையில்:
ப்ரியா
வண்ணப் படம்:
யோகா



பாரதி-புதிர்-1

இதோ இப்படத்தைப் பார்த்ததும், உங்களுக்கு மகாகவி பாரதியாருடைய பாடலில் சில வரிகள் நினைவுக்கு வரும். உடனே அந்த வரிகளை ஒரு தாளில் எழுதிக் கொண்டு, நீங்கள் எழுதியிருப்பது சரிதானா என்று 10 ஆம் பக்கத்தைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.



பெருந்தலைவர் காமராஜ்

"இன்று மாலை காங்கிரஸ் கூட்டம் நடைபெறப் போகிறது. எல்லாரும் வருக! வருக!'' என்று விருதுநகர் வீதியிலே டமாரம் அடித்து அறிவித்தும், கூட்டச்செலவுக்காக உண்டியல்குலுக்கிப் பணம் வசூலித்தும் வந்த ஒரு சிறுவன், பிற்காலத்தில் அகில இந்தியக்காங்கிரஸின் தலைவராக ஆனான். ஒரு முறையல்ல ; இரு முறை! பெயர் தெரிந்திருக்கும். பெருந்தலைவர் காமராஜ்.

தேச விடுதலையையே மிகப் பெரிதாகக் கருதிய காமராஜ் திருமணமே செய்து கொள்ளவில்லை. சாதாரணத் தொண்டராக இருந்து தமது தியாகத்தால், உழைப்பால், நேர்மையால் தலைவராக உயர்ந்தார்.

ஆறுவது வயதிலே தந்தையை இழந்ததால் தகுந்த வசதியும் வாய்ப்பும் காமராஜருக்கு இல்லை. நான்காவது வகுப்பு வரைதான் படிக்க முடிந்தது.

தமக்கு அக்காலத்தில் கிடைக்காத வாய்ப்பும், வசதியும் தமிழ் நாட்டுக் குழந்தைகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று காமராஜ் நினைத்தார். தாம் முதல் அமைச்சரானதும் இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்தார்.

300 மக்கள் இருக்கும்கிராமத்திற்கு ஓர் ஆரம்பப் பள்ளி, 3 மைல்களுக்கு ஒரு நடு நிலைப் பள்ளி, 5 மைல்களுக்கு ஓர் உயர் நிலைப் பள்ளி இருக்க வேண்டும் என்று விரும்பினார். அவர் காலத்தில் நூற்றுக்கணக்கான பள்ளிகள் திறக்கப்பட்டன. இந்தப் பள்ளிகளில் படித்த பல ஏழைக் குழந்தைகள், தொடர்ந்து மேற்படிப்புப் படித்து பிற்காலத்தில் டாக்டர்களாக, என்ஜினியர்களாக, வக்கீல்களாக, ஆசிரியர்களாக இன்று விளங்குவதைக் காணலாம்.



ஹென்றி ஃபோர்டு

அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் நகரில் டியர் பார்ன் (Dear Born) என்று ஒரு கண்காட்சி இருக்கிறது. அங்கே, முதல் முதலாகத் தயாரான மோட்டார் வண்டியைக் காணலாம். அதை 1896 ல் தயாரித்தவர்தான் ஹென்றி ஃபோர்டு. அப்போது அவருக்கு வயது 33.

கிரீன் ஃபீல்ட் என்ற இடத்தில் பிறந்த ஃபோர்டு சிறு பையனாக இருக்கும்போது, தெருவில் மெதுவாக நகர்ந்துசென்றஒருரோடு இன்ஜினைக் கண்டார். உடனே அதன் அருகிலே ஓடி அது எப்படி வேலை செய்கிறது என்பதை அதை ஓட்டி வந்தவரிடம் கேள்விமேல்கேள்விகேட்டுத்தெரிந்து கொண்டார். அன்றிலிருந்து வேகமாக ஓடும் வண்டியைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது. எந்திரங்கள் செய்யும் ஒரு தொழிற்சாலையில் சேர்ந்து வேலை பார்த்தார். பல நுட்பங்களைத் தெரிந்து கொண்டார். 1893 ல்முதல்பெட்ரோல்என்ஜினைக் கண்டு பிடித்தார். அதற்குப் பிறகு மூன்று ஆண்டுகளில்மோட்டார்வண்டியைக் கண்டு பிடித்தார்.

அவர் ஆரம்பித்த ஃபோர்டு மோட்டார் கம்பெனியின் லாபத்தில் கம்பெனித் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுத்தார்.

ஃபோர்டு ஃபவுண்டேஷன் (Ford Foundation) என்ற பெயரில் ஒரு நிறுவனம் அமெரிக்காவில் உள்ளது. உலக சமாதானம் ஏற்படவும், மக்களின் வாழ்க்கை உயரவும், அறிவு பெருகவும் அது உதவி வருகிறது. தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளிலும் தரமான நூல்களை மலிவான விலையில் வெளியிட சென்னையிலும் தென்மொழிப் புத்தக டிரஸ்ட் என்ற அமைப்பைத் தொடங்க அது உதவியிருக்கிறது.



மழலைச் செல்வங்கள் மனம் மகிழ

கீதாஞ்சலி கேஸட்டுகள்

குழந்தைப் பாடல்கள்



தமிழ்நாட்டுக் குழந்தைகள் நன்மைக்காகவே கீதாஞ்சலி ரிக்கார்டிங் கம்பெனியார் இந்தத் துறையில் இந்த கேஸட்டுகளை முதன்முறையாக வெளியிட்டுள்ளனர்

இந்த கேஸட்டுகள் கல்வியும், இசையும் கலந்தது. ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது.



எல்லா
பிரதான
மியூசிக்
கடைகளிலும்
கிடைக்கும்

குழந்தைக் கவிஞர்கள் பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, அழ. வள்ளியப்பா ஆகியோரது மிகச் சிறந்த பாடல்கள். தேனிசைத் தென்றல் திரு. T.M. சௌந்தராஜன் அவர்கள் தானே இசையமைத்துப் பாடியுள்ளார்.

மேற்கண்ட முப்பெரும் மகாகவிகளின் இனிக்கும் கதைப்பாடல்கள், குழந்தைகளுக்குக் கதைச் சொல்லி கருத்தூட்டுவது, நல்ல கதை, சிறந்த கருத்து, எளியநடை அனைத்தும் இணைந்தது. மிகச்சிறந்த இசையமைப்பாளர் திரு. V. குமார் அவர்கள் இசையில், இசைக்குயில் P. சுசீலா அவர்கள் பாடியுள்ளார். இல்லந்தோறும் இருக்க வேண்டிய ஒப்பற்ற இசை கேஸட்டுகள்.

தயாரித்து விற்பனைச் செய்பவர்கள்

Geethanjali

கீதாஞ்சலி ரிக்கார்டிங் கம்பெனி

17, ரஹேஜா காம்ப்ளெக்ஸ் (கீழ்த்தளம்)
834, அண்ணாசாலை, சென்னை-600 002
தொலைபேசி: 842446

Adept M.GRC 102.85

3-D போல் இருந்தது!

* தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் துடுக்குத்தனமும் அஞ்சாநெஞ்சமும் அவற்றால் விளைந்த நன்மை, தீமைகளும் படிப்பதற்குச் சுவையாக இருந்தன.
—பெ. ரமா மகேசுவரி, மதுரை

* இவர் போன்ற தமிழறிஞர்களைப் பற்றித் தொடர்ந்து வெளியிட்டால் பயனுள்ளதாக இருக்கும்.
—பி. சுவாமிநாதன் கும்பகோணம்.

* வீரபாண்டிய கட்டபொம்மன் வண்ணப் படக் கதையைப் படித்த போது ஒரு 3-D படம் பார்த்த மகிழ்ச்சி ஏற்பட்டது.
—ஜி. கௌசல்யா (6165), ஸ்ரீரங்கம்.

* எங்கள் பள்ளி மாணவன் செல்வன் புகழொளியின் சிறப்பியல்புகளைச் செம்மையாகவிளக்கியனமக்கு உளங்கனிந்தபாராட்டு (அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாகவும்). கட்டுரையின் இறுதியில் பள்ளியின் பெயர் 'மயிலாடுதுறை மேல்நிலைப் பள்ளி' எனப் பொதுவாக உள்ளது. அதனை 'D. B. T. R. தேசிய மேல்நிலைப் பள்ளி' என முழுமைப்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகின்றேன்.
—க. இருஷ்ணமூர்த்தி,
உதவித் தலைமை ஆசிரியர்.

* இருக்குறள் புதிர் போல பாரதி — புதிர் வெளிவர இருப்பது அறிந்து மகிழ்ச்சி.
—க. த. சரவணன் (8982), கோவை—43.

* "பிறப்பிடம் எதுவாய் இருந்தாலும், சிறப்பிடம் பெறுவது குணத்தாலே" என்ற கருத்தைச் சிறப்புக் கவிதை உணர்த்துகிறது.
—நீடாமங்கலம் பாலு, பரப்பனமேடு.

* 'அப்பாவுடன் போனேன் கப்பல் ஏறி நானே' சிறுவன் சுஜித், தன் அனுபவத்தைக் கூறியது பல சிறுவர் சிறுமியருக்குக் கப்பல் பற்றிப் பல விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள உதவியது.
—தேரழுந்தூர் சி. சுப்பு, தேரழுந்தூர்.

* 'எத்தனை கோகுலங்கள்?' என்ற புதிருக்கு 35 என்ற விடையும் பொருந்துமே!
—ஆர். என். ராஜன் (3612), தஞ்சாவூர்.
—ஜ. அருள்மொழி (2171), நீலகிரி.

சார் தபால்!

* கம்ப்யூட்டரை மடக்க ஒரு கேள்வி'யில் எ. சோதி கம்ப்யூட்டரை மட்டுமா மடக்கினார்? எங்களையும் அல்லவா சேர்த்து மடக்கி விட்டார்!
ஹெச். சாயிராபேகம் (4582), லால்குடி.

* கம்ப்யூட்டர் வசதியுடன் இயங்கும் பள்ளியைப் பற்றி வெளியிட்டு, 'நாமெல்லாம் அங்கு படிக்கக் கூடாதா?' என்ற ஏக்கத்தையும் ஏற்படுத்தி விட்டது இந்த மாத கோகுலம்.
ஆர். எஸ். இராஜ், சீர்காழி.

* கண்களுக்கு ஒரு குளிர்ச்சி.
மனத்துக்கு ஒரு மகிழ்ச்சி.
அட்டை மிகக் கவர்ச்சி — இது
கோகுலத்தின் வளர்ச்சி!

—வி. கணேஷ்குமார் (3343), கோவில்பட்டி.

* 'பய உணர்வே மனித வாழ்வின் செயல்பாடுகளுக்கு முதல் எதிரி' என்பதை விளக்கியது ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் கதை.
—செல்வி ரமணி, சுவுந்தப்பாடி.

* சேரன் திருடர்களிடம் மாட்டிக் கொண்டு துன்புறுவதைக் கண்டு கண்கள் குளமாயின
என். பாபு (1707), வேலூர்—1.

* 'சேலம் விஜயராகவாச்சாரியார் போன்ற பெரிய பெரிய தலைவர்களை நாம் இதுவரை அறிந்து கொள்ளாமல் போனோமே!' என்று வருந்தினேன். அவருடைய புகைப்படத்தையும், அவரைப் பற்றிய கட்டுரையையும் வெளியிட்டதற்கு நன்றி.
—ஆர். சந்திரன், சென்னை—18.

* வர்ணத்தின் கைவண்ணத்தில் எழுந்த 'வந்தே மாதரம்' பங்கிம்சந்திரரை நேரில் சந்தித்தது போன்றமகிழ்ச்சி ஏற்படுகிறது.
—பத்மா சுப்பிரமணியன், நீடாமங்கலம்.

* ஒவ்வொரு மாதமும் ஒரு மிருகம், தன் கதையைக் கூறுவது மிக மிகச் சுவையாக இருக்கிறது. தொடர்ந்து வெளியிடுங்கள்.
—ஏ. பரிமளநாதன், திருப்பூர்—4.



மின் மினிக் கதைகள்

பாட்டிக்கு வைத்தியம்

ஒரு பாட்டி தன்னந் தனியாக ஒரு வீட்டில் வசித்து வந்தாள். அவளுக்குச் சரியாகக் கண் தெரியவில்லை. ஒரு மருத்துவரை வரவழைத்துக் கண்களைக் காட்டினாள். அவர் மிகவும் பொல்லாத மருத்துவர். எப்படி, எப்படி நோயாளிகளை ஏமாற்றிப் பொருள் சேர்ப்பது என்பதில் மிகவும் குறியாக இருப்பவர்.

ஒவ்வொரு நாளும், பாட்டியின் வீட்டுக்கு வரும்போது, அவர் பாட்டியின் கண்களுக்கு மருந்து போட்டுக் கட்டுக் கட்டுவார். பிறகு, அங்குள்ள சாமான்களை ஒவ்வொன்றாகத் தம்முடைய வீட்டுக்குக் கொண்டு போய்விடுவார்.

சில நாட்களில் பாட்டியின் வீட்டிலிருந்த விலையுயர்ந்த சாமான்களெல்லாம் காலியாகி விட்டன.

சாமான்கள் காலியானதும், கிழவியின் கண்களுக்குப் போட்டிருந்த கட்டுகளை மருத்துவர் அவிழ்த்து விட்டார்.

''பாட்டி, கண்களை அகல விழித்துப் பாருங்கள். பார்வை நன்றாகத் தெரியுமே!'' என்றார்.

பாட்டி, சுற்று முற்றும் பார்த்தாள்.

அப்போது வைத்தியர், ''பார்வை நன்றாகத் தெரிகிறதல்லவா? நான் வைத்தியம் பார்த்ததற்கு ரூ 1000/— தர வேண்டும். எடுங்கள் ரூபாயை'' என்றார்.

உடனே பாட்டி, ''முன்பெல்லாம் எனக்கு ஓரளவாவது பார்வை தெரிந்தது. இப்போது சுத்தமாகத் தெரியவில்லையே! எப்படிப் பணம் தருவது?'' என்று தகராறு செய்தாள்.

வைத்தியர் பாட்டி மீது வழக்குத் தொடுத்தார். நீதிபதியிடம் பாட்டி சொன்னாள். ''நீதிபதி அவர்களே, எனக்கு ஓரளவு பார்வை தெரிந்த போது, என் வீட்டில் பல சாமான்கள் இருந்ததைக் காண முடிந்தது. இப்போது முற்றிலும்



குணமாகிவிட்டதாக வைத்தியர் கூறுகிறர். ஆனல், இப்போது என் பார்வையில் ஒரு சாமான் கூடத் தெரியவில்லையே!'' என்ருள்.

நீதிபதி நடந்ததை விவரமாகக் கேட்டதும், வைத்தியரின் ஏமாற்று வேலை நன்கு புரிந்தது. ''வைத்தியர் எடுத்துச் சென்ற சாமான்கள் அனைத்தையும் பாட்டியிடம் ஒப்படைத்து மன்னிப்புக் கேட்க வேண்டும். வைத்தியத்திற்காக ஒரு பைசாக் கூடப் பாட்டி கொடுக்க வேண்டியதில்லை'' என்று நீதிபதி தீர்ப்பு வழங்கிஞர்

தந்திரம் பலிக்கவில்லை!

மிருக ராஜஞகிய சிங்கத்திற்கு மிகவும் வயதாகிவிட்டது. காட்டில் அலைந்து சுற்றி இரை தேட முடியவில்லை. எப்படி மற்ற மிருகங்களைத் தன்னிடம் வர வழைப்பது என்று யோசனை செய்தது.

கடைசியில் அது ஓர் அறிவிப்பு செய்தது. ''எந்த மிருகத்துக்கு உடல் சம்பந்தமான நோய் வந்தாலும் என்னிடம் உடனே தாராளமாக வரலாம். நான் பல மூலிகைகள் வைத்திருக்கிறேன். உடனுக்குடன் குணப்படுத்திவிடுவேன். என் வாழ்நாளில் இப்படிச் செய்வதை, ஒரு புண்ணியமாகக் கருதுகிறேன்'' என்பதுதான் அந்த அறிவிப்பு.

அருகில் வரும் மிருகங்களை அடித்துச் சாப்பிடுவது என்பதுதான் அதன் திட்டம்.

இதை நன்ருகப் புரிந்து கொண்ட காட்டு மிருகங்களில் எதுவுமே அதனிடம் செல்லவில்லை.


ஒருநாள் ஒரு குதிரை, தன் பின்னங்கால்களில் ஒன்றைத் தூக்கியபடி நொண்டி நொண்டிக் கொண்டு சிங்கத்தின் அருகில் வந்தது.

''அரசே, என் பின் காலில் முள் குத்திவிட்டதே! நீங்கள்தான் அதை எடுத்து விட்டு மருந்து போட வேண்டும்'' என்றது.

சிங்கம் குதிரையின் பின்பக்கமாகச் சென்று, அந்தப் பின்னங்காலை உற்றுப் பார்த்தது. அந்தச் சமயம் பார்த்து, தன்னுடைய இரண்டு பின்னங்கால்களாலும் 'பட்பட்'டென்று ஓங்கிச் சிங்கத்தின் முகத்தில் பலமாக உதை கொடுத்தது அந்தக் குதிரை!

இதைச் சற்றும் எதிர்பாராத சிங்கம், அடி தாங்காமல் கீழே விழுந்து தரையிலே உருண்டது.

இப்போது வைத்தியம் பார்க்க வேண்டியது உனக்குத்தான். பிறகு, மற்றவர்களுக்கு வைத்தியம் பார்க்கலாம்'' என்று கூறிக் கொண்டே குதிரை நாலு கால் பாய்ச்சலில் ஓடி மறைந்தது.



வானமும் பூமியும்



அந்த ஊரில் வான சாஸ்திரி ஒருவர் இருந்தார். அவர் இரவு நேரங்களில் வானத்தில் தெரியும் நட்சத்திரங்களைக் கூர்ந்து பார்த்து ஆராய்ச்சி செய்வார்.


ஒருநாள் இரவு அவர், வானத்தில் தெரிந்த நட்சத்திரங்களைப் பார்த்தபடி நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது, வழியில், புதிதாக வெட்டி வைக்கப்பட்டிருந்த குழியை அவர் பார்க்கவில்லை. அதற்குள் 'தொப்'பென்று விழுந்துவிட்டார். அப்படி விழுந்தபோது, அவருடைய கை, கால்கள் மண்ணுடன் உரசி, காயங்கள் ஏற்பட்டுவிட்டன. வலி தாங்காமல் அவர், ''ஐயோ! அப்பா! உதவி! உதவி!'' என்று கதறினார்.

அப்போது அவ்வழியாக வந்த ஒருவர் அக்குழியின் அருகே ஓடிச் சென்றார்; உற்றுப் பார்த்தார். உள்ளே அவருக்குத் தெரிந்த வான சாஸ்திரி விழுந்து கிடப்பதைக் கண்டார். உடனே மிகுந்த சிரமப்பட்டு அவரை வெளியில் கொண்டு வந்தார்.

பிறகு வான சாஸ்திரியைப் பார்த்து, ''வானத்திலே இருக்கும் நட்சத்திரங்களையெல்லாம் ஆராயும் உமக்கு, பூமியிலே எதிரிலே இருக்கும் குழி தெரியவில்லையே!'' என்று கூறி வருந்தினார்.

நரியை ஏமாற்றிய சேவல்

காட்டிலே ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்திருந்தது ஒரு சேவல். அதை அந்த வழியாக் வந்த ஒரு நரி பார்த்துவிட்டது. உடனே அதற்கு வாயிலே எச்சில் ஊறியது. எப்படி அந்தச் சேவலைக் கீழே வரவழைப்பது என்று யோசனை செய்தது.



பிறகு, ''ஏ, என் அன்புமிக்க சேவலே, உனக்கு விஷயம் தெரியாதா? இந்தக் காட்டிலுள்ள மிருகங்களும், பறவைகளும் சண்டை சச்சரவு இல்லாமல், கூடப் பிறந்தவர்களைப் போல அன்பாக, பிரியமாக, பாசமாக இனி மேல் வாழ வேண்டும் என்று முடிவாகியிருக்கிறதே! நீ கீழே இறங்கி வா. விவரமாகச் சொல்கிறேன்'' என்றது.

சேவலுக்கு நரியின் தந்திரம் புரிந்துவிட்டது. உடனே அது நரியை ஏமாற்ற நினைத்தது. அது மரத்தில் இருந்தபடியே, ''அடடா, அப்படியா....! அதோ தூரத்தில் யாரோ கூட்டமாக வருவது போலத் தெரிகிறதே!'' என்று கூறிக் கொண்டே கழுத்தை நீட்டிச் சிறிது தூரத்தில் வருபவர்களை உற்றுப் பார்ப்பதுபோல் பாசாங்கு செய்தது.

''யார் வருவது?'' என்று கேட்டது நரி.

''நம்முடன் அன்பாக, பிரியமாக, பாசமாக, கூடப் பிறந்தவர் போலப் பழகத்தான் அவர்கள் வருகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் வேறு யாருமில்லை. வேட்டை நாய்கள்தான்!'' என்றது சேவல்.

இதைக் கேட்ட பிறகும் நரி அங்கே நிற்குமா? எடுத்தது ஓட்டம்!

—கருத்து : ஈசாப்

பாரதி புதிர்—!
—விடை.

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்.
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக் கொருநிற மாகும்.

சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி.

எந்த நிறமிருந் தாலும்—அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும்—இஃது
ஏற்ற மென்றும் சொல்லலாமோ?
('முரசு' என்ற பாடலிலிருந்து)

பாகவதர் நாற்காலி மீது நின்றபடி சப்ளாக் கட்டையுடன் 'ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே' என்று கதை சொல்லுகிறார். குழந்தைகள் அவரைச் சுற்றி உட்கார்ந்து கதை கேட்கிறார்கள்.


பாகவதரின் மனைவி: என்னங்க இது! கதை சொல்லிக் குழந்தைகளைத் தூங்க வையுங்க என்றால், இப்படியா செய்யுறது?

—லலிதா செல்லப்பா.



அடுத்த இதழில்:

புதுமைப் போட்டி-3



என் குழந்தைப் பருவம்

ருக்மிணிதேவி

ருக்மிணிதேவி என்றதுமே அடையாற்றிலுள்ள கலாக்ஷேத்திரம் நம் நினைவுக்கு வருகிறது. அதன் மூலம் நூற்றுக்கணக்கான கலைஞர்களை உருவாக்கிய இவர், 25—க்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றிப் புகழ் பெற்றிருக்கிறார்.

இவரும் இவருடைய கணவர் டாக்டர் அருண்டேலும் சேர்ந்து பெசன்ட் அம்மையார் பெயரில் தொடங்கிய கல்விக் கூடங்கள், அன்பு வழியில் கல்வியைப் போதித்து வருகின்றன.

மனிதர்களுக்குப் பல வகையிலும் உதவும் மிருகங்களுக்கு மனிதர்கள் இழைத்து வரும் கொடுமைகளைத் தடுக்க இவர் நாடாளுமன்றத்தில் மசோதா கொண்டு வந்தார். கருணை மிக்க இந்தச் செயலைப் பாராட்டி 'பிராணி மித்ரா' என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பெற்றது.

தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர் அவர்கள் சேகரித்த புத்தகங்களும் ஏட்டுச் சுவடிகளும் அடங்கிய நூல் நிலையத்தை இவர் நிர்வகித்துத் தமிழ்த் தொண்டு புரிந்து வருகிறார்.

இவரது சிறந்த தொண்டுகளைப் பாரத அரசாங்கம் பாராட்டி 'பத்ம பூஷண்' விருது வழங்கியிருக்கிறது. சாந்தினிகேதன் விஸ்வபாரதி பல்கலைக்கழகமும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

—ஆசிரியர்.



எங்கள் குடும்பம் ரொம்பப் பெரிய குடும்பம். என் தகப்பனார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ரொம்ப ஒற்றுமையாக இருப்பார்கள். என்னுடன் பிறந்தவர்கள் ஏழு பேர். இன்னும் சித்தப்பா குழந்தைகள், மாமா வீட்டுக் குழந்தைகள் எல்லாரும் இருப்பார்கள். யார் கூடப்பிறந்தவர் யார் என்றே தெரியாது. எல்லாரும் சகோதரர்கள் தான்!

என் தகப்பனார் ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரி எஞ்சினீயர். பாலங்கள் கட்டுவது முதலிய காரியங்களுக்காக வெவ்வேறு இடங்களுக்குப் போக வேண்டியிருக்கும். 'சர்க்யூட் போகிறார்' என்று சொல்லுவார்கள். நாளைக்குப் போக வேண்டும் என்று அப்பா சொல்லிவிடுவார். உடனே மூட்டை கட்ட ஆரம்பித்துவிடுவோம். என் தாயார் ரொம்ப சாமர்த்தியசாலி. இத்தனை பேருக்கும் சாப்பாடு தயார் செய்து எடுத்துக் கொள்வார். ஒரே கொண்டாட்டமாக இருக்கும்.

இதனால் நாங்கள் சிறு வயதில் தொடர்ந்து பள்ளிக் கூடம் போகவில்லை. என் தாயார்தான் எங்களுக்கு முதல் குரு. சுலோகங்களும், பாட்டுக்களும் கற்றுக் கொடுப்பார்.

நான் மதுரை நகரில் பிறந்தேன். ரொம்பக் குழந்தையாக இருந்தபோது மீனாட்சி அம்மன் கோவிலுக்கு என்னைத் தூக்கிக் கொண்டு போனார்கள். கையில் கிளியுடன் நிற்கும் மீனாட்சி அம்மன் என் மனம் கவர்ந்த தெய்வம்.

எங்கள் வீடு எப்போதும் கலகலப்பாக இருக்கும். என் தாயாருக்கு ஓயாத வேலை: மாடு கன்றுகளையும் பார்த்துக்கொள்வார். எனக்கு மூன்று வயதாவதற்குள்ளேயே என் தங்கையைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு வந்துவிட்டது. என்னை வீட்டு வாசல் திண்ணையில் உட்கார வைத்து மடியில் மூன்று மாதக் குழந்தையை விட்டுவிட்டு அம்மா தன் வேலையைப் பார்க்கப் போய்விடுவாள். எனக்குத் தோன்றியதையெல்லாம் பாடித் தாலாட்டிக் கொண்டும் கொஞ்சிக் கொண்டும் இருப்பேன். குழந்தை அழவே அழாது. குழந்தை அழுதால், ''ருக்மிணிகிட்டே விட்டுடு. அழாமல் பார்த்துப்பா'' என்பார்கள்.

எனக்கு நாய்க்குட்டி, பூனைக்குட்டி, பசுங்கன்று எல்லாவற்றின் மீதும் ரொம்பப் பிரியம். கன்றுக்குட்டிக்கு உடம்பு சரியில்லை என்றால் என் தாயார் அதற்குக் குழந்தை மாதிரி பாலாடையில் மருந்து புகட்டி விடுவார். நான் பக்கத்திலேயே நின்று பார்த்துக் கொண்டிருப்பேன். பிரியத்தோடு தடவிக் கொடுப்பேன். ''ருக்மிணியின் கைபட்டாலே சரியாகிவிடும்'' என்று சொல்வார்கள்.

என்னுடைய பாட்டிக்குக் குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். வீடு நிறையக் குழந்தைகள் இருந்தும் தாய் தகப்பனாரில்லாத ஒரு பெண் குழந்தையை ரொம்ப அருமையாக வளர்த்தார். எங்கேயாவது கல்யாணம் பண்ணிக் கொடுத்தால் கஷ்டப்பட்டுவாளோ என்று தன் பிள்ளைக்கே மணம் செய்து வைத்து வீட்டிலேயே வைத்துக் கொண்டார். அந்த மாதிரி அன்பைப் பொழிகிறவர்களைப் பார்ப்பது கடினம்.

சில சமயம் நாங்கள் பள்ளிக்கூடத்துக்கும் போவோம். அடையாற்றிலே டாரதி ஜினராஜதாஸா என்பவரும், மிஸ் டெய்லர் என்பவரும் சிறு குழந்தைகளுக்காக வகுப்புக்கள் நடத்தி வந்தார்கள். இந்தியர்களிடம் பிரியமாக இருப்பார்கள். ஆனாலும், ஆங்கிலேயர்களானபடியால் தாங்கள் கொஞ்சம் உயர்வுதான் என்று தோன்றும்படி நடந்துகொள்வார்கள். ''இந்தியர்களின் பெயரை உச்சரிக்கவே முடியாது என்று சொல்லி எங்களையெல்லாம் வேறு பெயரால் அழைப்பார்கள்.

ருக்மிணி என்று கூப்பிடாமல் 'லுக்ஸ்' என்று கூப்பிடுவார்கள்.

பிறகு சில மாதங்கள் லேடி சிவஸ்வாமி ஐயர் பள்ளியில் படித்தோம். டாக்டர் பெஸன்ட் அம்மையாருடன் தொடர்புடைய பள்ளி இது. பெண்கள் கல்விக்காகச் சிறந்த தொண்டு செய்த ஸ்தாபனம்.

நான் சாது என்று பெயர் வாங்கி இருந்தேன். என் தங்கையை, ஒரு நாள் பெஞ்ச் மீது ஏறி நிற்கச் சொல்லித் தண்டித்தார்கள். அவள் அழுது கொண்டே இருந்தாள். எனக்கு மனம் தாங்கவில்லை. மெள்ளச் சமாதானப் படுத்தி வீட்டுக்கு அழைத்துப் போனேன். என் தகப்பனாரிடம் இதைச் சொல்லி வருத்தப்பட்டேன். உடனே என் தந்தையார் மாணவ மாணவிகளைப் பள்ளிக்கூடங்களில் தண்டிப்பது தவறு என்று நிர்வாகிகளுக்குக் கடிதம் எழுதினார்.

எனக்கு ஐந்தாறு வயதாக இருந்த போது, திருவல்லிக்கேணியிலே அக்பர் ஸாஹிப் தெருவில் குடியிருந்தோம். அப்போது என்னுடைய பெரிய தாத்தா இருந்தார். ரொம்ப நன்றாகப் பாடுவார். என் அக்கா சிவகாமுவுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுப்பார். நான் ஆவலாகக் கேட்பேன்.

சிவகாமுவுக்குப் பூனைக் குட்டிகள் என்றால் ரொம்ப ஆசை. பத்துப் பன்னிரண்டு பூனைக் குட்டிகளுக்குச் சாதம் போட்டுப் பால் கொடுத்து வளர்ப்பாள். வீடு பூராவும் பூனைக் குட்டிகள் தான்!

பிறகு புதுக்கோட்டைக்குப் போனோம்.

நாங்கள் புதுக்கோட்டை போய் இறங்கிய போது எங்களை அழைத்துப் போக ஒரு குதிரை வண்டி வந்திருந்தது. அந்த வண்டியை ''கவர்னஸ் கார்ட்'' என்று சொல்வார்கள்.

அந்தக் குதிரையைப் பார்த்து அப்படியே மயங்கிப்போய்விட்டோம். அந்த மாதிரி அழகான குதிரையைப் பார்க்கவே முடியாது. வீட்டுக்கு வந்ததிலிருந்து அப்பாவைத் துளைத்தெடுத்து விட்டோம். ''குதிரை வேணும்பா''. ''அந்தக் குதிரையை வாங்கித் தாப்பா'' என்று ஓயாமல் கேட்டோம். என் தந்தை ரொம்பக் கண்டிப்பு. எங்களுடைய ஆர்வத்தைப் பார்த்து மனம் இளகிக் கடைசியில் அந்தக் குதிரையை வாங்கிவிட்டார் அப்பா. அந்த வண்டியில்தான் பள்ளிக்கூடம் போவோம். சென்னைக்கு வந்த போது நாங்கள் குதிரையை விட்டு விட்டு வரமாட்டோம் என்று சொல்லிவிட்டோம். அதனால் குதிரையும் சென்னை வந்தது. இங்கேயும் அந்த வண்டியில்தான் பள்ளிக்கூடம் போவோம்.


அப்பா எங்களை பாலியா ஸ்கூல் என்ற மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டார். அந்தக் காலத்தில் பெண்கள் பள்ளி என்றால் தையலும் சமையலும்தான் கற்றுத் தருவார்கள். இந்தப் பள்ளியில் மாணவர்களை ரொம்பத் தண்டிப்பார்கள். பார்க்க ரொம்ப வருத்தமாக இருக்கும்.

இப்படிப்பட்ட பள்ளிக்கூடத்துக்கு ஆசையாகக் குழந்தைகள் வருவார்களா? மாணவனுடைய கைகளைக் கட்டிவிட்டுக் குனிந்தபடியே வெகு நேரம் நிற்கச் சொல்வார்கள். ஒரு பையன் அடிக்கடி ஓடிப் போய் விடுவான். அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து அதிகத் தண்டனை தருவார்கள்.

எந்த உபாத்தியாயரும் மாணவிகள் பக்கமே வர மாட்டார்கள். அதனால் மாணவர்களை அடிக்க வாத்தியார் வந்தால் நாங்கள் குறுக்கே நிற்போம்.

என் தகப்பனார் பள்ளிச் சிறுவர்களைத் தண்டிக்கக் கூடாது என்ற கருத்துடையவர் என்பது எனக்குத் தெரிந்திருந்தபடியால் இப்படி மாணவர்களைக் காப்பாற்றும் துணிவு இருந்தது.

தலைமை ஆசிரியரிடம் ''மாணவர்களை அடிப்பது அநியாயம் ஸார். தண்



டனே கொடுக்கக்கூடாது என்று சொல்லுங்கள்'' என்றேன்.

''நீ என்ன சொல்றது அடிக்கக்கூடாதுன்னு. அடியாத மாடு படியாது,'' என்றார்.

''ஸார்! நான் சொல்லவில்லை. பெஸன்ட் அம்மா சொல்லியிருக்கா.''

''எங்கே சொல்லியிருக்கா?''

ஏதோ ஒரு இங்கிலீஷ் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்து ''இதிலே போட்டிருக்கு'' என்றேன்.

இங்கிலீஷ் படிக்கக் கூடத் தெரியாது எனக்கு. இந்த சமாச்சாரத்தையெல்லாம் என் தந்தையிடம் சொல்லவே அவர் கல்வி அமைச்சருக்குக் கடிதம் எழுதினார். இதனால் ஒரு ஆசிரியர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார் என்று ஞாபகம்.

புதுக்கோட்டையில் படித்த நாளில் எங்கள் உடை வேடிக்கையாக இருக்கும். பாவாடையும் கோட்டும் அணிந்து கொண்டு போவோம்.

புதுக்கோட்டையிலிருந்து நாங்கள் புறப்பட்ட போது பள்ளியில் ஒரு கூட்டம் நடத்தினார் தலைமை ஆசிரியர். ''இவர்கள் ஊருக்குப் போகிறார்கள். இனிமேல் உங்களுக்கெல்லாம் சலுகை காட்ட யாரும் இருக்க மாட்டார்கள். உங்களை என்ன பண்ணுகிறோம் பாருங்கள்'' என்று பேசினார். இப்போது நினைத்தால் கூடத் துக்கமாக இருக்கிறது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் புதுக்கோட்டையில் ''குற்றாலக் குறவஞ்சி'' நாட்டிய நாடகத்தை நடத்துவதற்காகப் போயிருந்தேன். அப்போது பழைய பள்ளிக்கூடத்துக்குச் சென்றோம். பத்மா ஸார் என்று நாங்கள் அழைத்த ஸ்ரீ பத்மநாபனைச் சந்தித்தேன்.



''உனக்கு ஞாபகம் இருக்கா. எங்களுக்கெல்லாம் புத்தி சொல்லுவாயே. அடிக்கப்படாது. தண்டனை கொடுக்கக் கூடாது என்று சொல்லுவாயே'' என்று கேட்டார்.

இப்படியெல்லாம் அனுபவங்கள் ஏற்பட்டிருந்த படியால்தான் பயமே இல்லாத கல்விமுறையை அனுசரிக்கும் பள்ளிக்கூடத்தை நடத்த வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. டாக்டர் பெஸன்ட் மறைந்த பிறகு அவருடைய பெயரால் ஆரம்பிக்கப்பட்ட பள்ளியிலும், பின்னால் தொடங்கிய பெஸன்ட் அருண்டேல் பள்ளியிலும் குழந்தைகளுக்குத் தண்டனை வழங்குவதே கிடையாது.


ஒரு சமயம் ஒரு நாய்க் குட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து விட்டேன். சின்னக் கண்ணும் சின்னக் காதுமாய் ரொம்ப அழகாக இருந்தது. அப்பா நாய்க் குட்டியையெல்லாம் வீட்டுக்குக் கொண்டு வரக் கூடாது என்று சொல்லி விட்டார். அவருக்குத் தெரியாமல் ஒளித்து வைத்துவிட்டேன். ஆனால், நாய்க் குட்டிக்கு என்ன தெரியும்? அது கத்த ஆரம்பித்து விட்டது. ''இது என்ன சத்தம்?'' என்று கேட்டு விட்டு ''எடுத்துக் கொண்டு போய் விட்டுடு'' என்று சொன்னார். நான் என்ன பண்ணினேன், தெரியுமா? அதை மெள்ளத் தூக்கிக் கொண்டு போய் அப்பாவின் மடியில் வைத்து விட்டேன். ரொம்ப அழகாக இருந்ததால், அவர் அதைப் பார்த்துக் கொண்டே இருந்தார். கடைசியில் ''சரி! வைத்துக் கொள்,'' என்று சொல்லி விட்டார். அவருக்கே ரொம்பப் பிரியம் வந்துவிட்டது.

ஒரு சமயம் ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தோம். என்னுடைய மாமி ரொம்ப லட்சணமாக இருப்பார். எனக்கு நல்ல பட்டுப் புடவை கட்டிக் கொள்ள வேண்டும். நிறைய நகை போட்டுக் கொள்ள வேண்டும் என்று ரொம்ப ஆசை. நான் ஆசைப்படுகிறேன் என்று தன் பதினெட்டுமுழப் புடவையை எப்படியோ எனக்கு உடுத்தி விட்டார் மாமி. நகையெல்

லாம் போட்டுக் கொண்டு சந்தோஷமாக இருந்தேன்.

திரும்பி வந்ததும், "எனக்குக் கல்யாணம் பண்ணிக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது" என்று சொன்னேன். எல்லோரும் சிரித்தார்கள். "உனக்கு இப்போ எதுக்குக் கல்யாணம்?" என்று கேட்டார்கள்.

"கல்யாணம்பண்ணிண்டா நிறைய நகை போட்டுக்கலாம். காசு மாலை எல்லாம் போட்டுக்கலாம். பட்டுப் புடவை கட்டிக்கலாம்" என்று சொன்னேன்.



ரொம்ப வருஷங்களுக்குப் பிறகு நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். மிருகங்களுக்கு இருக்கிற உள்ளுணர்வு ரொம்ப அதிசயமானது.

தியாஸாபிகல் ஸொஸைட்டியில் கறவை நின்று போன மாடுகளை விற்கும் வழக்கம் கிடையாது. ஒரு சமயம் யாரோ மூன்று கிழப் பசுக்களை, கசாப்புக் கடைக்கு விற்று விட்டார்கள். இது எனக்குத் தெரிய வந்த போது ரொம்பத் துக்கமாக இருந்தது. அந்தப் பசுக்களை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்துத் திரும்ப வாங்கிக் கொண்டு வந்து விடுங்கள் என்று சொல்லி இரண்டு பேரை அனுப்பி வைத்தேன். அவர்கள் எங்கெல்லாமோ தேடிக் கடைசியில் பெரம்பூரில் அவை இருப்பதைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

இரண்டு பசுக்கள்தான் இருந்தன. "திரும்ப வாங்க வேண்டுமா? அப்படியானால் விலை கூடக் கொடுக்க வேண்டும்" என்றானாம் அந்தக்கடைக்காரன். அவன் சொன்ன விலையைக் கொடுத்துத் திரும்ப வாங்கினார்கள்.

"என் வாழ்நாளிலேயே இங்கு வந்த மாடுகளைத் திரும்பக் கொடுப்பது இது தான் முதல் தடவை" என்று அதிசயத்துடன் சொல்லிவிட்டு, "என்ன செய்யறது? பிழைப்புக்காக இந்தத் தொழில் செய்கிறேன்" என்று வருந்தினானாம்.

மாடுகள் கிடைத்ததும் தீவனம் வைத்துத் தண்ணீர் காட்டி அழைத்து வர வேண்டும் என்று சொல்லி இருந்தேன். ஒரு பசு தண்ணீர் குடிக்கவே இல்லையாம். கயிற்றை அவிழ்த்த உடனே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓட ஆரம்பித்து விட்டதாம். பிடிக்கவே முடியவில்லையாம்.

அன்று தீபாவளிப் பண்டிகை கலாக்ஷேத்திரத்தில் கொண்டாடிக் கொண்டிருந்தோம். திடீரென்று எங்கிருந்தோ 'அம்மா' என்ற சத்தம் கேட்டது. பார்த்தால் இந்தப் பசு! அதற்கு எப்படி என்னைத் தேடிக் கொண்டு கலாக்ஷேத்திரத்துக்கு வரவேண்டும் என்று தோன்றியதோ! சற்று நேரம் கழித்துப் பெரம்பூரிலிருந்து வந்தவர்கள் எப்படி இந்தப் பசு திமிறிக் கொண்டு ஓடிவிட்டது என்று சொன்னார்கள். இது ஒரு அதிசயம் இல்லையா?

நம் நாட்டுக் குழந்தைகள் எல்லாரும் நமது பாரத நாட்டுப் பண்பாட்டை மதித்துப் போற்றுபவர்களாகவும், எல்லா உயிர்களிடத்திலும் தயை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது என் ஆசை.

— கேட்டு எழுதியவர்: ஆனந்தி

அடுத்த இதழில்
என் குழந்தைப் பருவம்
– நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை



புதுமைப் போட்டி – 2

சரியான விடை


வரிசை	கதையின் பெயர்	எழுதியவர்	வெளிவந்த மாதம்
1.	கந்தசாமி என்ற ஆலமரம்	—அ. திலகவதி	அக்டோபர்
2.	காட்டு அன்னங்கள்	—மூலம்: ஹான்ஸ் கிரிஸ்டியன் ஆண்டர்சன். தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி	நவம்பர்
3.	கேசவன் கதை எழுதுகிறுன்!	—பூதலூர் முத்து	பிப்ரவரி
4.	விண்வெளியில் மஹாமண்டூர் மண்ணுங்கட்டி!	—எம். சோலையன்	ஜூன்
5.	சார், ஒரு டிக்கட்!	—வே. சபாநாயகம்	மார்ச்
6.	அரவிந்தன் கண்ட அதிசயம்!	—ரா. பொன்ராசன்	ஜூலை
7.	ஜெர்மன் தேசத்துக் குட்டிக் கதைகள் — மூன்று பிள்ளைகள்	—தேவி	மே
8.	நான் கல்வி அமைச்சராளுல்...	—கே. ஜெயலக்ஷ்மி	ஏப்ரல்
9.	நிலாவுடன் போன மான்குட்டி	—தங்கமணி	மே
10.	கருணை விழிகள்	—ஆர். பொன்னம்மாள்	ஜூன்
11.	பீம்புஸ்ஸி	—வான்முகில்	ஆகஸ்ட்
12.	சின்னுன் நடத்திய நாடகம்	—எம். ஆர். ராஜன்	ஜூன்.

மொத்தம் வந்த விடைகள் – 641

சரியான விடைகள் – 287









அ.திலகவதி	எச்.கிருஷ்ணமூர்த்தி	பூதலூர் முத்து	எம்.சோலையன்	வே.சபாநாயகம்	ரா.பொன்ராசன்

சரியான விடைகளைக் குலுக்கிப் போட்டு எடுத்ததில் முதற் பரிசு 154—வது விடைக்கும், 2—வது பரிசு 276—வது விடைக்கும் கிடைத்தன.



முதற்பரிசு ரூ. 50/—
சு. சக்ரபாணி,
1, ரெட்டியார் அக்ரஹாரம்,
கும்பகோணம்—612001.



2—வது பரிசு ரூ. 25/—
எஸ். பாலசுப்பிரமணியன்,
அமராவதி நிலையம்,
உச்சிநத்தம்—626115.

2.6.85 மாலை 6 மணிக்கு விடைகளைக் குலுக்கிப் போட்டு முதல் இரண்டு விடைகளை எடுத்த குழந்தை:



ஆர். ஆர்த்தி
(வயது 4)
U. K. G., ஆதர்ஷ் ஹையர் செகண்டரி ஸ்கூல்,
சென்னை—600017.

இந்தப் போட்டிக்கு வந்த விடைகளைப் பார்த்ததும், "ஆஹா! எத்தனை பேர் 'கோகுலம்' பழைய இதழ்களைப் பொக்கிஷம் போலப் பாதுகாத்து வருகிறார்கள்!" என்று வியப்படைந்தோம்.

மொத்தம் கண்டுபிடிக்க வேண்டிய 12 விடைகளில், ஏதேனும் ஒன்றை மட்டும் கண்டுபிடிக்க முடியாமல், அந்த இடத்தைப் பெரும்பாலோர் காலியாக விட்டுவிட்டனர். சிலர் கதைகளின் பெயர்களை அல்லது ஆசிரியர்களின் பெயர்களைத் தவறாக எழுதியிருந்தார்கள். வேறு சிலர், மாதங்களை மாற்றி விட்டார்கள். அவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பார்த்ததில் 12 விடைகளையும் சரியாக அனுப்பியவர்கள் 287 பேர். பரிசு பெற்றவர்களுக்கும், சரியான விடைகளை அனுப்பியவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டு.

—ஆசிரியர்.








தேவி	கே.விஜயலக்ஷ்மி	தங்கமணி	ஆர்.பொன்னம்மாள்	வான்முகில்	எம்.ஆர்.ராஜன்

பிருந்தாவனக் கவியரங்கம்



இறைவன் ஒன்றே!

விண்ணில் மீன்கள் பற்பலவாம்;— ஆனால்,
விளங்கும் வானம் ஒன்றேயாம்.
கண்கள் முகத்தில் இரண்டாகும்;— ஆனால்,
காணும் காட்சி ஒன்றேயாம்!

வீடுகள் இருபுறம் இருந்திடுமாம்;— ஆனால்,
வீதி என்பது ஒன்றேயாம்!
பாடும் ராகம் பலவாகும்;— ஆனால்,
பாடகர் மேடையில் ஒருவர்தான்!

கட்டும் பூக்கள் பலநிறமாம்;— ஆனால்,
கட்டிய மாலை ஒன்றேயாம்!
எட்டும் கனிகள் எண்ணிலவாம்— ஆனால்,
இருக்கும் மரமோ ஒன்றேயாம்!

எண்ணும் எண்ணம் பற்பலவாம்;— ஆனால்,
எண்ணிடும் மனமோ ஒன்றேயாம்!
மண்ணில் கூறுவர் பலகடவுள்;— ஆனால்,
மாண்புடை இறைவன் ஒருவர்தான்!

— த. தட்சிணாமூர்த்தி (8896),
திருச்செங்கோடு.

நேர்மையும் நிம்மதியும்

ராமன் அந்தி வேளையிலே
நடந்து சென்றான் வீதியிலே,
இருண்டது அவன்முகம் கவலையிலே
எண்ணிப் பார்த்தான் மனத்தினிலே.

பள்ளியில் ஏழாம் வகுப்பினிலே
படித்துக் கொண்டு இருக்கையிலே
காப்பி அடித்தான் தேர்வினிலே
கண்டு பிடித்தனர் நடுவினிலே.

மாட்டிக் கொண்டான் பயத்தினிலே
மரம்போல் நின்றான் மத்தியிலே
மாணவர் செய்த கேலியிலே
வருத்தம் கொண்டான் நெஞ்சினிலே.



வீடு திரும்பி வருகையிலே
மிகமிக எண்ணிப் பார்க்கையிலே
'நேர்மை ஒன்றே வாழ்வினிலே
நிம்மதி' என்றான் உண்மையிலே.

— ஆர். கணேஷ் (2933),
சென்னை—53.

எதுகைப் பாடல்

என்றன் பெயரோ உடையப்பா — என்
அப்பா பெயரோ சடையப்பா — அவர்
கையில் இருப்பது குடையப்பா — அவர்
பிரியமாய் உண்பது வடையப்பா

உடம்பு பருத்தால் எடையைப்பார்— அதோ
வீரன் நடக்கும் நடையைப்பார் — அவன்
அணிந்துசெல்லும் உடையைப்பார்— இன்றே
கோகுலம் விற்கும் கடையைப்பார்!

— நா. ரா. சித்தார்த்தன்.
பாலையம்பட்டி.





தவழும் குழந்தை

தவழும் குழந்தை தரையினிலே — சிறு
தூக்கம் வருகிற வரையினிலே
கவலை என்பது கண்டதில்லை — எந்தக்
களங்கமும் அதன்மனம் கொண்டதில்லை.

பல்லே இல்லா வாய்திறக்கும் — ஒரு
புதுமலர் போலே அதுசிரிக்கும்
சொல்லில் அடங்கா அழகுஅது — இந்த
பூமியில் அதுபோல் அழகுளது?

பொம்மைகள் உருட்டி அதுதள்ளும் — அந்தப்
பிஞ்சுமுகம் நம் நெஞ்சை அள்ளும்
உண்மையில் அதனை வெறுப்பவரே — ஓர்
உள்ளம் இல்லாமல் இருப்பவரே!

— எஸ். விஜயநந்தினி (7431),
திருச்சி — 20.

இரட்டைவால் பட்டம்

இரட்டை வாலைக் கட்டிக் கொண்டு
இங்கும் அங்கும் பறக்கும் பட்டம்
தரையில் இருந்து எழும்பிச் சென்று
தலையை ஆட்டிப் பறக்கும் பட்டம்.


ஆகா யத்தில் ஏறி நின்று
அழகாய்ப் பறக்கும் எனது பட்டம்
'ஆகா! ஆகா!' என்று வியந்தே
அனைவர் பார்த்து மகிழும் பட்டம்.
அதிகக் காற்று அடித்த தாலே
அறுந்து கயிறும் விழுந்த தாலே
குதிரை போலப் பாய்ந்து சென்று
கொண்டு வந்தேன் எந்தன் பட்டம்!

— கே. கண்ணன் (3945),
சாணார்பட்டி.



எங்கள் வீடு

எங்கள் வீடு இனிய வீடு.
என்றும் இனிமை பொங்கும் வீடு
தங்கக் குணமுள்ள பெற்றோரினால்
பங்கமில் லாமல் வாழுகின்றோம்



அன்பே உருவான அப்பாவினால்
அரிய கல்வியைப் பெறுகின்றோம்.
பண்பு மிகுந்த அம்மாவினால்
பாசத் துடனே வாழுகின்றோம்.

வீட்டின் முன்னாலே தோட்டமுண்டு.
தோட்டத்தில் நிறையப் பூக்களுண்டு.
பூக்கள் தருகின்ற வாசம் கொண்டு
புத்துணர் வைநாம் அடைகின்றோம்.

வானொலி மூலம் உலகறிந்து
வையத்தில் நன்றாய் வாழுகின்றோம்.
வீணொலி வம்பு எழுப்பாமல்
வினய மாக நடக்கின்றோம்.

அப்பா, அம்மா, சொல்கேட்டு
அறிவில் சிறக்க முயல்கின்றோம்
தப்புச் செய்யாமல் வாழுகின்றோம்
தரணியில் சிறந்து விளங்கிடுவோம்.
—தியாகராஜன் (5041), பரமக்குடி.

கேளுங்கள்; சொல்கிறோம்!

○ பேய்கள் இருப்பது உண்மையா?

— ச. நைட்டிங்கேல், உதகை.

எல்லாம் மனப் பேய்தான்!

○ பத்திரிகையில் குறிப்பிடும் 'மலர்' என்றால் என்ன? 'இதழ்' என்றால் என்ன?

— ப. பாலசுந்தரம், மங்கலம்.

ஒரு வாரப் பத்திரிகையில் மலர் 9— இதழ் 14 என்று இருப்பதாக வைத்துக் கொள்வோம். மலர் — 9 என்பது அந்தப் பத்திரிகை தொடங்கி 9 ஆண்டுகள் ஆகின்றன என்றும் இதழ் — 14 என்பது ஒன்பதாவது ஆண்டிலே 14 — வது வாரத்தில் வெளி வரும் பத்திரிகை என்றும் தெரிந்து கொள்ளலாம்.


○ 'வா ராஜா வா' படத்தில் 'கல்லெல்லாம் சிலை செஞ்சான் பல்லவ ராஜா' என்று ஒரு பாடல் வருகிறதே, அதை எழுதியவர் யார் என்று எனக்குத் தெரியுமே! அவர் கோகுலம் கௌ—— ——ஆ—— —— ——ர் தானே?

—வெ. சண்பகராமன், திண்டுக்கல்.

கரெக்ட்.

* குதிரைப் பந்தய மைதானத்தின் எதிரில் இருக்கும் கோகுலமே, குதிரை மணிக்கு எத்தனை மைல் வேகத்தில் ஓடும்?

— ப. குப்புசாமி, கோடம்பாக்கம்.



கோடம்பாக்கத்தில் இருக்கும் குப்புசாமியே, நல்ல குதிரை மணிக்கு 40 மைல் வேகம் ஓடும். அதாவது ஓர் எக்ஸ்பிரஸ் ரயில் வேகம்.

○ என் சிநேகிதன் கோபாலுக்கு அவனுடைய அப்பா 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்'—பத்துத் தொகுதிகள் வாங்கிக் கொடுத்திருக்கிறார். விடுமுறையில் நான் அவன் வீட்டுக்குச் சென்று படித்து வருகிறேன். அருமையான விஷயங்கள், அழகான வண்ணப்படங்களுடன் இருக்கின்றன. இந்த மாதிரிக் கலைக்களஞ்சியங்களை ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் வாங்கி வைத்தால், மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்குமே!

— எஸ். தினகரன், திருச்சி— 2.

ஆம். நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும். ஒவ்வொரு பள்ளிக் கூட நூலகத்திலும் அவசியம் இருக்க வேண்டியது 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்'. பள்ளிக் கூட நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்கும்போது பட்டியலில் முதலில் இருக்க வேண்டியது இது தான்!

○ B.B.C. என்பதன் முழு ஆங்கில விரிவு யாது?

— க. எழிலன், பேரங்கியூர்.

BRITISH BROADCASTING CORPORATION.

○ ஏகநாதர்
ஏகநாதர்

— இருவரும் ஒருவரா?

— ப. வேதாசலம், பழமுதிர்சோலை.

இல்லை. ஏகநாதர் இந்து மதத்தைச் சேர்ந்தவர். மகாராஷ்டிரத்தில் பிறந்த சிறந்த ஞானி. பெரிய கவிஞர். பாவார்த்த இராமாயணம், ருக்மிணி கல்யாணம் போன்ற நூல்களை இயற்றியவர்.

* மதுரை நகரத்தை 'நான்மாடக் கூடல்' என்று அழைக்கிறார்கள். வேறு பெயர்களும் உண்டா?

— வி. தேவிதாசன், திருச்சி — 2.

கன்னிபுரம், சிவன் முத்தித்தலம், துவாதசாந்தம், பூலோக சிவலோகம் என்றெல்லாம் மதுரைக்குப் பல பெயர்கள் உண்டு. ஆனால், மதுரையின் முன்னாள் பெயர் என்ன தெரியுமா? "கடம்பவனம்".

* கண்ட கண்ட இடங்களிலெல்லாம் பெரியவர்களின் சிலைகளை வைத்திருக்கிறார்கள். பல சிலைகளைப் பார்க்கவே பரிதாபமாயிருக்கின்றன. தலையிலும் முகத்திலும் காக்கைகள் எச்சம் இட்டிருக்கின்றன. மாதக் கணக்கில் தெருத் தூசி படிந்திருக்கிறது. எங்கள் தெருவில் உள்ள ஒரு சிலையில் சிலந்தி கூடு கட்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை அவர்

களுக்கு ஏற்படலாமா? இதைத் தடுக்க என்ன செய்யலாம்?

— கே. மகாதேவன், சென்னை—21.

சிலை வைப்பவர்களுக்கு அந்தத் தலைவரிடம் உண்மையான மரியாதை இருந்தால், வாரம் ஒரு முறையாவது சுத்தம் செய்யவும் முன்வர வேண்டும்.

நகராண்மைக் கழகம் அல்லது பஞ்சாயத்து அலுவலகம் இப்படிச் சிலை வைக்க ஏற்பாடு செய்பவர்களிடம், முன் கூட்டியே ஒரு தொகையைக் கட்டாயமாக வசூல் செய்து அத்தொகையில், சுத்தம் செய்து பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்கலாம்.

☆ எங்கள் தெருவில் ஒரு தாத்தா இருக்கிறார். பல்வலி வரும் போதெல்லாம், வலியிருக்கும் இடத்தில் புகையிலையை வைத்து அடக்கிக் கொள்வார். புகையிலைக்கு வலியைப் போக்கும் சக்தி உண்டா?

— என். புவனேஸ்வரி, திண்டிவனம்.



அந்தத் தாத்தா புகையிலையைத்தான் அடக்கிக் கொள்கிறார். எங்கள் தெருவிலே உள்ள ஒரு பாட்டி, பல்வலி வரும்போதெல்லாம் மூக்குப் பொடியைப் பல்லின் மேல் வைத்து அழுத்துவார். இவையெல்லாம் நல்லவை அல்ல; புற்றுநோய் போன்ற வேறு பல வியாதிகளைக் கிளப்பி விடக் கூடும்.

☆ கடல் நீரைக் குடிநீராக மாற்ற முடியுமா? மாற்றினால், குடிநீர்ப் பஞ்சம் தீருமே!

— கே. கமலக்கண்ணன், காவேரிப்பாக்கம்

ஏன் மாற்ற முடியாது? உப்பு நீரை, அணுச் சக்தியின் உதவியால் குடி நீராக மாற்ற முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் அப்படி ஏன் மாற்றவில்லை? செலவு மிக அதிகமாகும். அதனால்தான் தயங்குகிறார்கள்.

☆ ரக்பி' விளையாட்டு எந்த நாட்டிலிருந்து தோன்றி வளர்ந்தது என்பதைக் கூற முடியுமா?

— இரா. இராமசாமி, நெல்லை—6.

ஒரு மாணவன் கால்பந்தாட்டம் ஆடும் போது, பந்தைக் காலால் உதைப்பதற்குப் பதில் கையால் எடுத்து, அக்குளில் இடுக்கிக் கொண்டு எதிரியின் கோலுக்குள் ஓடினான். அவன் செய்த தவறையே ஓர் ஆட்டமாக வைத்து விதிகளையும் அமைத்துவிட்டார்கள். இது நடந்தது 1823ல். மத்திய இங்கிலாந்திலுள்ள ரக்பி என்ற நகரப் பள்ளியில் இது நடந்ததால், இந்த ஆட்டத்திற்கும் 'ரக்பி' என்றே பெயர் சூட்டிவிட்டார்கள்.

☆ நம் தேசத் தந்தை காந்தியடிகளை விட அவர் மனைவி அன்னை கஸ்தூரிபாவுக்கு வயது அதிகமாமே, உண்மையா?

— ஆர். சுரேஷ், கோவை—15.

உண்மைதான். கிட்டத்தட்ட ஆறுமாதம் மூத்தவர் அன்னை கஸ்தூரிபா.

☆ நம் தேசத் தலைநகராக முன்பு கல்கத்தா இருந்ததாம். பிறகுதான் டில்லிக்கு மாற்றினார்களாம். இது உண்மையா?

— வெ. கோவிந்தராஜன், சாத்தூர்.

ஆம். 1911 ஆம் ஆண்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டிக் கொண்ட போதுதான் மாற்றப்பட்டது.

☆ தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் யார்?

— கே. ஆறுமுகம், கூனூர்

காந்தியக் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை.

☆ எனக்கு இப்போது வயது 13. நான் சிறு குழந்தையாக இருந்தபோது என் அம்மா எனக்கு 'மாமி கட்ட பிட்டு; மடியில் வாங்கிக் கட்டு' என்ற பாட்டைச் சொல்லித் தருவார்கள். ஆனால், அந்தப் பாட்டை எழுதியவர் யார் என்று என் அம்மாவுக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரியுமா?

—ஆர். ராஜா சென்னை—17



ஓ, தெரியுமே! மாணவர் மன்றத் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தவர், 'தமிழ் நெறிக் காவலர்' என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர் — மயிலை சிவமுத்துத் தாத்தா இயற்றிய பாடல்தான் அது. அவர், 'முத்துப் பாடல்கள்' என்று ஓர் அருமையான சிறுவர் கவிதை நூலை இயற்றியிருக்கிறார். அது மத்திய அரசினரின் பரிசைப் பெற்றிருக்கிறது. 'தங்க

நாணயம்', 'நல்ல எறும்பு' போன்ற பல சிறுகதைப் புத்தகங்களையும் எழுதியிருக்கிறார்.



* பரீட்சைக்கு படிக்கும்போது மனதுக்குள் படிப்பது நல்லதா? சத்தமாகப் படிப்பது நல்லதா?

— ஸ்ரீ. ராதாகிருஷ்ணன், மயிலாடுதுறை.

மனதுக்குள் படிப்பதே நல்லது. பிறருக்குத் தலைவலி ஏற்படாமல் தவிர்க்கலாம். இரவு நேரமானால், மற்றவர்களை நிம்மதியாகத் தூங்கவும் விடலாம். படிப்பவருக்குத் தூக்கம் கண்களைச் சுற்றும் போல் தோன்றினால், அப்போது மட்டும் கொஞ்சம் உரக்கப் படித்துத் தூக்கத்தை விரட்டலாம்.

* பல்லிக்கு நாக்கு உண்டா?

— அ. சரவணராசன், திட்டக்குடி

பல்லி இல்லாத வீடே இல்லை என்று சொல்லிவிடலாம். உங்கள் வீட்டில் இருக்கும் பல்லியைக் கூர்ந்து பார்த்தாலே தெரிந்து கொள்ளலாமே! இலையைப் போல அதன் நாக்கு இருக்கும். ஒரு பூச்சியைக் கண்டுவிட்டால், உடனே அது மெல்ல மெல்ல அருகிலே வந்து நாக்கினால் அந்தப் பூச்சியை நக்கிப் பிடித்துக் கொள்ளும்.

குழந்தை நடிகர்களுக்குப் பரிசு



'மை டியர் குட்டிச் சாத்தான்' படத்தில் மிகச் சிறப்பாக நடித்த முகேஷ், சுரேஷ், அர்விந்த், சோனியா ஆகியோருக்கு 1984 — ஆம் ஆண்டின் சிறந்த குழந்தை நடிகர்களுக்கான விருதுகளை, குடியரசுத் தலைவர் ஜைல் சிங் வழங்கினார். இந்த விழா சென்ற ஜூன் முதல் தேதி புது டில்லியில் நடந்தது. செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் வி. என். காட்கில் அருகில் அமர்ந்திருக்கிறார்.

புகைப்படம்: டி. மோகன், மத்திய செய்தித் துறை.

மால்டோவா சீரணி ஆபத்துக்குதவுகிறது...

கடுமையான கோடை நாள். டாபூவின் வீட்டில் குழுமியிருந்த மால்டோவா சீரணி அடிக்கிற வெய்யிலைத் தாங்கமுடியாமல் நீண்ட நீச்சல் அடிக்க வெளியே கிளம்பிக் கொண்டிருந்தது. சாண்ட்விச்சையும் டப்பாவில் ஊற்றி வைத்திருக்கும் மால்டோவாவையும் மறக்காமல் எடுத்துச் செல்லுங்கள் என்று உத்தரவிட்டாள் டாபூவின் அம்மா. ட்ரிங்...ட்ரிங்...புறப்பட்டுவிட்டது மால்டோவா சீரணி வானம்பாடிகள் போல உல்லாசமாக பளபளக்கும் சைக்கிள்களை ஓட்டிக்கொண்டு.

திடீர் வெடி:

''டப்''—என்ன சத்தம்! டாபூவின் சைக்கிள் அல்லவா பஞ்சராகி விட்டது! சீரணி முழுதும் சைக்கிள்களை டாபூ இருக்கும் இடத்தை நோக்கி செலுத்துகிறது. ஆனால் ....அடடா! இது என்ன? புழுதியைக் கிளப்பிக் கொண்டு வேகமாக வரும் ஒரு கறுப்பு கார் பாதையில் செல்லும் ஒரு சைக்கிளோட்டியின் மேல் அல்லவா ஏற்றிவிட்டுப் பறந்தோடுகிறது!

மால்டோவா சீரணியின் முதலுதவி

சீரணி விரைந்து செயல்பட்டது. வேணு காரின் நம்பரைக் கவனித்து விட்டான். டாபூ அடிபட்ட சைக்கிளோட்டியைக் கவனிக்க ஓடினான். மாலதி ஆம்புலன்ஸைக் கூப்பிட விரைந்தபொழுது சின்னஞ்சிறுமி மின்னி ஒரு எட்டணா நாணயத்தைத் தன் பாக்கெட்டிலிருந்து துழாவி எடுத்துக் கொடுத்தாள். மின்னி இல்லாவிட்டால் அன்று அடிபட்ட சைக்கிளோட்டிய பையனின் கதி அதோகதிதான்.

பையனுக்குப் பாவம் சரியான அடி. ''கவலைப்படாதே, உதவிக்கு ஆட்கள் வருகிறார்கள்'' என்று அவனைச் சமாதானப்படுத்தினான் டாபூ. லீயின் உதவியுடன் இரத்தப் போக்கை நிறுத்தக் கட்டு போட்டான். நல்ல வேளையாக இரத்தம் வருவது நின்றுவிட்டது. ''அப்பாடா பிழைத்தான்'', என்று பெருமூச்சு விட்டனர் சிறுவர்கள்.

ஆம்புலன்ஸ் வருகை

அத்தருணத்தில் டாக்டருடன் வெள்ளை நிற ஆம்புலன்ஸ் அங்கு வந்து நின்றது. விரைந்து டாக்டர் பையனுக்கு சிகிச்சை அளித்தார். பின் டாபூவை நோக்கி நீ சரியான சமயத்தில் முதலுதவி அளித்ததால் பையன் பிழைத்துவிட்டான். போலீஸ் காரோட்டியை எப்படியும் பிடித்துவிடும், நல்ல காரியம் செய்தாய் பையா என்று பாராட்டினார். ''பாராட்டுக்குரியவன் நான் மாத்திரம் அல்ல, சீரணி முழுவதுமே'' என்றான் டாபூ.

களைப்பில்லை, காரணம் மால்டோவா.

மால்டோவா பருகும் குழந்தைகள் வாழ்வின் சுவைமிக்க நாட்களை நன்கு அனுபவிக்கிறார்கள். காரணம்...பொன்வண்ண கோதுமை, பார்லி, தூய பால், செழுமையான கோக்கோ இவைகளின் சங்கமமான மால்டோவா பாலுக்குச் சுவைகூட்டி பன்மடங்கு பலனையும் தருகிறது. மால்டோவா உங்கள் குழந்தைகளை ஆர்வக் களிப்புடன் இயங்கச் செய்கிறது.

மால்டோவா 'க்ளப்'ல் சேருங்கள்.

மிகவும் சுலபமாக சேரலாம். மூன்று 500 கிராம் ஜாடியின் லேபிள்களுடன் அதன் உட்புற சீல்களையும் சேர்த்தோ அல்லது மூன்று காலியான 500 கிராம் ரீஃபில் பேக்கின் மேலுறைகளையோ கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள்.

மால்டோவா க்ளப், 4-வது மாடி,
பண்டாரி ஹவுஸ், 91 நேரு ப்ளேஸ்,
புது டில்லி 110 019.

அவ்வளவுதான். நீங்கள் இப்பொழுது மால்டோவா 'க்ளப்' மெம்பர்.



ஜெ ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

வைட்டமின்கள் கூடிய மால்டோவா: ஆரோக்கியம் பலம் மற்றும் சக்திக்கு

SIMOES/JIL/003/85 TAM

வருங்கால டென்னிஸ் நட்சத்திரங்கள்

பாஹ்ரீனில் விஜய் அமிருதராஜ், டென்னிஸ் பந்தயத்தில் ஆடிக்கொண்டிருந்த போது ஒரு குழந்தை அழுதது! உடனே அந்தக் குழந்தையின் தகப்பனார் ஆட்டக்காரர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாதேயென்று குழந்தையுடன் மைதானத்தைவிட்டு அகலப் புறப்பட்டார்! குழந்தையின் அழுகை விஜய் அமிர்தராஜுக்கு உடனே தன் மகன் பிரகாஷை நினைவூட்டவே, ''ஸார்! எனக்கு ஒரு தொந்தரவும் இல்லை. நீங்கள் குழந்தையுடன் உட்கார்ந்து ஆட்டத்தைப் பாருங்கள்!'' என்றார். குழந்தைப்பாசத்தைஎடுத்துக் காட்டும் இந்தச் சம்பவத்தைவிட எட்டு இளம் சிறுவர்களை விளையாட்டுத் துறையிலும் கல்வித் துறையிலும் மேம்படுத்துவதற்கு அவர் எடுத்துக் கொண்ட நன்முயற்சி நெஞ்சைத் தொடுகிறது.

டென்னிஸ் ஆட்டத்தில் அகில உலகிலும் இன்று பேரும்புகழும் சம்பாதித்து வரும் விஜய் அமிர்தராஜும் ஆனந்த் அமிர்தராஜும் இந்தியாவில் வருங்கால டேவிஸ் ஆட்டக்காரர்களை உருவாக்க வேண்டும் என்று ஆசைப் பட்டனர். இவரது ஆசைக்கு உறுதுணையாகவந்தவர் பிரிட்டானியா பிஸ்கெட் நிறுவனத்தின் சேர்மன் ஜே. எம். ராஜன் பிள்ளை. அமெரிக்காவில் இருவரும் சந்தித்து வருங்கால டென்னிஸ் வீரர்களை உருவாக்கும் திட்டத்துக்கு வித்திட்டனர். பிரிட்டானியா அமிர்தராஜ் டென்னிஸ் அறக்கட்டளையின் வாய்ப்பைப் பெற்று ஆந்திரப் பிரதேசம் ராபி பருக்கி, டெல்லி ரோஹித் ராஜ்பால், மகாராஷ்டிரம் ஜே. மெர்ச்செண்ட், கௌரவ் நடேகர், ஸ்ரீதர் பாபாலியா, தமிழகம் பால்ராஜ், பிரசாந்த் ஷெட்டி பிஜூஷ் வேணுகோபால் வருங்கால டென்னிஸ் நட்சத்திரங்களாகப் பயிற்சி பெறப் போகின்றனர். இந்திய 'கோச்' சந்திரசேகரும் அமெரிக்க



கோச்சஸ் டெட் முர்ரேயும் ப்ரெடரிக் ரோபிக்கரும் இந்த விளையும் பயிர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்காவில் பீட்டர் பூர்வாஷ் இண்டர்நேஷனல் நிறுவனம் தலைசிறந்த 'கோச்' களைச் சேவைக்காக வைத்திருக்கிறது. இந்த நிறுவனத்திலுள்ள இரு பயிற்சி நிபுணர்களும் இந்தியாவுக்கு வந்து எட்டு இளம் சிறுவர்களை சாம்பியன்களாக உருவாக்கப் பாடுபடுகிறார்கள். டென்னிஸ் இளம் கலைஞர்களுக்கு வீடியோ டேப் மூலம் டென்னிஸ் நுணுக்கங்களைக் கற்றுத் தருவார்கள். விளையாட்டுத் துறையில் மட்டும் இந்த எட்டு சிறுவர்களும் முன்னேறினால் போதுமா? இவர்களுக்குப் படிப்பும் வேண்டுமல்லவா?

சென்னை கிறிஸ்துவக் கல்லூரி உயர் நிலைப்பள்ளியில் இந்த எட்டு சிறுவர்களும் கற்பதோடு அங்கேயுள்ள அழகான டென்னிஸ் மைதானங்களில் பயிற்சியும் பெறப் போகிறார்கள். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! இவர்கள் தங்குவதற்கு போயஸ் கார்டனில் அழகான பங்களாவாசம். வார்டன் ஒருவர் இவர்களது தேவைகளைக் கவனிக்க இருக்கிறார். பயிற்சி முகாம் பள்ளிக்கு இவர்கள் அழைத்துச் செல்ல ஒரு வான் வாசலில் காத்திருக்கிறது.



இளம் டென்னிஸ் கலைஞர்களுக்கு ஒரு யோகம். அடிக்கடி ஆனந்தும் விஜயும் சென்னைக்கு வந்து இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதோடு இவர்களது முன்னேற்றத்தை நேரிடையாகவே பார்த்து அனுமானிப்பார்கள்! இளம் எட்டு டென்னிஸ் கலைஞர்களுக்குக் கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பம் இது! பிரிட்டானியா நிறுவனமும் அமெரிக்காவிலுள்ள நபிஸ்கோ நிறுவனமும் நிதி உதவி செய்வதோடு இந்தத்திட்டத்தை அமுல்படுத்துவதில் அக்கறை செலுத்துகிறார்கள். 1985 ஜனவரியிலிருந்து அமெரிக்காவிலுள்ள நபிஸ்கோ நிறுவனம் சர்வதேச டென்னிஸ் கிராண்ட் ப்ரீ சர்க்யூட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

"இந்த எட்டு இளம் டென்னிஸ் வீரர்களை எப்படி தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று விஜய் அமிர்தராஜிடம் கேட்டோம்.

"நம் தேசத்திலுள்ள இளம் டென்னிஸ் கலைஞர்கள் முப்பது பேரோடு நானும் ஆனந்தும் ஆடித் தர நிர்ணயம் செய்தோம். அந்த முப்பது இளம் சிறுவர்களில் இந்த எட்டு சிறுவர்களே எங்களுக்குத் தலை சிறந்தவர்களாகக் காணப்பட்டதால், அவர்களை தேர்ந்தெடுத்தோம்!" என்றார் விஜய் அமிர்தராஜ்.

கௌரவ் நடேகர்:

இவன் முன்னாள் சர்வதேச பாட்மிண்டன் ஆட்டக்காரரர் நாமன் நடேகரின் புதல்வன். இவனுக்கு வயது பதிமூன்று. நான்கு வருஷங்கள் இவன் தொடர்ந்து பம்பாய் இண்டர் ஸ்கூல் சாம்பியன் பட்டம் பெற்றவன். மகாராஷ்டிர சாம்பியன் விருதும் சூடியிருக்கிறுன். 1981, 1983, 1984 வருஷங்களில் தேசிய சப் ஜூனியர் விருதினைப் பெற்றவன்.

பினூஷ் வேணுகோபால்:

சென்னை டாக்டர் வேணுகோபாலின் புதல்வர். டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளியில் பயின்றவன். தமிழக டென்னிஸ் சிறுவர்களிடம் முதலிடம் வகிப்பவன். தேசிய அளவில் இவனுக்கு நான்காவது இடம். தேசியப் போட்டியில் செமிபைனல் ஆடிய தகுதி பெற்றவன். 1985—ஆம் ஆண்டு நடைபெற்ற தென்னிந்திய ...ம்பியன் போட்டியில் 'ரன்னர்' தகுதி பெற்றவன். இவனுக்கு வயது 14.

ரோஹித் ராஜ்பால்:

புதுதில்லியைச் சேர்ந்த இவன் 1983—ஆம் ஆண்டு சப்—ஜூனியர் தேசியப் போட்டியில் பங்கேற்றவன். இந்திய ஜிம்கானு டென்னிஸ் போட்டியில் இறுதி ஆட்டத்துக்கு வந்து பெருமை பெற்றவன். இவனுக்கு வயது 14.

பிரசாந்த் ஷெட்டி:

1983—ஆம் வருஷம் தமிழகத்தைச் சேர்ந்த இந்தச் சிறுவன் விவேகானந்தா நினைவு டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றவன். தென்னிந்திய டென்னிஸ் போட்டியில் இவன் செமி பைனல் வரை ஆடியவன். ஐ. ஐ. டி. யிலுள்ள சென்ட்ரல் பள்ளியில் பயின்றவன். டென்னிஸ் தவிர இவனுக்கு கிரிக்கெட், டேபிள் டென்னிஸ் செஸ்ஸில் விருப்பம் உண்டு. இவனுக்கு வயது 14.

ஜே. மெர்ச்செண்ட்:

மகாராஷ்டிரத்தில் பிறந்த மெர்ச்செண்ட் 1980—ஆம் வருஷத்தில் சப்—ஜூனியர் டென்னிஸ் போட்டியில் வெற்றிவாகைசூடியவன். 1985—ஆம் வருஷம் வங்காள ராஜ்ய டென்னிஸ் போட்டியில் செமி பைனல் வரை ஆடிய பெருமை இவனுக்கு உண்டு. இவனுக்குக் கிரிக்கெட்டிலும், கால்பந்தாட்டத்திலும் ஆசை உண்டு. இவனுக்கு வயது 14.

கே. பி. பால்ராஜ்:

தமிழகத்தில் டென்னிஸில் நான்காவது ராங்க் வகிக்கும் பால்ராஜ் 1982—ஆம் ஆண்டு டான்பாஸ்கோ டென்னிஸ்போட்டியில்அறிமுகமானவன். 1983—ஆம் ஆண்டில் இந்திய இளைஞர் அணியில் மூன்றுவது ராங்க் பெற்றவன். எம். ஸி. ஸி. டென்னிஸ் போட்டியில் ரன்னர் பதவி அடைந்திருக்கிறுன். ஜப்பானில் இந்தியக் குழுவுக்காக ஆடிய பெருமை இவனுக்கு உண்டு. வயது 14.

ஸ்ரீதர் பாபாலியா:

பம்பாயில் பிறந்த ஸ்ரீதர் பாபாலியா கர் ஜிம்கானு டென்னிஸ் பயிற்சியில் முன்னுக்கு வந்தவன். 1983—ஆம் ஆண்டு மேற்கு இந்தியா டென்னிஸ் போட்டியில் செமிபைனல் ஆடும் தகுதி பெற்றுன். இவனுக்கு வயது 14.

ரவி முகம்மது பரூக்கி:

ஹைதராபாத்தில்செயின்ட் ஜார்ஜ் கிராமர் உயர்நிலைப்பள்ளி மாணவன். இவரது சகோதரர்களும், மாமாவும் டென்னிஸ் ஆட்டக்காரர்கள். பம்பாயில் நடைபெற்ற மேற்கு இந்திய டென்னிஸ் போட்டியில் நடேகரைத் தோல்வியுற வைத்துப் புகழ் சம்பாதித்தவன். சப்—ஜூனியர் தேசிய சாம்பியன் பட்டம் பெற்றவன். அமெரிக்காவுக்கு இந்திய சிறுவர் டென்னிஸ் அணியில் சென்ற பெருமை உண்டு. இவனுக்கு வயது 13.

வருங்கால டேவிஸ் டென்னிஸ் நட்சத்திரங்களுக்கு நல்வாழ்த்துக்கள்!

குண்டுமணி



கோமகள்



ஏ.சோதி



ம.ப.ஜார்ஜ் எஸ் ராஜ்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



தி.தியாகராஜன்.



சி.என்.செல்வக்குமாரி



எஸ்.சதாசிவம்

பிருந்தாவனக் கவிஞர்கள்



எஸ்.விஜயா.

சென்ற இதழ் எழுத்தாளர்கள்



எஸ்.அசோக் பிரபு.

சென்ற இதழில் எழுதிய எழுத்தாளரின் புகைப்படங்களை வெளியிடும் போது, சில பெயர்கள் இடம் மாறி விட்டன. இதைச் சுட்டிக் காட்டி நூற்றுக்கு மேற்பட்டவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி.

இத்தவறு நேர்ந்தது குறித்து, சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் எங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இதோ இப்பக்கத்தில் அந்த எழுத்தாளர்களின் படங்களை மீண்டும் வெளியிட்டு அவர்களின் பெயர்களைச் சரியான முறையில் தந்துள்ளோம்.

—ஆசிரியர்.

புதிர்க் கதை-2

வழி கண்டுபிடித்தது எப்படி?

ஏ. சோதி

முன்னொரு காலத்தில் சோழ நாட்டை இளமாறன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் சிறந்த அறிஞன். அரண்மனையில் வேலைக்குச் சேர வருபவர்களை நன்கு சோதனை செய்வான். திருப்தி அடைந்த பிறகே அவர்களுக்கு வேலை கொடுப்பான்.

ஒரு நாள், அரசனின் நம்பிக்கைக்குரிய அமைச்சன் ஒருவன் திடீரென்று இறந்து விட்டான். அவனுக்குப் பதில் யாரை அமைச்சனாக்குவது என்று அரசன் சிந்தித்தான்.

"நான் வைக்கும் அறிவுப் போட்டிகளில் வெற்றி பெறுபவனை அமைச்சனாக்கி விட வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தான் அரசன்.

உடனே ஒரு வீரனை அழைத்து, "நம் நாட்டில் அமைச்சர் வேலை ஒன்று காலியாக உள்ளது. அரசர் வைக்கும் அறிவுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்க்கு அந்த வேலை தரப்படும். போட்டிகளில் யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம் என்று முரசறைந்து தெரிவி" என்றான்.

அந்த வீரனும் அப்படியே நாடெங்கும் தெரிவித்தான்.

இதைக் கேள்விப்பட்ட பத்து அறிஞர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள அரசனிடம் வந்தனர். ஒவ்வொருவரையும் தனித்தனி அறையில் தங்க வைத்தான் அரசன்.

ஒருவருக்குத் தெரியாமல் மற்றவரைத் தன் அறைக்கு வரவழைத்தான். எல்லோரிடமும் ஒரே கேள்வியைக் கேட்டான்.

"புகழ் பெற்ற நாடகக் குழு ஒன்று சில நாட்களுக்கு முன்னால் நம் நகரத்திற்குக் கூத்து நடத்த வந்திருந்தனர். நான் கூத்துப் பார்க்க ஆவலோடு சென்றேன். ஆனால் நான் போவதற்குள் கூத்து முடிந்துவிட்டது. கூத்துப் பார்த்து விட்டு வந்த இருவரை, 'கூத்து எப்படி இருந்தது?' என்று கேட்டேன். அதற்கு அவர்களில் ஒருவர், 'பாட்டு மிக நன்றாக இருந்தது' என்றார். மற்றவர் 'இல்லை! இல்லை! ஆட்டம்தான் நன்றாக இருந்தது' என்றார். அவர்கள் இருவரும் ஏன் அப்படிச் சொன்னார்கள்" என்று கேட்டான்.

"முதலாமவர் குருடர். அவரால் கூத்தைப் பார்க்க முடியவில்லை. அதனால் அவர் பாட்டு நன்றாக இருந்தது என்றார். இரண்டாமவரோ செவிடர். அவரால் கூத்தில் என்ன பேசினார்கள் என்பதைக் கேட்க முடியவில்லை. அதனால் ஆட்டம் நன்றாக இருந்தது என்று கூறினார்" என்ற சரியான பதிலை நான்கு அறிஞர்களும் கூறினர்.

இதைக் கேட்ட அரசன் மகிழ்ச்சி அடைந்தான். எப்படியோ அமைச்சனாகத் தகுதியுடைய நான்கு பேர் கிடைத்து விட்டனர். இவர்களுள் சிறந்த ஒருவரை எப்படித் தேர்ந்தெடுப்பது? என்று சிந்தித்தான்.

உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. வெற்றி பெற்ற நால்வரையும் பார்த்து, உங்கள் நால்வருக்கும் தனித்தனியே ஓர் ஓலை தருகிறேன். அதை நீங்கள் மதுரைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அங்

குள்ள நம் தூதரிடம் அந்த ஓலையைக் கொடுத்துப் பதில் வாங்கி வர வேண்டும்.

மதுரைக்கு செல்லும் வழியைக் கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நம் தலைநகரமாகிய தஞ்சையிலிருந்து வடக்கே போகும் சாலையில் நான்கு மைல் சென்றால் நான்கு சாலை சந்திக்கிற சந்திப்பு ஒன்று வரும். அதில் ஒரு சாலை மதுரைக்குப் போவது. இன்னொரு சாலை கருவூருக்குச் செல்வது. மற்றொன்று காஞ்சிக்குச் செல்வது. அங்கே உள்ள கைகாட்டி மரம் எந்த ஊருக்கு எப்படிச் செல்ல வேண்டும் என்று காட்டும். உங்களுக்கு வழி காட்ட அந்தக் கைகாட்டி மரத்தைத் தவிர அங்கே வேறு யாரும் இருக்க மாட்டார்கள். போய் வாருங்கள்'' என்றான் அரசன்.

இரண்டாவது போட்டி இவ்வளவு எளிதாக இருக்கும் என்று நால்வருமே எதிர்பார்க்கவில்லை. நால்வரும் குதிரையில் ஏறி தஞ்சை நெடுஞ்சாலை வழியாகப் பறந்தனர்.

நான்கு சாலை சந்திப்பு வந்தது. ஆனால் அங்கே கைகாட்டி மரம் யாராலோ வெட்டி வீழ்த்தப்பட்டுத் தரையில் கிடந்தது. இதைப் பார்த்த நால்வரும் திகைத்தனர். என்ன செய்வதென்று அவர்களுக்குப் புரியவில்லை.

ஒருவன் மட்டும் எப்படி வழி கண்டு பிடிப்பது என்ற சிந்தனையில் ஆழ்ந்தான். ஏனைய மூன்று பேரும் கலந்து பேசினார்கள்.

ஒருவர் சொன்னார், ''இங்குள்ள நான்கு சாலைகளில் ஒன்று நாம் தஞ்சையில் இருந்து வந்த வழி. எனவே ஏனைய மூன்று சாலைகளில் ஒன்றுதான் மதுரைக்குப் போகும் வழி. நாம் மூவரும் மூன்று வழியாகச் செல்வோம்.





யாருக்கு நல்வாய்ப்பிருக்கிறதோ அவர் மதுரையை அடைந்து பதில் ஓலை பெற்று வரட்டும்'' என்றார்.

மூவரும் அதை ஏற்றுக் கொண்டனர். மூன்று சாலை வழியே குதிரையில் பறந்தார்கள். மதுரை செல்லும் சாலை வழியே சென்ற அறிஞன் பதில் ஓலை பெற்றுத் திரும்பினான்.

இதற்கிடையில் சிந்தனையில் ஆழ்ந்திருந்த அறிஞன் ஏதோ நினைத்தவனாய் எழுந்தான். அந்த இடத்தை ஆராய்ச்சி செய்தான். பிறகு குதிரையில் ஏறி மதுரை செல்லும் சரியான வழியில் பறந்தான். அங்குள்ள தூதனிடம் பதில் ஓலை பெற்று வெற்றியுடன் திரும்பினான்.

ஓலையுடன் வந்த இருவரையும் அரசன் வரவேற்றான். ''எப்படி வழி கண்டு பிடித்தீர்கள்'' என்று கேட்டான்.

முதலாமவன் தான் குருட்டாம் போக்காக மதுரைக்கு வழி கண்டு பிடித்த கதையைக் கூறினான்.

இதைக் கேட்ட அரசன் கோபத்துடன், ''உன்னைப்போன்ற முட்டாள்களுக்கு இங்கே வேலை இல்லை போ'' என்று விரட்டி விட்டான்.

இரண்டாமவன் மதுரைக்கு வழி கண்டு பிடித்த முறைகளை விளக்கிச் சொன்னான். மகிழ்ந்த அரசன் அவனுக்கு அமைச்சன் வேலை கொடுத்தான்.

இரண்டாமவன் மதுரைக்கு வழி கண்டு பிடித்தது எப்படி?

விடை:

தரையில் கிடந்த கை காட்டி மரத்தை நேராக நிற்க வைத்தான். கை காட்டி மரத்தில் தன் திசையைக்காட்டும்பலகை, தான் வந்த சாலையைப் பார்க்கும்படி திருப்பினான். இப்பொழுது கை காட்டி மரம் மதுரைக்கு எந்த வழியாகச் செல்ல வேண்டும் என்று காட்டி நின்றது. அந்த வழியே சென்று மதுரையை அடைந்தான்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் பட்டியல்

2711 எஸ். கண்ணன், 95, வள்ளுவர் நகர், தர்மபுரி – 5.
2712 பி. கவிதா, D/o. என். பாலசுப்பிரமணியம், காஞ்சி – 606 702.
2713 பி. கே. ராஜ்குமார், 8, நேதாஜி தெரு, சென்னை – 15.
2714 ஜ. சித்கலா, 6, போரூர் தெரு, கிழக்குத் தாம்பரம், சென்னை – 59.
2715 எஸ். அசோக்குமார், 5, 6–வது மெயின் ரோடு, ஸ்ரீமுஷ்ணம் – 608 703.
2716 பி. சுந்தர்ராஜன், 97 மார்க்கெட் தெரு, மோட்சகுளம், விழுப்புரம் தாலுகா – 605 105.
2717 ந. கீதா, 17, ரயில்வே காலனி, காரைக்குடி – 3.
2718 ஆர். தேவராசு, S/o. ராமலிங்கம், மஞ்சம்பட்டி, சத்திரப்பட்டி P.O. மதுரை – 14.
2719 மா. மணிரோஜா, நேரு தேசிய மேல்நிலைப் பள்ளி வடக்கன்குளம், நெல்லை மாவட்டம் – 627 116.
2720 வி. சந்திரமௌலி, 27–M. சின்னமேட்டுப்பாளையம் 2வது தெரு, சென்னை – 19.
2721 பி. அசலக்குமரன், 64, மொட்டணம்பட்டி ரோடு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல் – 624 002.
2722 ச. அருள், S/o. எஸ். சக்திவேல், கேர்டேக்கர் குவார்ட்டர்ஸ், ரேஸ்கோர்ஸ் காலனி, மதுரை – 625 002
2723 கே. காந்திமதி, D/o. N.V.S. காந்தி, 106, கே. ஆர். கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 33.
2724 வி. ராஜன், 9, சோமசுந்தரதேவர் 3வது தெரு, அயன்புரம், சென்னை – 23.
2725 ஆர். பால்குருநாதன், 27, கோபால் லே அவுட், பொன்னைய ராஜபுரம், கோயம்புத்தூர் – 641 001.
2726 எஸ். மகேஷ், 69, கோபால சமுத்திரம், தெற்கு வீதி, மன்னார்குடி – 614 001.
2727 வி. பைரவ சுப்ரமணியன், 16, தோப்புத் தெரு, திருப்புத்தூர் – 623 211.
2728 வி. பாஸ்கர், 3 – C, ரஹிமான்கான் லேன், கான்வென்ட் தெரு, கடலூர் – 607001.
2729 ஆர். ரமாலக்ஷ்மி, 20, குப்பய்ய செட்டி தெரு, சென்னை – 33.
2730 எஸ். சுதா, 1, ராகவன் காலனி, ஜாபர்கான் பேட்டை, சென்னை – 95.
2731 எஸ். ஸ்ரீராம், 1 ராகவன் காலனி, ஜாபர்கான் பேட்டை, சென்னை – 95.
2732. எஸ். ஸ்ரீதர், 18, டாக்டர் சுப்பராயன் ரோடு, சேலம் – 636 001.
2733. எஸ். என். பிரசாத், 18, டாக்டர் சுப்பராயன் ரோடு, சேலம் – 1.
2734 ஏ. ராஜேந்திரன், 1, சரோஜினி தெரு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி – 642002
2735 ரா. பத்மநாபன், D2/J ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர்.
2736 எஸ். ஸ்ரீப்ரியா, 2, 12 – வது குறுக்குத் தெரு, லக்ஷ்மிபுரம், திருநின்றவூர் – 602024.
2737 பி. விஷ்ணுமூர்த்தி, 31, தெற்கு காலனி, கொமாரபாளையம், சேலம் மாவட்டம் – 638 183.
2738 எம். டி. வித்யாசாகர், 431/203, 3–வது தெரு, அண்ணா நகர், பொன்னம்மா பேட்டை, சேலம் – 3.
2739 எஸ். ரவி சங்கர், 224/B, ரயில்வே காலனி, ஈரோடு – 2.
2740 எஸ். ரமாமணி, 224/B, ரயில்வே காலனி, ஈரோடு – 2.
2741 ப. சிவக்குமார், S/o. த. பழனிச்சாமி, கான்டிராக்டர் மேச்சேரி சேலம் மாவட்டம்.
2742 எஸ். புவனேஸ்வரி, 61, மகாதானத் தெரு, திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம் – 612 104.
2743 கே. சுந்தரராஜன், C, 23, L.I.G. காலனி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி – 2.
2744 என். ஜெய கணேஷ், 350, எல். பிளாக், சிமிட்ரி ரோடு, சென்னை – 21.
2745 ஜி. சாய்கிருஷ்ணன், 2C, துரைசாமி கவுண்டர் தெரு, தர்மபுரி – 636 701.
2746 ஜே. சங்கர நாராயணன், 49, சாலைத் தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி 627001
2747 என். பிரேமலதா, பிளாட் நெம். 24, கிழக்கு P&T காலனி, நியூ்பேர்லேண்ட்ஸ், சேலம் – 636 004.
2748 ஜி. சாமுண்டீஸ்வரி, 69, திருமலைநாய்க்கன்பாளையம், பிரஸ் காலனி, கோயம்புத்தூர் – 641 019.
2749 கே. வி. முத்துச்சாமி, S/o. O.S. வெங்கடுசாமி, ராமசாமி முதலியார் வீதி, கவுந்தம்பாடி, பெரியார் மாவட்டம் – 638 455.
2750 ஜே. எஸ். மூர்த்தி, 17, நக்கீரர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 33.
2751 த. வாஞ்சிநாதன், 33C, பெங்கின்ஸ் ரோடு, திண்டுக்கல் – 1.

2752 எம். நாச்சியார், D/O. வி. முருகானந்தம, உதவியாசிரியர், சத்திரம் பாரதி தொடக்கப் பள்ளி, கடையம், நெல்லை மாவட்டம் – 627 415.

2753 எம். கலைவாணி, D/O. வி. முருகானந்தம், உதவியாசிரியர், சத்திரம் பாரதி தொடக்கப் பள்ளி, கடையம், நெல்லை மாவட்டம் – 627 415.

2754 எஸ். ராம்குமார், S/O. D. சுப்பராமன், கொண்டமநாயக்கன்பட்டி, ஆண்டிப் பட்டி, மதுரை மாவட்டம் – 626 512.

2755 எஸ். சாரதாதேவி, D/O. சுப்பராமன், கொண்டநாயக்கன்பட்டி, ஆண்டிப்பட்டி, மதுரை மாவட்டம் – 626 512.

2756 நா. வித்யா, 22, தெற்கு தெரு, சிங்கராயர் காலனி, மதுரை – 625 002.

2757 ச. அமிர்த கணேசன், 7/24 சி, சேது மாதவ நாயுடு காலனி, செட்டித் தெரு, புவனகிரி – 608 601.

2758 பி. ஸ்ரீநிவாசன், டி – 134, அண்ணா ரோடு, பிளாக் — 18; நெய்வேலி – 607803.

2759 ஜே. சங்கர் பிரகாஷ், 5, நீல வீராசாமி தெரு, சென்னை– 5.

2760 எஸ். விஜயராகவன், பிளாக் எண் 22, பிளாட் எண் 15C, P.W.D. குவார்ட்டர்ஸ், சென்னை– 78.

2761 பி. பாலாஜி, S/O பி. பத்மநாபன், கடைத்தெரு, ஸ்ரீமுஷ்ணம் – 608 703.

2762 ஆர். சத்திய சாரதாமணி, 31, தொல்காப்பியர் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை – 78.

2763 ...டல்விராஜ், AP. 663, 'H' பிளாக், 11 – வது தெரு, சென்னை – 40.

2764 ...கோமதி, AP 663, 'H' பிளாக், 11 –வது தெரு, சென்னை– 40.

2765 எஸ். ஸ்ரீதர், 26 சம்பந்தம் தெரு, சென்னை–28.

2766 பா. இராஜராஜன், 165/A, இராமசாமி தெரு, அவ்வை ஷண்முகம் சாலை, சென்னை – 36.

2767 வ. குமுதா கார்த்திகேயன், 'குமுதம்' சாந்திநகர், கோபிச்செட்டிபாளையம் 638452.

2768 வி. எஸ். ராஜன், சி 19, பழைய காலனி, சங்கர் நகர், நெல்லை மாவட்டம் – 627357.

2769 ச. ஆனந்தி, 30E, பழைய காலனி, சங்கர் நகர், நெல்லை மாவட்டம் – 627357.

2770 ந. சீனிவாசன், 32 – B, செட்டியார் ஸ்டோர், அரபிக்குளத் தெரு, திருச்சி – 2.

2771 இரா. வைத்தியநாதன், 28, முக்தி விநாயகர் கோவில் சன்னதி, மடப்புரம், திருவாரூர் – 610 002.

2772 வை. ஆறுமுகம், ஆபத்தாரணபுரம், 10, வடக்குத் தெரு, வடலூர், தெ. ஆ. மாவட்டம் – 607 303.

2773 ஏ. ரவி அருணாசலம், 9/3; விநாயகர் கோவில் தெரு, முடித்தநேந்தல், நெல்லை மாவட்டம்.

2774 நா. ஆனந்த் ஸ்ரீனிவாசன், 57, கோபால கொத்தன் தெரு, மதுரை – 625 001.

2775 எம். ஸ்டேன்லிபிட்டர், 12, பெருமாள் கோவில் தெரு, தல்லாகுளம், மதுரை 625002.

2776 ரி. எம். சிவசங்கரன், 19–I/1, பெரியண்ண தெரு, ஈரோடு – 638 001.

2777 எச். ஜெயராம், 174, 2 – வது தெரு, அக்ரஹாரம், பட்ட கோயில் தெரு, சேலம் – 1.

2778 வி. லிங்கராஜ், இராஜ கோபால் செட்டியார் தெரு, வொய்ட் ஹவுஸ் லேன், தேனி – 626 531.

2779 பா. கிருஷ்ணகுமார், 86, தெற்கு அக்ரஹாரம், பெரியகுளம் – 626501.

2780 கி. யசோதா, 28/32, ஒத்த சக்கர தெரு, கோயம்புத்தூர் – 641 001.

2781 எஸ். விஜய், பிளாட் எண் 46, 7–வது தெரு, டான்சி நகர், சென்னை– 42.

2782 எம். எம். கணேஷ், 49, அத்வைத ஆஸ்ரமம் ரோடு, பாலாஜி நகர், சேலம் – 4.

2783 எஸ். கார்த்திகேயன், 5, மீனாட்சி செட்டியார் தெரு, அருப்புக்கோட்டை – 626101.

2784 ஸ்ரீபரத், 3/60 காந்தியார் தெரு, பரமக்குடி, ராமநாதபுர மாவட்டம் – 623707.

2785 ஜெ. சித்ரா, 69/1, ஐ. சி. எப்., சென்னை– 38.

2786 எஸ். சுமதி, 34, தொல்காப்பியர் தெரு, எம். ஜி. ஆர். நகர், சென்னை– 78.

2787 கே. எஸ். ராஜா, பிளாக் D– 17, சுமன்த் அபார்ட்மெண்ட், தேவநாதன் தெரு, சென்னை– 28.

2788 அ. பிரேம் ராஜ், பிரேம் நிவாஸ், மேற்கு வீதி, சுகுணாபுரம், கோயம்புத்தூர்–641008.

2789 எம். கௌசல்யா, 13, 8 – வது குறுக்குத் தெரு, 3 – வது மெயின் ரோடு, சென்னை – 51.

2790 எம். கணேசன், 21, கோபால கிருஷ்ண சுவாமி கோயில் தெரு, கடைய நல்லூர் – 627 759.

2791 க. இராமகிருஷ்ணன், 17, கோபால கிருஷ்ண சுவாமி கோயில் தெரு, கடைய நல்லூர் – 627 759.


2792 ஆ. வடிவேல், 10, பாலகிருஷ்ணா தெரு, மயிலாப்பூர், சென்னை– 4.

2793 எம். ஸ்ரீவித்யா, 16, புஜங்கராவ் தெரு, சென்னை– 15.

2794 க. ரமேஷ், 20/48, பழைய மார்க்கெட் ரோடு, கோவை.

2795 ஜி. கோகுலகிருஷ்ணன், 20/48, பழைய மார்க்கெட் ரோடு, கோவை.


(இன்னும் வரும்)



ஷாஹ்ரயார்
என்ற அரசன்
தினம் ஒரு
பெண்ணை
மணந்து
மறு நாள்
அவளைச் சிரச்
சேதம் செய்து
விடுவான்.
இதைத் தடுக்க
விரும்பிய
மந்திரி மகள்
ஷாரஸாத்
அரசனை
மணந்து...
ஒரு கதை
சொல்லட்டுமா?
அராபிய
இரவில் கூறிய
அற்புதக்
கதை
அமைப்பு: ஆனந்தி
சித்திரம்: விநு
ஒவ்வொரு
இரவும்
கதை சொன்ன
ஷாரஸாத்
விடியும் சமயம்
ஒரு கதையைப்
பாதியில் நிறுத்தி
விடுவாள்.
மிச்சக்கதை
நாளை
சொல்கிறேன்..
முடிவை அறியும் ஆவலில் மன்னன்
அவளைக் கொல்லாமல் விட்டு
வைப்பான். இப்படியே ஆயிரம்
இரவுகளுக்குமேல் அற்புதக்கதைகள்
கூறியதில் அரசன் மகிழ்ந்து.....
அன்பே! உன்னை என் பட்டமகிஷி
யாக்குகிறேன். இனி எந்தப்
பெண்ணையுமே கொல்ல மாட்டேன்.
அராபிய
இரவுகளில்
ஷாரஸாத்
சொன்ன
கதைகளுள்
ஒன்று...
செம்படவன்
யூஸப் கடலில்
வலை வீசினான்...



கனமான பொருள் சிக்கியது...
இவ்வளவு சிறிய குடுவையா இத்தனை கனம் கனக்கிறது...!
இதில் புதையல் இருக்க வேண்டும்! தங்கக் காசுகளோ...?
யூஸப் குடுவையைத் திறக்க...
ஆ!
ஐயோ!
குடுவையிலிருந்து வெளிப்பட்ட பூதம் சொன்னது...
அல்லாவைப் பிரார்த்தித்துக் கொள். உன் முடிவுகாலம் நெருங்கி விட்டது!
யூஸப் தைரியத்தைத் திரட்டிக் கொண்டு...
உனக்கு விடுதலை தந்ததற்கு இது தான் பரிசா...?
அப்பனே கேள்...


... நான் அல்லாவின் தூதரான சுலைமானுக்குக் கட்டுப்படாமல் இருந்தேன்... தண்டித்து விட்டார்...
இந்தக் குடுவையில் அடைபட்டிரு!
ஒரு ஆள் குடுவையைக் கடலில் வீசிவிட்டான்...
அல்லாவுக்கும் சுலைமானுக்கும் எதிராக இருப்பவர்களின் கதி இதுதான்.
என்னை யாராவது காப்பாற்றினால் அவர்கள் காலடியில் செல்வங்களைக் குவிப்பேன்.
நூறு ஆண்டுகள் சென்றன. விடுதலை கிட்டவில்லை.
இனி என்னை யாராவது விடுவித்தால் அவனுடைய மூன்று விருப்பங்களை மட்டும் பூர்த்தி செய்வேன்.
மேலும் நூறு ஆண்டுகள் சென்றன. வெறுப்படைந்து...
இனி என்னை யார் வெளியேற்றினாலும் அவனைக் கொன்று விடுவேன்!
பூதத்தின் கதையைக் கேட்டவாறும் போதே யூஸப் தப்பிக்க வழி யோசித்து வந்தான்...
இப்போது புரிகிறதா, உன்னை ஏன் கொல்லப் போகிறேன் என்று...?
ம்... ஆனால் ஒரு சந்தேகம்...




இவ்வளவுபெரிய பூதம் நீ; எப்படி இந்தச் சின்னக் குடுவைக்குள் இருந்தாய்...?
முட்டாளே, நம்ப மாட்டாயா? இதோ பார்!
அசட்டு பூதம் மறுபடி குடுவைக்குள் புக...
பலே பேஷ்! நீ கெட்டிக் காரன்தான்...
சட்டென்று குடுவையை இறுக மூடி விட்டான் யூஸப்.
...இதிலேயே இரு! கடலிலேயே கிட!
என்னை மன்னித்து விடு! விடுதலை செய்!
குடுவையைக் கடலில் வீசப் போனான் யூஸப்.
...உனக்கு ஓர் அற்புதத்தைக் காட்டுகிறேன்... தயவு பண்ணு!...
அற்புதம் என்றதும் யூஸப் ஆவல் அடைந்தான். பூதத்தை விடுவிக்க...
கெட்டியாகப் பிடித்துக்கொள். ..வெகு தூரம் போக வேண்டும்.


ஒரு ஏரிக்கரையில் இறங்கியதும்...
ம்...வலை வீசு!
அடடே! பல விதவண்ணங்களில் மீன்கள்!
யூஸப் வலையை இழுத்த போது மஞ்சள், சிகப்பு, நீலம், பச்சை ஆகிய நாலு நிறங்களில் மீன்கள் சிக்கியிருந்தன.
சுல்தானிடம் மீன்களைக் காட்டு. ஒரு நாளைக்கு ஒரு தடவைக்கு மேல் வலை வீசாதே!
வீடு திரும்பி கண்ணாடி ஜாடியில் மீன்களைப் போட்டான் யூஸப்.
அடடா என்ன அழகு!
சுல்தானிடம் இந்த மீன்களைக் கொடுத்தால் பரிசு தருவார்.



சுல்தானைச் சந்தித்தான் யூஸப். அமைச்சரும் உடனிருந்தார்.
அற்புதம்! வெவ்வேறு நிற மீன்கள்!
ஆச்சர்ய மாயிருக்கே!
பணமுடிப்புத் தந்தார் மந்திரி. யூஸப் மகிழ்ந்தான்.
இந்தா நானூறு தினார்!
யூஸப் போனதும் அரசன் சேடியை அழைத்து.....
இந்த மீன்களைக் கொண்டு போய்ச் சமைக்கச் சொல்லு!
அரண்மனைச் சமையல்காரி மீன்களைப் பார்த்து வியந்த வாறே சமைக்க முற்பட்டாள்...
திடீரென்று அங்கு ஓர் அழகி தோன்றினாள்—மந்திரவாதி!
மந்திரக் கோலைச் சுழற்றினாள்...
மீன்களே மீன்களே வாக்குறுதி காப்போம்!



வாணலியில் வறுபட்டுக் கொண்டிருந்த மீன்கள் தலையைத் தூக்கி....
வந்தோம், இதோ வந்தோம், வாக்குறுதி காக்க வந்தோம்!
சமையல்காரி இந்த அதிசயத்தைப் பார்த்து மயங்கி விழுந்தாள். சுல்தானுக்கு உணவு எடுத்துச் செல்ல வந்த சேடி நீர் தெளித்து....
என்ன நடந்தது..? மீன்களைச் சமைத்து விட்டாயா? சுல்தான் பசியோடிருக்கிறார்!
ஐயோ! என்ன சொல்வேன்...! ஒரு அழகி... சூனியக்காரி... மந்திரக்கோல்... ஏதோ சொன்னாள்... மீன்கள் பேசின! மறைந்து போயின...!
சுல்தானுக்கு விவரம் தெரிய வந்ததும்...
மந்திரி! எனக்கு ரொம்ப ஏமாற்றம். அதே மாதிரி மீன்கள் மறுபடியும் கொண்டுவர ஏற்பாடு செய்யுங்கள்!


மந்திரி யூஸப்பை வரவழைத்து...
ஏய்! அந்த மீன்கள் ரொம்ப ருசி! சுல்தானுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அதே மாதிரி மறுபடி கொண்டு வா! பணம் தருகிறேன்.
ஆகட்டும் ஐயா.
யூஸப் மறுபடி மாயா ஜால ஏரிக்குப் போய் வலை வீசினான். மீண்டும் நான்கு மீன்கள் சிக்கின. மந்திரியிடம் தந்து மேலும் நானூறு தினார் பெற்றான்.
இம் முறை சுல்தான் சமையலறைக்கே வந்து விட்டார்!
என் எதிரிலேயே மீன்களைப் பொரித்து எடுங்கள்! என்ன ஆகிறது பார்த்து விடுகிறேன்!
திடீரென்று ஒரு மாக்கினையுடன் .. கறுப்பு மனிதன் தோன்றினான்!
சுல்தானும் மந்திரியும் பிரமிக்க...
மீன்களே! மீன்களே! வாக்குறுதி காப்போம்!
வந்தோம், வந்தோம்! வாக்குறுதி காக்க வந்தோம்.


கறுப்பு மனிதன் மரக்கிளை யால் வாணலியைத் தட்டி விட்டு மீன்களுடன் மாய மாய் மறைந்தான்...
மந்திரி! இந்த அற்புதத்தை ஆராய்ந்து பார்த்து விட வேண்டும்.
சித்தம் மன்னவா!
மந்திரி யூஸபியை அழைத்து வர சுல்தான் மாயா ஜால ஏரியைப் பார்க்க அவனுடன் கிளம்பிச் சென்றார்...
கவலையின்றிப் போய் வாருங்கள். நாட்டு நிர்வாகத்தை நன்கு கவனிக்கிறேன்.
மலைகளுக்கு மத்தியில் ஏரிக்கரையை அடைந்து கூடாரம் அடித்துத் தங்கினார்கள்.
ஆ! என்ன ரம்யமான சூழ்நிலை!
எல்லோரும் களைத்து உறங்கிய அந்த இரவில் மீன்கள் நட்சத்திரங்களாய் ஒளிசிந்த சுல்தான் மட்டும் ஏரிக் கரையோரு நடந்தார்.
அதிசய மீன்கள்! வரிசையாய் நின்று வழி காட்டுவது போல இருக்கிறதே!


இரு தினங்கள் நடந்து சோர்ந்த பிறகு தூரத்தில் ஒரு பெரிய மாளிகை...
அப்பாடா! அங்கு போய் ஓய்வெடுக்கலாம்...
மாளிகையை நெருங்கி...
யார் அங்கே, சுல்தான் வந்திருக்கிறேன்...!
பதிலில்லை... சுல்தான் மதில் வாசலைத் தாண்டி தோட்டத்தில் நுழைந்து...
மர்மமாயிருக்கே... யாரையும் காணோமே...
மாளிகையினுள் சென்றார் சுல்தான்.
ரத்தினம் இழைத்த கதவுகள்... பட்டுத் திரைச் சீலைகள்... அழகிய சிற்பங்கள்... ஆனால் வசிப்பவர் யாரும் இல்லை!
மாளிகையினுள் வெகுநேரம் சுற்றி அலைந்த பிறகு...
அட! இதோ ஒரு உயிர்ச் சிலை... இல்லை... சிலை இல்லை... மனிதனே தான்...!


இளவரசன்போல் தோன்றிய அம்மனிதன் அழ...
நீயார் அப்பா? உனக்கு என்ன துக்கம்?
சூனியக்காரியின் மாயாஜால உலகில் நான்தான் சிக்கினேன் என்றால் நீ வேறு எதற்கு வந்தாய்? யார் நீ?
நான் ஒரு வழிப்போக்கன். வண்ண மீன்கள் துள்ளி விளையாடும் ஏரியைப் பார்த்தேன். அதன் கரையோடு நடந்து வந்தேன்....
வழிப்போக்கரே...! உங்களைப் பார்த்தால் ஒரு மாமன்னன் போல் தோன்றுகிறது. என் கதையைச் சொல்கிறேன்...
இளைஞன் இடுப்பு வரை போர்த்தியிருந்த பட்டுத்துணியை விலக்கி...
இதோ பாருங்கள்!
ஐயோ இது என்ன பரிதாபம்! இந்தக் கதி உனக்கு எப்படி ஏற்பட்டது?
கருந்தீவுகள் என்ற தீவுக்கூட்டத்துக்கு அரசன் நான். ஒரு நாள்...



வேட்டையாடப் போனபோது ஒரு பேரழகியைக் கண்டு காதல் கொண்டு அவளை மணந்தேன்...
சில காலம் சென்று ஒரு உஷ்ணமான தினம்... சேடிகள் விசிறிக் கொண்டிருக்க...
நிம்மதியாய்த் தூங்குகிறார் மன்னர்.
தன் மனைவி ஒரு சூனியக்காரி என்பது தெரிந்தால் மனமுடைந்து போவார்.
நான் தொடர்ந்து தூங்குவது போலவே பாசாங்கு செய்ய அப்போது அரசி வந்தாள்...
சுல்தான் தூங்கி விட்டாரா?
ஆம் அரசி.
நல்லது, நான் என் மாளிகைக்குச் செல்கிறேன்... மன்னர் விழித்துக் கொண்டால் ரகசியமாய்ச் சொல்லி அனுப்புங்கள்!
சித்தம் மகாராணி.
அரசி சென்றதும் எழுந்து அமர்ந்த நான் சேடிகளை எச்சரித்து விட்டு...
வாய் திறக்கக் கூடாது! ஜாக்கிரதை! கொன்று விடுவேன்!


என் ராணியின் பின்னாலேயே பதுங்கிச் சென்றேன்... ஒரு பாழடைந்த மாளிகையை அவள் அணுகினாள்...
அவள் பின்னாலேயே மாளிகையினுள் நுழைந்த எனக்குப் பெரிய அதிர்ச்சி.
ஆ இவள் சூனியக்காரி தான்!
ஆத்திரத்தில் அவளை வெட்டி வீழ்த்த வாளை உருவினேன். சரேலென்று திரும்பிப் பார்த்தாள்...
உளவறிந்து என் ரகசியத்தைக் கண்டு பிடித்த உன்னைத் தண்டிக்கிறேன்!
அரசன் அவமைத் தன் கதையைக் கூறி முடித்தான்.
என் ராஜ்யத்தை மலைகளாகவும் மக்களை வண்ண மீன்களாகவும் மாற்றிவிட்டாள். நானும் இடுப்புக்குக் கீழ் கல்லானேன்!
அறமத்தைக் காப்பாற்றும் வழியை அவளிடமே தெரிந்து கொண்ட சுல்தான் தரையோடு தரையாக இருந்த ஒரு இரட்டைக் கதவைத் திறந்து...


சுரங்கப் பாதை வழியே இறங்கிச் சென்றார்.
அப்பா என்ன குளிருது!
சுரங்கப் பாதையின் முடிவில் ஒரு மந்திர வாதியையும் அவனது ஆளுகைக்கு உட்பட்டிருந்த அரசியையும் பார்த்தார் சலீதான்.
ஆல் ஹரிரி நஹாஸ்மார்? ஸஹார் ஆ ஜினி நஹாஜமால்!
கத்தியின் ஒரே வீச்சில் மந்திரவாதியை வீழ்த்தினார் சலீதான்.
ஐயோ!
ஆ!
மந்திரவாதியின் துணையின்றி அரசியால் கொடுமைகள் ஏதும் செய்ய முடியவில்லை. சக்தி இழந்தாள்.
என்னை மன்னியுங்கள்.
உடனே அரண்மனை மீதுள்ள சாபத்தை நீக்கு. இல்லாவிட்டால் கொன்று விடுவேன்!


அஹமத் இருக்குமிடம் வந்து அரசி மந்திர நீரைத் தெளித்ததும்...
நல்லவேளை சாயம் நீக்கும் சக்தியை இந்தச் சூனியக்காரி இழக்கவில்லை!
மீண்டும் முழு மனிதனானேன். சுல்தானுக்கு நன்றி!
என் தீவுகளை மலைகளாக்கினாயே... அவற்றை மீண்டும் தீவுகளாக்கு... மீன்களை மக்களாக்கு!
உம் சீக்கிரம்!
அடுத்த கணம் மூவரும் ஏரிக் கரையில் நிற்க... சூனியக்காரி சிரித்துக்கொண்டே ஏரியில் இறங்கி மறைந்தாள்...
மலைகள் மறைந்தன... நகரங்களும் கிராமங்களும் வீதிகளும் மக்களும் நிரம்பிய தீவுகள் தோன்றின...
ஆ! என் தலைநகரின் பிரதான கடைத்தெரு!
சுல்தானுடன் அஹமத் தன் அரண்மனையை அடைந்தான். விருந்துபசாரம் செய்தான்.
அஹமத்! மக்கள் போற்றும்படி ஆட்சி நடத்து.
தங்கள் நட்பு எனக்கு என்றும் இருக்க வேண்டும்.


படகில் ஏறிக்கொண்டே சுல்தான்...
போய் வருகிறேன்.
மீண்டும் சந்திப்போம்.
...தன் பரிவாரங்களும் யூஸுபும் கூடாரமடித்துத் தங்கியிருந்த இடத்தைத் தேடி வந்தடைந்தார்.
அரசே என்ன நடந்தது?
நடந்த அற்புதங்களைக் கூறினார் சுல்தான்.
யூஸப்! உன்னால் அரமைத்துக்கு- ஒரு நல்ல அரசனுக்கு- வாழ்வு கிடைத்தது..
...உன் மகளை என் மகனுக்கு மணம் செய்து கொண்டு உன்னைப் பிரபு வாக்குகிறேன்!
கோலாகலமாகத் திருமணம் நடந்தது. யூஸப் பூதத்தை நினைவு கூர்ந்து நன்றி செலுத்தினான்..
சுபம்



பாலுவுக்குப் பாராட்டா?

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதீ சுவாமிகள்

நல்லசிவம் அரையாண்டுத் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் முதல் மார்க்குகள் பெற்றிருந்தான். ஆனால், பாலசுப்பிரமணியன் அவனுக்கு அடுத்தபடியாகவே வெற்றி பெற்றிருந்தான். எல்லோரும் பாலசுப்பிரமணியத்தைப் பாராட்டினார்கள். வகுப்பிலிருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் அவனை, 'பாலு... பாலு...' என்று கூப்பிட்டுக்கொண்டே இருப்பார்கள்.

நல்லசிவத்திற்கு வருத்தமாக இருந்தது. கண்களில் நீர் ததும்பத் தன் தந்தையிடம் சென்றான். உடனே, தன்னை வேறு பள்ளியில் சேர்க்கும்படி வற்புறுத்தினான். அவனுடைய தந்தை அவனின் மனநிலையைப் புரிந்து கொண்டார். அவனை அழைத்துக் கொண்டு அவனுடைய தலைமையாசிரியரிடம் சென்று விஷயங்களைக் கூறினார்.

நல்லசிவத்தைப் போன்ற அதிக மதிப்பெண் பெறும் மாணவன் பள்ளியை விட்டுச் செல்வதைத் தலைமையாசிரியர் விரும்பவில்லை. மாலையில் பள்ளி விட்டதும் அவனுடைய வகுப்பு மாணவர்களும் அவ்வகுப்பினை எடுக்கும் ஆசிரியர்களும் சற்றுநேரம் இருக்கும்படி செய்தி சொல்லி அனுப்பினார்.

மாலையில் பள்ளி முடிந்ததும், தலைமையாசிரியர், நல்லசிவம், நல்லசிவத்தின் தந்தை ஆகியோர் அந்த வகுப்பிற்குள் நுழைந்தனர். மாணவர்களும் ஆசிரியர்களும் தலைமையாசிரியருக்கு வணக்கம் தெரிவிக்க எழுந்து நின்றனர். தலைமையாசிரியர் அமரச்சொன்னதும் அனைவரும் அமர்ந்தனர்.

தலைமையாசிரியர் நேரடியாகவே விஷயத்திற்கு வந்துவிட்டார். அவர் மாணவர்களைப் பார்த்து, "நீங்கள் ஏன் நல்லசிவத்தை வெறுக்கிறீர்கள்?" என்று கேட்டார். முன்பெஞ்சில் அமர்ந்திருந்த மீனாட்சி சுந்தரம் எழுந்து, "நாங்கள் எக்காலத்திலும் நல்லசிவத்தை வெறுத்ததில்லை," என்றான். உடனே தலைமையாசிரியர், "அவன் உங்கள் வகுப்பிலேயே முதல் மார்க்கு வாங்கியும் ஏன் அவனைப் பாராட்டவில்லை? அவனுக்கு அடுத்து மார்க் வாங்கிய பாலுவை ஏன் பாராட்டுகிறீர்கள்?" என்று கேட்டார்.

ஒருவரும் பதில் சொல்லவில்லை. தலைமையாசிரியர் இரண்டொரு மாணவர்களைக் கேட்டும் அவர்கள் பதில் சொல்லாமல் தலை குனிந்தனர். பிறகு,

தலைமையாசிரியர் அந்த வகுப்பினுடைய ஆசிரியரான முத்துக்கிருஷ்ணனைக் காரணம் கேட்டார்.

அதற்கு முத்துக்கிருஷ்ணன், "சார்! நல்லசிவம் படிப்பில் வல்லவன்தான். ஆனால், தான் மட்டுமே எப்பொழுதும் முதலில் நிற்க வேண்டும் என்று விரும்புவான். இந்த வகுப்பிற்கு வரும் படிப்புக் குறைந்த மாணவர்கள் அவனிடம் சென்று பாடத்தில் சந்தேகம் கேட்டால், சொல்லித் தர மாட்டான். தன்னை விட அடுத்தவன், அதிக மார்க் வாங்கி விட்டால் பொறுக்க மாட்டான். ஆனால், பாலு அப்படி இல்லை. வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் உறுதியாக வெற்றி பெற வேண்டும் என்று விரும்புவான். ஒருவனுக்கு மார்க் குறைந்தாலும், தான் வலியச் சென்று சொல்லித் தருவான். மாலையில் வகுப்பு விட்டவுடன் வீட்டுக் கணக்குகளை வகுப்பில் போட அனைவருக்கும் உதவி செய்வான். பாடம் புரிந்து கொள்ள உதவி செய்வானே அன்றி, பார்த்து எழுத விட மாட்டான்!-மற்றவர்களுக்கு உதவி செய்கிற காரணத்தால் அவன் இரண்டாவது இடம்பெற்றாலும் மாணவர்கள் அவனிடம் மிக அன்பாக இருப்பார்கள்; பாராட்டுகிறார்கள். ஆனால், ஆசிரியர்களோ மாணவர்களோ நல்லசிவத்தைவெறுத்துப் பேசியதில்லை. பாராட்டும் அம்சம் அதாவது வகுப்பில் முதலானவன் என்ற ஒன்றைத் தவிர வேறு ஏதும் இல்லாததால் பாராட்டவில்லை" என்றார்.

தலைமையாசிரியர் நல்லசிவத்தைப் பார்த்தார்., எல்லாவற்றையும் ஒப்புக் கொள்வதைப் போல், அவன் தலை குனிந்து கொண்டான். பிறகு, தலைமையாசிரியர் பேசத் தொடங்கினார்:

"நான் சில கருத்துக்களைக் கூறப் போகிறேன். அவை நல்லசிவத்திற்கு மட்டுமல்ல; உங்களுக்கும் சேர்த்துத் தான்."

"பெருமை என்பது புகழத்தக்க காரியங்களைச் செய்யும் பொழுது தான் வரும். புகழ் வரும் செயல்கள் சுயநலத்தோடு சேருமானால் அவற்றை யாரும் பாராட்ட மாட்டார்கள்."

"ஒருவர், எப்படிப்பட்ட புகழ் தரும் செயலைச் செய்தாலும் அது அனைவருக்கும் பொதுவானது. அந்தப் புகழான செயலில் வரும் பெருமை எல்லோருக்கும் சேரும். ஒருவன் தான் மட்டும் பெருமை பெற வேண்டும் என்று கருதி நடந்தால், பிறருடைய நியாயமான பெருமையை மட்டந்தட்டுவதாக அமையும். ஓர் ஊரில் எல்லோரும் ஏழைகளாக இருந்து ஒருவர் மட்டும் பணக்காரராக இருந்து, பெரிய பங்களாவில் வாழ்வாராயின் அது நியாயமாக இருக்காது. ஒருவரும் அவரைப் பாராட்ட மாட்டார்கள். அவரும் நிம்மதியாக இருக்க முடியாது. எனவே உங்களில் ஒவ்வொருவரும் அனைவரும் பெருமை அடைவதற்கு உழைக்கவேண்டும். அது உங்களுடைய அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும்.

"சிறு விஷயங்களைக்கூட நாம் கவனமாகப் பார்க்கவேண்டும். நாம் முழுமை அடைவதற்கு அவை உதவும். நன்றாகப் படித்தால் மட்டும் போதாது. தேர்வு எழுதும் போது பேனா ஒத்துழைக்க வேண்டும். தேர்வுக்கு முதல் நாளே பேனாவைச் சுத்தப்படுத்தித் தயாராக இருக்க வேண்டும். இதுபோலப் பல சிறிய விஷயங்கள் நாம் முழுமனிதனாக வளர உதவி செய்யும்.

ஆனால், சின்ன விஷயங்கள்தான் முழுமை என்று நினைக்கக் கூடாது. கடவுள் நம்மீது கொண்டுள்ள அருளை, மழையும் காற்றும் சூரியனும் நமக்குக் காட்டுகின்றன. நாம் மழையை மட்டும் கடவுள் என்று எண்ணக்கூடாது. மழை இல்லாவிட்டால் நாம் உயிரோடு இருக்க முடியாது. அதற்காக மழையே கடவுளாக முடியுமா? கடவுள் மிக உயர்ந்த முழுப்பொருள். எனவே பெருமை என்பது முழுமையான பொருள். அது எல்லோருக்கும் பொதுவானது. இதை அனைவரும் அடைவதே உங்களுடைய நோக்கமாக இருக்க வேண்டும்."

தலைமையாசிரியர் பேச்சை முடித்தார். நல்லசிவத்தின் கண்ணில் நீர் தேங்கியது. அது அவன் நல்லவன் ஆகத் தொடங்கியதைக் காட்டியது.

திருக்குறள்:

பெருமை உடையவர் ஆற்றுவார் —
ஆற்றின்
அருமை உடைய செயல்.

ஒரு பூனை புலியாகிறது



டாக்டர் பூவண்ணன்

8. தீ செய்த உதவி

"அறிவே வேலை செய்" என்று வேண்டியபடி சேரன் தான் இருந்த அறையை நன்றாகப் பார்த்தான்.

அது சின்ன அறை. ஆனால் ஒழுங்கான அறை. இரண்டு சன்னல்கள் இருந்தன. சன்னலில் அழகான திரைகள் (ஸ்கிரீன்) தொங்கின. சேரன் திரைகளை விலக்கிச் சன்னல் கதவுகளின் கொக்கிகளை நீக்கிக் கதவைத் திறக்க முயன்றான். முடியவில்லை. கதவுகளின் மறுபுறம், அவை திறக்காதபடி தடுப்புக்கட்டை இருக்கும் போலும்.

சேரன் மேலும் அறையை ஆராய்ந்தான். அறை வாசலில், கதவு முழுவதையும் மறைக்கும் திரை, இரு கூறாகப் பிரிக்கப்பட்டு, இரண்டும் கட்டப்பட்டு ஓரத்தில் திரண்டு தொங்கின. சுவரில் அவன் முன்பே பார்த்த திருமுருகன் காலண்டர். அறையின் ஒரு மூலையில் சிறிய மேசை — அறையில்லாத மேசை. அதன் எதிரே ஒற்றை நாற்காலி.

அவ்வளவுதான்!

அவ்வளவுதானா?

சேரன் கண்களைச் சுழலவிட்டான்.

மேசையின் கீழே ஒரு சிவப்பு நிற பிளாஸ்டிக் கூடை.

சேரன் அந்தக் கூடையை எடுத்துப் பார்த்தான். அதில் காலியான ஒரு சிகரெட் பாக்கெட் இருந்தது. அதே போல ஒரு தீப்பெட்டி. அதுவும் காலிதான். பெட்டியில் குச்சிகள் இல்லை.

சேரன் மீண்டும் அறை முழுவதையும் நோட்டமிட்டான்.

ஒரு காலண்டர், சன்னல் திரைகள், கதவின் திரை, மேசை, நாற்காலி, பிளாஸ்டிக் குப்பைக் கூடை, அதில் காலியான சிகரெட் பாக்கெட்டும் தீப்பெட்டியும்.

இவற்றில் எதைக் கொண்டு தப்பித்துச் செல்வது?

"அறிவே வேலை செய்."

பிரார்த்தனை தொடர்ந்தது.

திடீரென்று அவன் அறிவு வேலை செய்தது!

"அறையில் உள்ள திரைகளைப் போட்டு எரித்துத் தீயை உண்டாக்கி, அதன் மூலம் குழப்பம் உண்டாக்கித் தப்பித்துக் கொள்ளலாம்.

மலர்ந்தது அவன் முகம்.

மறுநிமிடமே அது குவிந்தது.

தீ உண்டாக்கத் தீக்குச்சி வேண்டுமே! தீப்பெட்டி காலியாக அல்லவா இருக்கிறது.

சேரன் மீண்டும் சிந்தித்தான்.

தீப்பெட்டியை அவன் திறந்து பார்த்த போது அது எளிதாகத் திறக்கவில்லை. கொஞ்சம் ஆற்றலைச் செலுத்தி, அழுத்தித்தான் திறந்தான். ஏன் இந்த இறுக்கம்?

சேரன் காலித் தீப்பெட்டியைக்

கையில் எடுத்தான். மெதுவாகத் திறந்தான். முன்போலவே அழுத்தித்தான் திறக்க வேண்டியது இருந்தது. பாதி திறந்து விட்டு ஏன் அந்த இறுக்கம் என்று ஆராய்ந்தான்.

தீப்பெட்டியின் வெளிக்கூடுக்கும், உள்ளே நுழைக்கும் குச்சிகள் வைக்கப்படும் அறைக்கும் இடையில் ஒரு தீக்குச்சி இருப்பதைக் கண்டான். சில தீப்பெட்டிகளின் உள் அறை இறுக்கமாக இல்லாமல் இருந்தால், அந்த அறை முழுவதும் வெளிவந்து குச்சிகளைக் கீழே கொட்டிவிடும். அந்தப் பெட்டிக்கு இறுக்கம் தர, அறையின் பக்கத்தில் ஒரு தீக்குச்சியை வைத்து, அப்படியே சொருகினால் இறுக்கம் வரும். அந்தக் காலிப் பெட்டியில், பக்கவாட்டில் அப்படி ஒரு தீக்குச்சி இருந்தது. தீக்குச்சியின் வெள்ளைப் பகுதி தெரிந்தது.

சேரன் பெட்டியை மெதுவாகத் திறந்து, முழுமையாகத் தள்ளினான். வெளிக்கூடும், உள் அறையும் தனித் தனியே பிரிந்த போது இரண்டுக்கும் இடையே சிக்கியிருந்த அந்தத் தீக்குச்சி கீழே விழுந்தது.

''கடவுளே உதவி செய்!'' என்று வேண்டியபடி கீழே விழுந்த தீக்குச்சியைப் பார்த்தான். அதன் ஒரு முனை சிவப்பு நிறத்தில் இருந்தது. உடனே சேரன் அதை ஆவலோடு எடுத்துக் கொண்டான்.

தீக்குச்சி கிடைத்துவிட்டது. அவன் அறிவு தெரிவித்தபடி அறைக்குள்ளே தீயை உண்டாக்க வேண்டும்.

சேரன் உள்ளே நாற்காலியைப் போட்டு அதன் மீது ஏறி, சன்னல் திரைகளையும், கதவின் பெரிய திரையையும் கழற்றினான்.

அறையின் நடுவே கதவின் பெரிய திரையை ஒரு கூம்பு போல இருக்குமாறு வைத்தான். தீப்பெட்டியையும் தீக்குச்சியையும் எடுத்துக் கொண்டான்.

ஒரே ஒரு தீக்குச்சியால் துணியைக் கொளுத்த வேண்டும், முடியுமா? கொளுத்துவதற்கு முன் தீக்குச்சி அணைந்துவிட்டால்?

சேரன் மீண்டும் சிந்தித்தான். அறையைச் சுற்றிப் பார்வையைச் சுழல விட்டான். காலண்டரில் இருந்த திருமுருகன் குறுநகையோடு, 'அஞ்சாதே' என்று அபயகரம் காட்டிக் கொண்டிருந்தான்.

உடனே அவன் அறிவு மின்னலாய் வேலை செய்தது.

''முருகா, நீ இருக்கும் போது நான் அஞ்ச மாட்டேன்'' என்று கூறிக் கொண்டே எழுந்து காலண்டர் அருகே சென்றான், சேரன். நவம்பர் 13 காட்டிய காலண்டரை, ஒரு நிமிடத்தில் டிசம்பர் 10 காட்டச் செய்தான்.

அவன் கிழித்த மெல்லிய தேதித் தாள்களை, கூம்பாக நின்ற திரையின் அருகே குவித்தான். பிறகு தீப்பெட்டியையும் தீக்குச்சியையும் எடுத்துக் கொண்டான்.

''முருகா!''

வாய் சொன்னது. கை தீக்குச்சியைத் தீப்பெட்டி மீது உரசியது.

'சரக்.'

தீக்குச்சி பற்றி எரிந்தது. அதைத் தேதித் தாள்களில் பொருத்தினான். அவை எரிந்தன. அருகே இருந்த திரையும் தீக்கு இரையாக, செந்நிற ஒளி மேலோங்கி எழுந்தது.

சேரன், சன்னல் திரைகள் இரண்டையும் இரண்டு கைகளில் எடுத்துக் கொண்டான். அவற்றைத் தீயிலே

யாரைப் பார்க்கணும்?

டாக்டர்: நீங்க இன்னும் பத்து நாள் தான் உயிரோட இருப்பீங்க. அதுக்குள்ளே யாரை யாவது நீங்க பார்க்கணுமா?

நோயாளி: ஆமாம். இன்னொரு நல்ல டாக்டரை!

—ஏ. வி. தேவன்.



பொருத்தி எரியச் செய்தான். அதன் பிறகுதான், ''ஐயோ! காப்பாத்து! தீ! தீ! அறை தீப்பிடிச்சு எரியுதே!'' என்று கத்தினான். கத்தியபடி நகர்ந்து அறைக்குப் பக்கத்தில் சுவரை ஒட்டி நின்று கொண்டான். அவன் கைகளில் இருந்த திரைகள் எரிந்து கொண்டிருந்தன.

வெளியேயிருந்து, 'தீத்தீ' என்ற குரல் கேட்டு உள்ளே வந்த மாது — அதுதான் எருமை மாடு அறைக்குள்ளே தீயைப்பார்த்ததும்பதறினான். உடனே சாவியை எடுத்தான்; பூட்டில் பொருத்தினான்; திறந்தான்! பூட்டைச் சாவியுடன் கீழே போட்டுவிட்டு அறைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

கதவு திறந்து, எருமை மாடு உள்ளே வந்ததும், சேரன், தன் கையில் எரிந்து கொண்டிருந்த திரைகளை மின்னல் வேகத்தில் அவன் மீது எறிந்தான். ஒன்று மேல் துண்டு போல் அவன் தோளில் விழுந்தது; மற்றொன்று அவன் தலையில் விழுந்து முகத்தை மறைத்தது. இரண்டு திரைகளின் தீயும் அவன் முடியை, உடையை, உடலைச் சுட்டன. அவன், 'ஐயோ! அம்மா' என்று அலறுவதற்கு முன்னர் சேரன் அறையிலிருந்து வெளியே வந்தான். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில், அந்த அறைக் கதவை மூடித் தாளிட்டான். அவன் ஓட முயன்ற போது, எருமை மாடு கீழே போட்ட பூட்டு அவன் காலில் இடறியது.

சேரன் சாவியுடன் இருந்த அந்தப் பூட்டை எடுத்து, அறைக் கதவில் மாட்டிப் பூட்டினான். சாவியைக் கையில் எடுத்துக் கொண்டு அவன் வெளியே ஓடிய போதும் அவன் காதில், ''ஐயோ அம்மா! உடம்பு எரியுதே!'' என்று எருமை மாடு அலறுவது கேட்டுக் கொண்டே இருந்தது.

தீ செய்த உதவியால் தப்பி, வீட்டின் வாசலை அடைந்த சேரன், சட்டென்று நின்றான். வெளி வாசல் கதவைநிதானமாக மூடினான். பிறகு தெருவில் இறங்கினான்.

அவன் மனம் ஓட வேண்டும் என்று சொல்லியது. ஓட்டம் பிறர் கவனத்தைக் கவரும் என்று அறிவு எச்சரித்தது. சேரன் நடந்தான். அப்படியும் ஓட்டத்தின் பரபரப்பு அவன் நடையில் ஒட்டிக் கொண்டது.

அந்தத் தெருவில் கிழக்கு நோக்கி நடந்த சேரன், பேருந்து செல்லும் சாலையைக் கண்டு இடப்புறத்தில் திரும்பி நடந்தான். திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தான். கொஞ்ச தூரத்தில் ஒரு மருந்துக் கடை இருந்தது. அதன் முன்னே தெரிந்த மேசையின் மேல் சிவப்பு நிறத்துத் தொலைபேசி பளிச்சென்று அவன் கண்ணில் பட்டது.

சேரன் நின்றான். மருந்துக் கடையின் படிகளில் ஏறினான். மேசைக்குப் பின்னே சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருந்தவரிடம், ''சார்! ஒருபோன் பண்ணிக்கலாமுங்களா? கொஞ்சம் அர்ஜெண்ட்'' என்றான்.

சுழல் நாற்காலிக்காரர், ''பண்ணிக்கலாம், ஒரு கால் ஒரு ரூபாய். அர்ஜண்ட் ஆனாலும் சரி! ஆர்டினரி ஆனாலும் சரி'' என்று ஜோக் அடித்தார்.

''சரிங்க,'' என்றபடி சேரன் தொலைபேசியின் ரிசீவரை கையில் எடுத்துக் கொண்டான். மறுகையின்

சுட்டு விரலால், அவன் நினைவில்



சன்மானம்

''நீ அனுப்பி வைத்த பிள்ளையார் கதைக்கு என்ன சன்மானம் கொடுத்தாங்க?''

''கொழுக்கட்டை.''

—எம். அகமதுசேக் (8939).

நின்ற 693641 என்னும் எண்ணைச் சுழற்றினன். மறுமுனையில் 'டிரிங் டிரிங்' கேட்டது.

சேரன், ''முருகா! முருகா!'' என்று வேண்டிக் கொண்டான். ''முருகா! ஹனிமேன் அங்கே இருக்கச் செய், ''முருகா'' — வேண்டுதல் தொடர்ந்தது.

நான்கு ஜோடி டிரிங்குக்குப் பிறகு, அது டக்கென்று நின்றது. சேரனின் 'ஹலோ'வுக்கு, ''யெஸ்! உங்களுக்கு யார் வேணும்?'' என்ற குரல் பதில் அளித்தது.

அந்தக்குரல்ஹனிமேன் குரல்தான்! அவனுக்கு நன்ருக நினைவிருந்தது. இப்போது அந்தக் குரல் உண்மையில் தேன் குரலாக இனித்தது.

''சார், நீங்க ஹனிமேன் தானே?''

''யெஸ்! நீ சேரன்! சேரா, உன்னை யாரோ கடத்திட்டுப் போனுங்களாமே! தப்பிச்சுட்டியா?''

''ஆமாம் சார்!''

''இப்ப நீ எங்கிருந்து பேசறே?''

அவன் அந்தத் தெருவில் நடந்து வந்த போதே சில கடைகளின் பெயர்ப் பலகையைப் படித்துக் கொண்டு வந்தான். அதனுல், ''சாமித்தெரு—சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து பேசறேன் சார். நீங்க இங்க வர்ற வரைக்கும் நான் காத்திருந்தா, முன்னுடி மாதிரி நடந்துடலாம், சார்.''

மறுமுனையில்ஒருநொடி மௌனம்.

பிறகு, ''சேரா, பக்கத்திலே ஆட்டோ, டாக்ஸி ஏதாவது நிற்குதா?'' என்று ஹனிமேன் குரல் கேட்டது.

சேரன் நிமிர்ந்து வெளியே பார்த்தான். எதிர்ப்புறத்தில் ஒரு டாக்ஸி நிற்பது தெரிந்தது.

''ஒரு டாக்ஸி இருக்குதுங்க சார்.''

''சேரா! அந்த டாக்ஸி டிரைவரை ஒரு நிமிஷம் இந்தப் போனில் பேசச் சொல்லு. நீ வர வேண்டிய அட்ரஸை டிரைவரிடம் நான் சொல்றேன்.''

சேரன் ரிஸீவரை டேபிள் மேலே வைத்தான். ''சார், ஒரு நொடியிலே வர்றேன்'' என்று கூறிவிட்டு, அவர் பதிலுக்குக் காத்திராமல், தெருவில் இறங்கி, டாக்ஸியிடம் ஓடினுன்.

''டிரைவர்.''

டிரைவர் ஓர் இளைஞன். ஏறிட்டுப் பார்த்து, ''எங்கே போகணும்?'' என்று கேட்டான்.

''டிரைவர் சார்! நான் ஊருக்குப் புதுசு. எங்க மாமா போன்லே நான் வர வேண்டிய இடத்தைச் சொல்ருர். தயவு செஞ்சு நீங்க வந்து கேட்டுக்கோங்கோ, ப்ளீஸ்...''

சேரனது குரலின் இனிமையும் பணிவும் அவனை எழுந்து வந்து போனில் பேசச் செய்தது.

''நான் டாக்ஸி டிரைவர் பேசறேன்.''

''டிரைவர்! உங்களைக் கூப்பிட்ட பையனை டாக்ஸியில் ஏத்திக்கிட்டு நான் சொல்ற அட்ரஸுக்கு வா! மீட்டருக்கு மேலே நூறு ரூபாய் தரேன்.''

''நூறு ரூபாயா?''

''ஆமாம் ஒன் ஹண்ட்ரட் ருபீஸ்.''

''அட்ரஸ் சொல்லுங்க.''

ஹனிமேன் அட்ரஸைச் சொன்னுன்.

''சரி! அழைச்சுட்டு வரேன்.''

''டிரைவர், உன் டாக்ஸி நம்பர் என்ன?''



''எம். டி. யு. டபுள் ஃபோர் டபுள் ஃபைவ்'' என்றுதயங்காதுசொன்ஞன் டிரைவர்.

சேரன் போனை வாங்கிப்பேசினுன். ''டாக்ஸியில் வந்துடறேன் சார்'' என்றுகூறிவிட்டுப்போனைவைத்தான். பாக்கெட்டிலிருந்து இரண்டு ரூபாய் நோட்டைஎடுத்துமேசைமேல்வைத்து. ''தாங்க்ஸ் சார்'' என்ருன்.

''ரெண்டு ரூபாயா? ஒரு ரூபாய் எங்கிட்ட இல்லே. ஒரு ரூபாய் இருந்தா கொடு'' என்ருர் சுழல் நாற்காலிக்காரர்.

''மீதி ஒரு ரூபாய் அப்புறம் வந்து வாங்கிக் கொள்கிறேன் சார்'' என்று கூறிவிட்டு சேரன் கடையிலிருந்து இறங்கிஞன். டிரைவர் அதற்கு முன்னரே இறங்கிவிட்டான்.



டிரைவர் டாக்ஸியில் ஏறி, கதவைத் திறந்து விட்டான். சேரன், டாக்ஸியின் முன்புறமாகச் சுற்றிக் கொண்டு போய் டாக்ஸியில் ஏறினான். அப்படி முன்புறமாகச் சென்றபோதே டாக்ஸியின் நம்பர், எம்.டி.யு.4455 என்பதைப் பார்த்துக் கொண்டதால், ஒரு திருப்தி. அடுத்த நிமிடம் டாக்ஸி ஓடியது.

அரை மணி நேரத்தில் ஹனிமேன் அவனைச் சந்தித்தான். டிரைவருக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டு, சேரனைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

ஹனிமேன் சேரனைப் பார்த்தான். அவன் எதிர்பார்த்ததைக் காட்டிலும் வயதிலே குறைந்தவன். மெலிந்தவன். ஆனால் முகத்திலே அறிவும் திறமையும் தெரிந்தன. ''சேரா! ஏதாவது சாப்பிடுகிறாயா?'' என்று கேட்டான், ஹனிமேன்.

காலையில் வேலூரில் சாப்பிட்ட சேரன் பிறகு ஒன்றுமே சாப்பிடவில்லை. வயிறு 'பசி! பசி!' என்று கூவியது. என்றாலும், ''சார், நான் முதலில் சொல்ல வேண்டியதைச் சொல்லிடறேன். பிறகு சாப்பிடறேன்'' என்றான், சேரன்.

ஹனிமேன் அப்படியும் அறைக்கு வெளியே போய்ச் சேரனுக்குச் சாப்பிட டிபன் கொண்டு வரச் சொல்லி விட்டு மீண்டும் அறைக்குள் நுழைந்தான்.

சேரன், விஜயின் பிறந்த நாளுக்காக ஊட்டிக்குச் சென்றது முதல் அன்று அங்கு வந்து சேர்ந்தது வரை நடந்த அனைத்தையும் சொன்னான். ஹனிமேன், ஏழு உலக அதிசயங்களையும் ஒன்றாகக் கண்டது போல் வியந்து போனான். உளவுத் துறையில் பணி செய்ய வருகிறவர்களுக்குப் பயிற்சி தருகிறார்கள். பயிற்சியைப் பெற்ற ஒரு சிறந்த வீரனின் அஞ்சாமை — ஆற்றல் — அறிவுத் திறம் ஆகிய அனைத்தும் இந்தச் சிறுவனிடம் இருப்பதைக் கண்டு ஹனிமேனின் உள்ளம் திகைத்தது; உடல் சிலிர்த்தது! சேரனைப் போன்ற தேசப்பற்றுள்ள வீரச் சிறுவர்கள் சில நூறு பேர் இருந்தால் போதும்! எந்த வல்லரசும் இந்தியாவைக் கண்டு வணங்கும் — ஹனிமேன் நினைத்தான்.

சாப்பிடத் தொடங்கும் முன், ''சார், என் டாலரை உடனே கண்டுபிடிக்கணும்'' என்று கூறினான்.

''ஆமாம் சேரா! காக்கர்ஸ் ஸ்பானியல் விலை உயர்ந்த — அழகான நாய். அதை யார் பிடித்துக்கொண்டு போனார்களோ? விசாரிக்க வேண்டும்'' •

''இன்றே கண்டுபிடித்தால்தானே, நாளை நடைபெறவிருக்கும் கொலையை நிறுத்தலாம்.''

சேரன் சொன்னதும் ஹனிமேனின் மனம் நடுங்கியது. நாளைய கொலையைத் தடுக்க வேண்டும். முதலில் சேரனின் நாயைக் கண்டுபிடிக்க வேண்டும்.

''சேரா! பேருந்து நிலையத்தில் உன்னைக் கடத்திய ஒருவன், நாயை எட்டி உதைத்தான். அப்புறம் நாயை நீ பார்க்கவில்லை, இல்லையா?''

''அப்புறம் சில நிமிடம் பார்த்தேன். நாய் ஆட்டோவுக்குப் பின்னே ஓடி வந்தது. ஆட்டோ பேருந்து நிலையத்திலிருந்து சாலைக்கு வந்த பிறகும் ஆட்டோவைப் பின் தொடர்ந்து ஓடி வந்தது.'' என்ற சேரன், அந்தக் காட்சியை மனத்திலே நினைத்துப் பார்த்தான். அந்தக் காட்சியை நினைத்ததும் திடீரென்று அவன் முகம் ஒளிர்ந்தது.

''சார், அப்போ ஆட்டோ போன திசைக்கு எதிரே, நாயைப் பிடிக்கும் வேன் போனதைப் பார்த்தேன் சார். டாலரை அவர்கள் பிடித்து விடுவார்களோ என்று பயந்தேன் சார். இது வரைக்கும் அதை மறந்துட்டேன். நாயைப் பிடித்து வைக்கிற இடத்துக்குப் போனால் உடனே டாலர் கிடைக்கும் ஸார்.''

சேரன் சாப்பிடுவதை விட்டு எழுந்து நின்றான்.

ஹனிமேன் அவனை அழைத்துக் கொண்டு காரிலே புறப்பட்டான்.

அவர்கள் புறப்பட்ட அதே நேரத்தில், பேருந்து நிலையத்தில் சேரன் நாயைப் பற்றி விசாரித்த ஜாக்கி ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அழகான ஒரு நாயை நாய் வண்டிக்காரர்கள் பிடித்துக்கொண்டு போனதை அறிந்து, பிடிக்கப்பட்ட நாய்களை வைத்திருக்கும் இடத்தின் வாயிலை அடைந்துவிட்டான். ஆம், ஜாக்கி, சேரனை முந்திக் கொண்டான்.

(தொடரும்)

என் கதையைக் கேளுங்கள் —கங்காரு



பள்ளிப் பாடப் புத்தகத்திலிருந்து, பெரிய பெரிய கலைக் களஞ்சியங்கள் வரை எல்லாவற்றிலும் என்னைப் பற்றிப் படிக்கிறீர்கள். என் படத்தை வேடிக்கையாகப் பார்க்கிறீர்கள் இதற்குக் காரணம் என்ன?

உலகிலேயே நான்தான் மிகவும் விசித்திரமான மிருகம் என்று நீங்கள் முடிவுகட்டி விட்டீர்கள். அதனால் தானே?

ஆம், நான் பல வகையிலும் விசித்திரமான பிராணிதான். முதலில் என் கால்களைப் பாருங்கள். முன் கால்கள் இரண்டும் குட்டையாயிருக்கின்றன. ஆனால், பின் கால்களோ மிகவும் நீளமாயிருக்கின்றன.

எனக்கு நடக்கத் தெரியும்; தாவத் தெரியும்; ஆனால் ஓடத் தெரியாது. நடக்கும் போது அல்லது புல் பூண்டுகளைத் தின்னும் போதுதான் நான் நான்கு கால்களையும் உபயோகப்படுத்துவேன். தாவும் போது முன் கால்களுக்கு வேலையே இல்லை. பின் கால்கள் தான் உதவியாயிருக்கும். ஒரே தாவில் என்னால் முப்பது அடி தூரம் செல்ல முடியும். உங்களில் யாரேனும் இவ்வளவு தூரம் தாவுவார்களா?

உலகிலேயே அதிக நீளம் தாவியவர் ஒரு ரஷ்யக்காரராம். அவரும் எவ்வளவு தூரம் தாவினார் என்று நினைக்கிறீர்கள்? என்னைப் போல் 30 அடி தூரமா? இல்லை. 27 அடி 3 அங்குலம் தான்! இதுவரை அதற்குமேல் யாருமே தாவியதில்லையாம்.

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?" என்றுதானே கேட்கிறீர்கள்? கேளுங்கள், கேளுங்கள்.

ஒருநாள் இரண்டு அமெரிக்கர்கள் என்னைப் பார்க்க ஆஸ்திரேலியாவிற்கு வந்தார்கள். இங்குதானே என் இனத்தைப் பார்க்க முடியும்? வந்தவர்கள் என்னைச் சும்மா பார்த்துவிட்டுப் போகவில்லை; புகைப்படம் கூட எடுத்தார்கள். அப்போது, அவர்கள் பேசியதிலிருந்துதான் நான் இதைத் தெரிந்து கொண்டேன்.

உயரம் தாவுவதிலும் நான் சளைத்தவனல்ல. என்னால் ஏழடி உயரம் தாவ முடியும். "என்ன! முடியாது என்று நினைக்கிறீர்களா? இப்போதே பார்த்துவிடலாம். வயது வந்த ஓர் ஆளைக் கொண்டு வந்து, என் முன்னால் நிறுத்துங்கள். 'ஒன்று... இரண்டு... மூன்று' என்று சொல்லுங்கள். உடனே பாருங்கள். அந்த மனிதரின் தலைமயிரில் கூட என் கால் படாதபடி ஒரே மூச்சில் அவரைத் தாண்டி விடுவேன். உடனே நீங்கள் எல்லாம் என்ன செய்வீர்கள்? பலமாய்க் கைதட்டுவீர்கள்.

இதோ என் பின்பக்கம் பாருங்கள். தடித்து நீண்ட வால் இருக்கிறது. உட்காரும் போதும், தாவும் போதும் இந்த வால் எனக்கு எவ்வளவு உதவுகிறது, தெரியுமா? நான் உட்காரும் போது தரையில் உட்கார மாட்டேன். இந்த வாலையும், பின் கால்கள் இரண்டையும் சேர்த்து வைத்துக் கொள்வேன். அசல் முக்காலிபோலிருக்கும். அந்த



முக்காலி மீதுதான் நான் உட்கார்ந்து கொள்வேன். குதித்துக் குதித்துச் செல்லும்போது, இந்த வாலைப் பின்பக்கமாக நீட்டி வைத்துக் கொள்வது என் வழக்கம். இந்தப் பக்கம், அந்தப் பக்கம் நான் சாய்ந்து விடாமல் இருக்கவும், வேண்டிய பக்கம் திரும்பவும் துடுப்பைப் போல் இது உதவுகிறது.

வாலையும், காலையும் பற்றியே நான் சொல்லிக் கொண்டிருக்கும் போது, நீங்கள் என் வயிற்றையே பார்க்கிறீர்களே! ஓகோ! புரிகிறது, புரிகிறது. என் வயிற்றிலுள்ள பைக்குள்ளிருந்து எட்டி எட்டிப் பார்க்கிறதே ஓர் உருவம், அதைத்தானே இப்படிக் கண்கொட்டாமல் பார்க்கிறீர்கள்? நன்றாகப் பாருங்கள், பாருங்கள். இது என் குழந்தைதான்.

ஐந்து மாதங்களுக்கு முன்பு இது பிறந்தது. இப்போது இதன் உயரம் ஒன்றரை அல்லது ஒன்றே முக்கால் அடி இருக்கும். ஆனால், பிறந்தவுடனே எவ்வளவு உயரம் இருந்தது, தெரியுமா? சொன்னால் நம்ப மாட்டீர்கள்! சரியாக ஓர் அங்குலம் தான்! ஆம், ஒரே அங்குலம் தான்! நானோ ஆறடி இருக்கிறேன். எனக்குப் பிறந்த குழந்தை ஓர் அடியாவது இருக்க வேண்டாமா? என்ன செய்வது?

'ஆறடி அம்மாவுக்கு அங்குலக் குழந்தை' என்று உங்களுக்குப் பாடத் தோன்றுகிறதா? சரி, பாடி விட்டுப் போங்கள்.

பிறந்தவுடனே இந்தப் பிள்ளையை என் உதடுகளால் மெதுவாகத் தூக்கி இந்தப் பைக்குள்ளே வைத்தேன். உயரம் ஓர் அங்குலமாக இருக்கும்போது, நான் தரையிலே விட முடியுமா? புல் பூண்டுகளுக்குள் அகப்பட்டுக் கொண்டு விட்டால் என்ன செய்வது? தேடிக் கண்டுபிடிப்பதே சிரமமாகி விடுமே! அதனால் கொஞ்ச காலம் வரை இதைத் தரையில் விடுவதே இல்லை. எப்போதும் இந்தப் பைக்குள்ளே பத்திரமாக வைத்திருப்பேன். உங்கள் ஆசிரியர் சட்டைப் பைக்குள் சாக்குக் கட்டியை வைத்திருப்பாரே, அதே போலத்தான் இதையும் என் பைக்குள்ளே வைத்திருப்பேன்.

அப்போதெல்லாம் இந்தப் பிள்ளைக்குப் பாலை உறிஞ்சிக் குடிக்கத் தெரியாது. என் மடியிலிருந்து இதன் வாய்க்குள்ளே பாலைப் பீச்சி விடுவேன். பாலைக் குடித்துவிட்டுப் பைக்குள்ளே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும். நாள் ஆக, ஆக, இது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்தது.

இப்பொழுதெல்லாம், இது அடிக்கடி பையை விட்டு வெளியே வரும். பக்கத்திலே உள்ள புல்லை ஆசை ஆசையாகக் கடித்துத் தின்னும். நன்றாகக் குதித்துக் குதித்து விளையாடும். அப்போது, ஏதாவது சத்தம் கேட்டால் போதும்; உடனே நான் 'லபக்'கென்று இதைப் பிடித்துப் பைக்குள்ளே போட்டுக் கொள்வேன். கண் மூடிக் கண் திறப்பதற்குள் அந்த இடத்தைவிட்டு மறைந்து விடுவேன்!

இந்தக் குழந்தை இன்னும் மூன்று மாதம் வரைதான் என் பைக்குள்ளே வசிக்கும். அதற்குள்ளே, அதாவது எட்டாவது மாதத்திற்குள்ளே, இதற்குத் தானாகவே இரை தேடத் தெரிந்துவிடும். அப்புறம் என் உதவி எதற்கு? "இன்னும் நீ என்ன, சின்னப் பிள்ளையா? நீதான் நன்றாக வளர்ந்து விட்டாயே! இனியும் நீ பைக்குள்ளே இருந்தால், மற்ற பிள்ளைகள் உன்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்களா?" என்று கூறிப் பையிலிருந்து இதை வெளியில் இறக்கி விடுவேன். அப்புறம் இது திரும்பி என் பைக்கு வராது. அப்படி வந்தாலும் நான் இடம் கொடுக்க மாட்டேன்.

எங்களைப் போலவே ஆஸ்திரேலியாவில் சில மிருகங்கள் இருக்கின்றன. எங்களைச் 'சிகப்புக் கங்காரு' என்பார்கள். சாம்பல் நிறக் கங்காரு, எலிக் கங்காரு, வலபி — இப்படிச் சில வகை உண்டு. சாம்பல் நிறக் கங்காரு நல்ல உயரமாக இருக்கும். ஆனால், அது எங்களைப் போல் புல்வெளியில் வசிப்பதில்லை; மரங்கள் அடர்ந்த இடத்தில்தான் வசிக்கும்.

வலபி, எலிக் கங்காரு — இவைகளெல்லாம் சிறிதாயிருக்கும். எங்களைப் போல் வேகமாகப் பாய்ந்து செல்ல அவைகளால் முடியாது. ஆபத்து என்றால், புதருக்குள் ஒளிந்து கொள்ளும்.

ஆஸ்திரேலியாவின் மத்திய பாகத்திலே சில நாட்டு ஜாதியார் வசிக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால், "ஆதி காலத்து மனிதர்கள் இப்படித்தான் இருந்திருப்பார்களோ!" என்று நீங்கள் நினைத்து விடுவீர்கள். அவர்கள் துணி உடுத்த மாட்டார்கள்; அவர்களுக்கென்று வீடு வாசல் எதுவுமே கிடையாது. அடிக்கடி இடம் மாறிக் கொண்டேயிருப்பார்கள். தேவையான போது, இலை தழைகளால் கொட்டகை போட்டுக் கொண்டு, அங்கே தங்குவார்கள்.

குறி பார்த்து ஈட்டி எறிவதில் அவர்கள் சூராதி சூரர்கள்! எங்களுடைய மாமிசம் அவர்களுக்கு மிகவும் பிடிக்குமாம். அத்துடன், எங்களுடைய தோல் மிருதுவாகவும், உறுதியாகவும் இருப்பதால், எங்கள் உயிருக்கு அவர்கள் எமனாகி விடுகிறார்கள்!

நாங்கள் யாருடனும் வீண் வம்புக்குப் போக மாட்டோம். அப்படியிருந்தும், வேட்டைக்காரர்கள் எங்களை விட்டு வைக்கிறார்களா? எங்கள்மேல் வேட்டை நாய்களை ஏவி விடுகிறார்கள். நாங்கள் நீண்ட தூரம் தாவித் தாவி வேகமாகச் செல்வதால், வேட்டை நாய்களால் எங்களை எளிதிலே பிடிக்க முடியாது. சில வேட்டை நாய்கள் தப்பித் தவறி அருகிலே வந்து விட்டால், பின்னங்கால்களால் பலமாக உதைப்போம். அத்துடன் விட மாட்டோம்; நகங்களாலும் நன்றாகக் கீறி விடுவோம்!

எனக்கு இந்தக் குழந்தை பிறப்பதற்கு முன்பு ஒருநாள், ஒரு நாய் என்னை வேகமாகத் துரத்தி வந்தது. வெகு தூரம் பிடி கொடுக்காமல் சென்று கொண்டிருந்தேன். வழியில் ஓர் ஆறு



குறுக்கிட்டது. உடனே நான் ஆற்றுக்குள் இறங்கி நாலைந்து அடி ஆழத்தில் நின்று கொண்டேன். வேட்டை நாய் விடவில்லை. தண்ணீருக்குள் குதித்து, என்னை நோக்கிக் குரைத்துக் கொண்டே வந்தது.

அருகிலே வந்ததும், நான் என்ன செய்தேன் தெரியுமா? சட்டென்று அதன் தலையை முன்னங்கால்களால் பிடித்துத் தண்ணீருக்குள் அமுக்கினேன். அது எவ்வளவோ முண்டியடித்துப் பார்த்தது. நான் பிடியை விடவில்லை. தண்ணீருக்குள் அது எவ்வளவு நேரம்தான் உயிரோடு இருக்க முடியும்? சிறிது நேரத்தில் நான் பிழைத்தேன்.

வேட்டை நாய்...?



வால் எதற்கு?

படைப்பில், இறைவன் மனிதனைத் தவிர ஏனைய ஜீவராசிகளுக்கு 'வால்' என்ற உறுப்பைப் படைத்துள்ளான். வால், பிராணிகளுக்கு அழகைக் கொடுப்பதோடு தங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவும் தினசரி அலுவல்களில் உபயோகித்துக் கொள்ளவும் பயன்படுகிறது.

நாய்: இது தன் பாசத்தையும் நன்றியையும், விசுவாசத்தையும், தன் வாலை வேகமாக ஆட்டுவதன் மூலம் வெளிப்படுத்துகிறது. ஓநாயும் இந்த வகையே.

மான்: கூட்டமாக மேய்ந்து கொண்டிருக்கும்பொழுது ஆபத்து, மனிதன் மூலமோ, மிருகங்களின் மூலமோ ஏற்படும் பொழுது, தன் வாலை நிமிர்த்தும். அப்பொழுது இதன் வாலில் உள்ள உரோமம் பளபளத்து, கண்ணாடியைப் போல் ஒளிவீசும். இதைக் கண்ணுற்றமொத்தகூட்டமும் கண் இமைப்பதற்குள் சிட்டாய்ப் பறந்துவிடும்.



பல்லி: இதன் வால் மிகவும் மென்மையானது. யாரேனும் இதன் வாலைப் பிடித்தால் வாலின் முனை அறுந்துவிடும். ஓட்டம் எடுக்கும். பிடித்தவர் கையில் வால் மட்டும் தான் அகப்படும்.

அணில்: கண்மூடிக் கண் திறப்பதற்குள் மரத்தின் உச்சிக்கே போய் விடும். இதன் வேகத்திற்கு உதவுவது இதன் வால்தான்.

கங்காரு: குட்டியைத் தொப்பைப் பையில் சுமந்து கொண்டு தாவித்தாவி ஓடுவதற்கு இதன் வால்தான் உறுதுணையாகிறது.

வயல் எலி: இதனுடைய வால் (Glouse) கையில் போட்டுக் கொள்ளும் உறையைப் போன்றது. உழவன் இதைப் பிடித்துவிட்டால் கழற்றிக் கொண்டு ஓடும். உழவன் கையில் உறை மட்டும் மிஞ்சும்.

கலிபோர்னியா (லினர்) எலி: இதற்கு எதிரி பாம்பு. தன் இனத்திற்கு பாம்பின் வருகையைத் தன் வாலை மூன்று முறை ஆட்டித் தெரிவிக்கும்.

ஆதாரம்: ரஷ்யன் டைஜஸ்ட்.

தகவல்: திருமதி தேவநாதன்.

பிருந்தாவனக் கதையரங்கம்



அவர் யார்?

பி.குமரகுரு

(7/62)

ராஜபுரம் என்ற நாட்டை ராஜவர்மன் என்பவன் ஆண்டு வந்தான். அவனுடைய மகன் ரகுபதி கலாரசிகன். அழகு விரும்பி. அதனால் விதவிதமான சட்டங்களை அவன் இயற்றுவான். இதை அவன் தந்தை ராஜவர்மன் கண்டும் காணாதது போல் இருப்பான்.

ஒருநாள்; "அழகில்லாத ஊனமுற்ற பிறவிகள் உடனே நாட்டை விட்டு வெளியேற வேண்டும். மீறினால் தண்டனை வழங்கப்படும்" என்ற புதுச் சட்டத்தை இயற்றினான். ராஜவர்மன் தன் ஒரே செல்ல மகனைக் கண்டிக்க மனமில்லாமல் நாட்டை விட்டு வெளியேறுபவர்களுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பினான்.

இந்நிலையில் தலைநகரை அடுத்துள்ள ஒரு சிற்றூரில் அங்குசாமி என்பவன் வாழ்ந்து வந்தான். அவர் மனைவி சுமதி மிகச் சிறந்த அறிவாளி. கணவனுக்கு ஏதாவது பிரச்னை என்றால் சுமதிதான் அதைப் போக்கத் தகுந்த யோசனை கூறுவாள்.

ஒருநாள் அங்குசாமி வயலில் நடந்துசெல்லும்போது அவன் காலில் சிறு முள் குத்திவிட்டது. அதனால் அவன் காலை, சற்று நொண்டி நொண்டி நடக்கலானான்.

அப்போது அவ்வழியாகக் குதிரையில் வந்த ரகுபதி கோபத்தோடு, "நான் போட்ட சட்டத்தை இவன் மீறி விட்டான். இவனைக் கொண்டு போய்ச் சிறையில் அடையுங்கள்" என்றான். அங்குசாமி, "நான் நொண்டி அல்ல" என்று கூறியும் கேட்காமல் வீரர்கள் அவனைச் சிறையில் அடைத்தனர். இதைக் கண்டும் காணாதவன் போல ராஜவர்மன் இருந்தான்.

அங்குசாமியைச் சிறையில் அடைத்த செய்தி சுமதியின் காதுகளுக்கு எட்டியது. உடனே அவள் புறப்பட்டு அரச சபையை அடைந்தாள்.

அங்கு சுமதி மன்னனைக் கண்டு, "அரசே, தங்கள் புதல்வரின் கட்டளையை மீறிய குருடர் ஒருவர் இந்த அரண்மனையில் உள்ளார்" என்றாள்.

அரசன், "யாரது? சொல்!" என்றான்.

சுமதி, "அந்தக் குருடர் வேறு யாருமல்ல. நீங்கள்தான்" என்றாள்.

"என்ன? நானா? குருடனா?" அதிர்ச்சியோடு கேட்டான் ராஜவர்மன்.

"ஆம், நீங்கள் தான் அந்தக் குருடர். தங்கள் புதல்வர் செய்கின்ற அக்கிரமங்களை கண்டும் காணாமல் இருக்கும் நீங்கள் குருடர்தான். ஆனால், ஏன் நீங்கள் இன்னும் நாட்டை விட்டு வெளியேறவில்லை?" என்று காரசாரமாகக் கேட்டாள் சுமதி.

அதைக் கேட்ட சபையோர் அனைவரும், ''சுமதி சொல்வது உண்மை தான். ஏன் வெளியேறவில்லை?'' என்றனர் ஆவேசமாக. அவர்கள் மனத்தில் இத்தனை நாளாகக் குமுறிய கோபம் அன்று வெளிப்பட்டது.

இதையெல்லாம் கண்ட ராஜவர்மன் மனம் திருந்தினான். சிறையில் உள்ளோர் அனைவரையும் விடுவித்தான். ரகுபதி போட்ட சட்டங்களையெல்லாம் ரத்து செய்தான். உண்மையை உணர்த்திய சுமதிக்குப் பரிசு வழங்கினான். பிறகு அந்நாட்டில் பழைய சுபிட்ச வாழ்வு துவங்கியது.



அவன் போட்ட திட்டம்

கோ. சுரேஷ் (472)

இன்பண்டங்கள் எங்கிருந்தாலும் சரி, அது ராஜீவின் கண்ணில் படாமல் இருக்காது. அன்றும் அதே போல்தான் அந்த பிஸ்கட் டப்பாவை அவனது துப்பறியும் கண்கள் கண்டு பிடித்து விட்டன.

எடுத்துத் திறந்து பார்த்தான். இரண்டு பிஸ்கட்டுகள் இருந்தன. 'ருசி பார்க்கலாமா?' என்று அவனது நாக்கு கேட்டது. ஆனால் மனமோ, 'சிச்சி, திருட்டுத்தனமாய்த் தின்னக் கூடாது' என்றது.

'அம்மாவிடம் கேட்டுச் சாப்பிடலாம்' என்று நினைத்து, அம்மாவிடம் கேட்கப் போனான். 'அம்மாவிடம் கேட்டால், ஒன்றுதான் தருவாள். ஒன்றைத் தங்கைக்கு வைத்துவிடச் சொல்வாள்' என்ற எண்ணம் அவன் மனத்தில் உதிக்கவே, அவன் முகம் சுருங்கியது.

'இரண்டு பிஸ்கட்டுகளையும் கைப்பற்ற என்ன செய்யலாம்?' என்று அவன் யோசித்தான். அப்போது அவனது மூளைக்குள் தெனாலிராமன் புகுந்து கொண்டானோ என்னவோ, நல்லதொரு திட்டம் உதித்தது. அம்மாவிடம் போனான்.

''அம்மா... அம்மா, அந்த டப்பாவிலிருந்த ரெண்டு பிஸ்கெட்டையும் தின்னுட்டேம்மா... நீ தங்கச்சிக்குத் தனியா எடுத்து வெச்சிருக்கியாம்மா...?''

''என்ன! நீ ரெண்டையும் தின்னுட்டியா! ஒண்ணு வெக்க மாட்டியே, சரி, சரி, நான் மஞ்சுவுக்கு வேறே வாங்கி கொடுத்துக்கிறேன்.''

'அப்பாடா' என்றிருந்தது ராஜீவுக்கு. ராஜீவின் திட்டம் என்னவென்றால், அம்மாவிடம் 'தின்று விட்டேன்' என்று சொல்லித் திட்டு வாங்கிக் கொண்டு, பிறகு அம்மா இல்லாத போது பிஸ்கட்டுகளைத் தின்ன வேண்டியது. அவ்வளவுதான்!

'எப்போதடா அம்மா தோட்டத்துப் பக்கம் போவாள்?' என்று ராஜீவ் எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். ஒரு வழியாய் அம்மாவும் தோட்டத்துப் பக்கம் சென்று விடவே, அவன் எழுந்து சென்று, பிஸ்கட் டப்பாவைத் திறந்தான்.

அதிர்ச்சியாய் இருந்தது! ஆச்சரியமாயும் இருந்தது! கோபமும் வந்தது ராஜீவுக்கு. 'எப்படிக் காணாமல் போகும் பிஸ்கட்டுகள்? நான் என் கண்ணால் பார்த்தேனே?' என்று குழம்பினான் ராஜீவ். ஏமாந்து போனதில் அழுகையாய் வந்தது அவனுக்கு.

ராஜீவ் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த போது, எதிரில் அம்மா நின்றாள்.

"ஏன்டா அழறே?" என்று கேட்டாள்.

அவன் அவளிடம், தான் பிஸ்கட் தின்று விட்டதாகப் பொய் சொல்லியதையும், பிறகு வந்து பார்த்த போது, பிஸ்கட் இல்லாததையும் சொன்னான்.

அவள் அவனைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே சொன்னாள்:

"ராஜீவ், நான்தான் அந்த பிஸ்கட்டுகளை எடுத்து வைத்திருக்கிறேன். நீ பிஸ்கட் இரண்டையும் தின்றுவிட்டதாகச் சொன்ன பிறகு, கடுகு போட்டு வைப்பதற்காக அந்த டப்பாவைத் திறந்தேன். உள்ளே பிஸ்கட் இரண்டும் இருப்பதைக் கண்டேன். உடனே உன்னுடைய திட்டத்தைப் புரிந்து கொண்டேன். உன்னைத் திருத்துவதற்காகவே அதை அப்புறப்படுத்தினேன். இனிமேலாவது தெரிந்து கொள் ராஜீவ், உன்னுடைய புத்திசாலித்தனத்தை, அறிவை, கெட்ட காரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. பொய் சொல்லக் கூடாது. அதுவுமில்லாமல் நீ மட்டும் சாப்பிட வேண்டும் என்று நினைக்கக் கூடாது. பகிர்ந்து உண்ண வேண்டும். தெரிந்ததா?" என்று அவன் அம்மா அவனுக்கு அறிவுரை சொன்னாள்.

அவன், "இனிமேல் அப்படிச் செய்யமாட்டேனம்மா" என்றுசொன்னான்.

அவன் தாய் இரண்டு பிஸ்கட்டுகளையும் நீட்டினாள். அவன் ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டான், இன்னொன்றைத் தங்கைக்கு வைத்துவிட்டு.

பணத்திமிர்!

சு. சிவகுமார் (6/04)



குணம்மாளுக்குப் பணமும் பதவிகம் அதிகம். மகள் பேபிக்கு நல்ல சுரம். தன் குக்கிராமத்தில் உள்ள நாட்டு வைத்தியரை வரவழைத்துக் காட்டினாள். நாட்டு வைத்தியரும் நாடி பிடித்துப் பார்த்துவிட்டு பாட்டிலில் இருந்த சூரணத்தை எடுத்து, குணம்மாளிடம் கொடுத்து, "இந்தாருங்கள் அம்மா! இந்தப் பொடியில் பைசா எடை அளவு எடுத்துத் தேனில் குழைத்து இரண்டு வேளை கொடுங்கள்," என்று கூறினார்.

அன்று இரவு பேபி மருந்துண்ட கொஞ்ச நேரத்திலேயே கண்கள் செருக மயக்கமாகி விட்டாள். குணம்மாள் கோபத்துடன் வைத்தியருக்கு ஆள் அனுப்பினாள். வைத்தியரும் பதறியடித்து ஓடிவந்து பேபியைச் சோதித்தார். "ஏனம்மா, மருந்தை நான் சொன்னபடி பைசா அளவு எடை எடுத்துத்தானே கொடுத்தீர்கள்?" என்று கேட்டார்.

"என்ன வைத்தியரய்யா! இப்படிக் கேட்டு விட்டீர்கள்? எங்கள் குடும்ப கௌரவம் என்ன! அந்தஸ்து என்ன!! பைசாக் கணக்கெல்லாம் எங்களுக்கு வரவே வராது. அந்த சின்னப் புத்தியெல்லாம் எங்கள் பரம்பரைக்கே கிடையாது. அதனால், ரூபாய் அளவு எடை மருந்து கொடுத்தேன்" என இகழ்ச்சி தோன்றக் கூறினாள்.

வைத்தியருக்கு எப்படி இருக்கும்? எப்படி இருந்தால் என்ன? பணத்திமிரால் குழந்தையின் உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தை எடுத்துச் சொன்னால் விளங்கிக் கொள்வாளா அந்த அம்மாள்? அவசரமாக மாற்று மருந்தை எடுத்து வர வீட்டை நோக்கி ஓடினார் வைத்தியர்!

கோயில் பாறை

வி.சரவணசுரேஷ் (6630)



தமிழ்நாடு முற்காலத்தில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அப்பிரிவுகளில் நடு நாடு என்பது ஒன்று. அந்நாட்டில் திருவாமாத்தூர் என்று ஓர் ஊர். அவ்வூரின் கோயிலில் ஓர் ஆற்றல் வாய்ந்த பாறை இருந்தது. அப்பாறையின் முன்னால் நின்று யார் பொய் சொன்னாலும், அவர் உடனே இறந்து போவார் என்பது அக்கால மக்களின் நம்பிக்கை.

திருவாமாத்தூரில் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் கெட்ட குணம் உடையவன்.

அவனுக்குத் தம்பி ஒருவன் இருந்தான். அவன் மிகவும் நல்லவன். எவ்விதத் தீய பழக்கமும் அவனிடம் இல்லை. நேர்மையாக வாழ்ந்து வந்தான். இவ்விருவருக்கும் மிகுந்த செல்வம் இருந்தது. அவர்களது முன்னோர்கள் பெரும் பொருள் சேர்த்து வைத்திருந்தனர். கொடியவனாகிய அண்ணன் எல்லாப் பொருட்களையும் தானே எடுத்துக் கொள்ள எண்ணினான். தன் தம்பிக்கு எதுவும் கொடுக்காமல் ஏமாற்றிவிட முடிவு செய்தான். எனவே அவன் எல்லாப் பொருள்களையும் விற்றுத் தங்கக் கட்டிகளாக மாற்றி விட்டான். இச்செய்தி தம்பிக்குத் தெரியாது.

நீண்ட நாள் பொருள் சம்பாதிக்க வெளியூர் சென்று விட்டதால் அண்ணன் பொருள்களை விற்றதை அவன் அறியவில்லை.

அண்ணன் தங்கத்தை எல்லாம் ஒருவரும் அறியாமல் வைத்திருக்க வசதி தேடினான். ஒரு பெரிய மூங்கில் தடியை எடுத்தான். அதை நன்கு துளைத்தான். தங்கக் கட்டிகளை எல்லாம் அதனுள் போட்டு மூடிவிட்டான். எப்போதும் அத்தடியைத் தன் கையிலேயே வைத்திருந்தான். பார்த்தவர்கள் எல்லாம் அவன் வெறும் தடியை வைத்திருப்பதாகவே எண்ணினர். வெளியூர் சென்றிருந்த தம்பி திரும்பி வந்தான். தங்கள் குடும்பப் பொருள்கள் அண்ணனால் விற்கப்பட்டதை அறிந்தான். ஊரில் உள்ளவர்களும் அண்ணன் செய்த துரோகத்தை அறிந்தனர். அவர்கள் தம்பியைப் பார்த்து, ''உன் அண்ணன் உன் பங்கினையும் விற்று விட்டான். நீ உனக்குரிய பங்கைக் கேட்டு வாங்கி விடு'' என்று கூறினர். உடனே தம்பி, அண்ணனிடம் சென்றான். ''நம் முன்னோர் தேடிவைத்த பொருட்கள் எங்கே? எனக்குரிய பங்கைக் கொடுத்துவிடுங்கள்'' எனக் கேட்டான்.

அதற்கு அண்ணன், ''நம் குடும்பத்திற்கு மிகுந்த கடன் இருந்தது. நம் முன்னோர்கள் தேடி வைத்த பொருள் அந்தக் கடனுக்கே சரியாகிவிட்டது. உன்னை நான் ஏமாற்றிப் பொருளை வைத்திருக்கவில்லை. உனக்கு நம்பிக்கை இல்லையென்றால், என் வீட்டிற்கு வந்து பார்'' எனக் கூறினான். தம்பி அண்ணன் வீட்டிற்குச் சென்று பார்த்தான். அங்கு எப்பொருளும் இல்லை. அவன் மனம் வருந்தினான்.

ஊர் மக்கள் நடந்ததைக் கேட்டு வருந்தினர். அண்ணன் பொருள்களை எங்கு வைத்துள்ளான் என்று அவர்களுக்குத் தெரியாது. எனவே, அவர்கள் அண்ணனை நேரில் கேட்டுவிட முடிவு செய்தனர். அனைவரும் அண்ணனிடம் சென்றனர். ''நீ உன் தம்பியை ஏமாற்றாதே! அவனுக்குச் சேர வேண்டியதை அவனிடம் கொடுத்துவிடு!'' என்றனர் அதற்கு அண்ணன் நான் அவனை ஏமாற்றவில்லை. நான் என் குடும்பக்

கடனை அடைத்தேன். என் தம்பிதான் என்னை ஏமாற்றிப் பொருள்களை ஒளித்து வைத்துள்ளான்'' எனக் கூறினான்.

''அப்படியானால், கோயிலில் உள்ள பாறையின் முன் வந்து, உண்மையைக் கூறு. அப்போதுதான் நாங்களும் உன்னை நம்புவோம்'' என்று கூறினர். அண்ணன், ''நான் ஏமாற்றவில்லை. பொய் பேசவும் இல்லை. எனவே பாறையின் முன் வந்து உறுதி கூறுகிறேன்'' என்றான்.

அவ்வூர்க் கோயிலில் உள்ள பாறையின் முன் அனைவரும் கூடினர். மூத்தவன் தன் கையில் உள்ள தடியைத் தம்பியிடம் கொடுத்து, ''நான் சத்தியம் செய்யும் வரை இதை நீ வைத்துக் கொள்'' எனக் கூறினான். தம்பியும் மூங்கில் தடியை வாங்கித் தன் கையில் வைத்துக் கொண்டான். அண்ணன் பாறையின் முன் சென்றான். பயபக்தியுடையவன் போல் நடித்துப் பாறையைத் தொட்டுக் கும்பிட்டான். ''தெய்வத்தன்மை பொருந்திய பாறையே! என் முன்னோர்கள் சேர்த்த பொருள் எல்லாம் இப்பொழுது என் தம்பியிடம் தான் உள்ளன. இது முற்றிலும் உண்மை'' என்று கூறினான்.

அவன் கூறியதைக் கேட்ட அனைவரும் ''இவன் இப்பாறையின் முன் இப்படிப் பொய் கூறுகிறானே! இவனை இப்பாறை கொல்லாமல் விடாது. பொய் கூறுபவரையும் வஞ்சகரையும் இந்தப் பாறை பழி வாங்காமல் விடாது'' எனப் பேசிக் கொண்டனர்.

ஆனால், பாறை அவனை ஒன்றும் செய்யவில்லை. பின்னர் தடியைத் தம்பியிடமிருந்து பெற்றுக் கொண்டு அண்ணன் சென்றான். மக்கள், ''இவன் ஏமாற்றவில்லை போலும் அதனால் தான் பாறை இவனைத் தண்டிக்கவில்லை. நாம்தான் இவனைத் தவறாக எண்ணிவிட்டோம்'' எனப் பேசிக் கொண்டனர். தம்பிக்கு ஒன்றும் புரியவில்லை. அண்ணன் கூறுவது பொய் என்பது அவனுக்குத் தெரியும். அப்படியானால் பாறை ஏன் தண்டிக்கவில்லை?'' என அறியாமல் திகைப்பு அடைந்தான். ''பாறையே! நீயும் பொய் பேசுபவர்க்குத் துணை செய்கிறாயா? நீயுமா என்னைக் கைவிடவேண்டும்?''

என்று அழுது புலம்பினான். மற்றவர் அவனைத் தேற்றி அழைத்துச் சென்றனர்.

மூத்தவன் பொருள்களை விற்றது அனைத்தும் அவனுடன் சேர்ந்து இருந்த சிலருக்கு நன்றாகத் தெரியும். அவர்களும் அவனைப் போன்ற வஞ்சகர்களே. இந்தச் செயல் அவர்களுக்கும் பெரிய வியப்பாக இருந்தது. இப்பொழுது அப்பாறை மீதிருந்த அச்சம் அகன்று விட்டது. அவர்கள் உண்மையை அறிய விரும்பி அண்ணனைப் பார்த்து, ''நீ உன் தம்பியை ஏமாற்றிப் பொருளைச் சேர்த்ததை நாங்கள் அறிவோம். அப்படியிருந்தும் நீ கூறிய பொய்யைக் கேட்டு அப்பாறை உன்னைத் தண்டிக்கவில்லையே! ஏன்? இது எங்களுக்கு வியப்பாக இருக்கிறது'' என்றனர்.


அதற்கு அண்ணன், ''உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். இந்தப் பாறையை நான் அறிவினால் ஏமாற்றி விட்டேன். இதோ என் கையில்தான் எல்லாப் பொருள்களும் தங்கமாக இருக்கின்றன. நான் பாறையின் முன் உறுதி மொழி சொல்லும் போது தடியை என் தம்பியின் கையில் கொடுத்து விட்டேன். எனவே, 'முன்னோர் பொருள் முழுவதும் என் தம்பியிடமே உள்ளன' எனக் கூறினேன். அது பொய்யில்லை அன்றோ? எனவே தான் பாறை என்னைக் கொல்லவில்லை. அறிவினால் நாம் தெய்வத்தைக் கூட ஏமாற்றி விடலாம்'' எனச் செருக்கோடு கூறினான். அவன் கூறியதைக் கேட்ட, தீய நண்பர்கள் கைதட்டிச் சிரித்தனர்.

அப்போது ஒரு பெரிய பாம்பு அங்கு வந்து அண்ணனைத் தீண்டியது. பாம்பைக் கண்டதும் மற்றவர்கள் ஓடி விட்டனர். உதவி செய்ய ஒருவருமில்லை. நஞ்சு தலைக்கு ஏறி அண்ணன் பொத்தென்று விழுந்தான். அப்போது அவன் கைத்தடி தரையில் மோதி உள்ளேயிருந்த தங்கக் கட்டிகள் சிதறி விழுந்தன.

''மறந்தும் பிறன்கேடு சூழற்க — சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.''

—திருக்குறள்.

1 இந்த உயிரினங்களின் பெயர்களை உங்களால் சொல்ல முடியுமா?



நீர்க் — — —. நீர்த் — —. நீர் — —. நீர்க் — —. நீர் — —.

சித்திரப் புதிர் 5


ஆழி ———




2 இந்தப் பழங்கால ஓவியம் எங்கே இருக்கிறது?


அ. அஜந்தா, ஆ. சித்தன்னவாசல், இ. காஞ்சிபுரம், ஈ. தஞ்சாவூர்

3 ஆமைகளில் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று நிலத்தில் வாழக்கூடியது. மற்றொன்று நீரில் வாழக்கூடியது. இது எந்த ஆமை?



4 நம்நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களில் 10 பேர்கள் இங்கே உள்ள வட்டத்தின் 3 பகுதிகளில் இருக்கிறார்கள். எழுத்துக்களை ஒன்றுவிட்டு ஒன்று படித்தால் அவர்களைக் கண்டுபிடித்துவிடலாம். எங்கே ஆரம்பிப்பது? அதுதான் உங்கள் சமர்த்து!





5 இது எந்த நாட்டின் தபால் தலை?

அ. ஐக்கிய அமெரிக்கா

ஆ. பாகிஸ்தான்

இ. இந்தியா.

விடை - வேறு பக்கம்



பாசிர் பாஞ்சாங் அமைதியான மீனவர் கிராமம். அழகான கடற்கரை. சுற்றிலும் மரக் கூட்டம். சிங்கப்பூரின் மேற்குக் கரையில் புகழ்பெற்ற மீன் பிடி கிராமமாக அது விளங்கியது. மீனவர் அனைவரும் அன்புடனும் நேசத்துடனும் வாழ்ந்து வந்தார்கள்.

அந்த மகிழ்ச்சிக்கு ஆபத்து வந்து விட்டது. தூரத்தில் இருந்த ரியோ தீவிலிருந்து ஒரு கூட்டம் திடீரென்று வந்து சேர்ந்தது. அவர்கள் கடற் கொள்ளைக்காரர்கள்.

அவர்களின் தலைவனைப் பார்த்ததும் மீனவர்கள் பயந்து விட்டார்கள். முகத்தில் வெட்டுக் காயத் தழும்பு இருந்தது. கொடுமையின் உருவம் தான்.

"இனிமேல் நாங்கள் இந்த கிராமத்தில் தான் இருப்போம். எங்கள் சொல்படி நீங்கள் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் தொலைந்தீர்கள்!" என்று தழும்பன் மீனவர்களை மிரட்டினான்.

அந்தக்கடல்வட்டாரத்தையே கலக்கிக் கொண்டிருந்த பயங்கரக் கடற் கொள்ளைக்காரர்கள் அவர்கள். நூறு கொள்ளைக்காரர்களுக்குத் தழும்பன் தலைவன். ஒருநாள் தழும்பனை எதிர்த்துப் பலகொள்ளைக்காரர்கள் சண்டையிட்டதால் முகத்தில் வெட்டு பலமாக விழுந்தது. எதிர்ப்பு ஏற்பட்டதால் தனக்கு வேண்டியவர்களுடன் தழும்பன் பாசிர்பாஞ்சாங் வந்து சேர்ந்தான். அங்குள்ள மீனவர்களை அடக்கி ஒடுக்கி சுகவாசியாக வாழ்ந்து வந்தான்.

நாளுக்கு நாள் தழும்பனின் கொடுமை அதிகரித்து வந்தது. மீனவர்கள் அஞ்சி அஞ்சி வாழ்ந்தார்கள்.

"எங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் நீங்களே செய்துதர வேண்டும். மறுத்தால் இந்தக் கிராமத்தையே கொளுத்தி விடுவோம்" என்று மீனவர்களை அச்சுறுத்தினான், தழும்பன்.

வேறு வழி இல்லாமல் மீனவர்கள் அனைவரும் தழும்பனுக்கு அடங்கி நடந்தார்கள்.

ஒருநாள் பிற்பகல். மீனவன் ஒருவன் கோழியுடன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

தழும்பன் அவனைத் தடுத்து நிறுத்தினான்.

"அந்தக் கோழியை இப்படிக் கொடு!" என்று உத்தரவிட்டான் தழும்பன்.

"ஐயா, என்னை மன்னிக்க வேண்டும். என் மனைவி நோயாளி. அவள் உடல் தேற கோழி சூப்பு கொடுக்கச்

சொன்னார் வைத்தியர். அதற்காகத் தான் கோழி வாங்கிச்செல்கிறேன்'' என்று அடக்கமாகச் சொன்னான் மீனவன்.

''என்னிடமா ஏமாற்று வேலை...? மரியாதையாக அதைக்கொடுக்காவிட்டால் உன் தலை போய்விடும்!''

''தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள். நான் சொல்வதை நம்புங்கள்!''

தழும்பன் தாமதிக்கவில்லை. கத்தியை எடுத்து வீசினான். அவ்வளவுதான்... அந்த ஏழை மீனவன் தரையில் விழுந்தான். துடிதுடித்து இறந்துவிட்டான்.

தழும்பன் கோழியைக் கையில் பிடித்துக் கொண்டு கொக்கரித்தான்.

பாசிர்பாஞ்சாங் கிராமமே பதைபதைத்துவிட்டது. மறுநாள் மீனவர்கள் அனைவரும் கிராமத் தலைவர் வீட்டில் கூடினர்.

''வரவர தழும்பனின் அட்டகாசம் அதிகரித்து விட்டது. அவனை விட்டு வைத்தால் இன்னும் பலரை வெட்டித் தள்ளி விடுவான். கிராமத் தலைவரான நீங்கள்தான் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று கிராம மக்கள் கேட்டுக் கொண்டனர்.

கொடுமையின் உருவமான கடற்கொள்ளையர் தலைவனைச் சந்திக்க, கிராமத் தலைவர் நடுங்கினார். அவனைச் சந்தித்துப் பேசாவிட்டால் கிராம மக்கள் தன்னை மதிக்க மாட்டார்கள் என்ற அச்சம் வேறு.

துணிந்து தழும்பனைத் தேடிப் போனார் கிராமத் தலைவர். தணிவாகவே பேச்சுக் கொடுத்தார்.

''உன்னால் மீனவர்களுக்கு மிகுந்த தொல்லை. ஆகவே, இந்த கிராமத்திலிருந்து நீயும் உன் சகாக்களும் வெளியேற வேண்டும்... எல்லோரும் அதைத்தான் விரும்புகிறார்கள்!'' என்றார் கிராமத் தலைவர்.

தழும்பன் இடிச்சிரிப்புடன் அவரை ஏளனமாகப் பார்த்தான்.

''என்னைவெளியேபோகச்சொல்ல நீ யார்? உன்னை என்ன செய்கிறேன், பார்!'' என்றவாறு கிராமத் தலைவரை எட்டி உதைத்தான்.

அவர் படிகளில் உருண்டு விழுந்தார். பலமான அடி. அவரால் எழுந்து நிற்க முடியவில்லை. அன்று இரவே கிராமத் தலைவர் இறந்து போனார்.



அடுத்தநாள், காலையிலேயே தழும்பனின் கும்பல் கடற்கொள்ளைக்குப் புறப்பட்டு விட்டது.

கிராமத் தலைவரை இழந்த மீனவர்கள் கதி கலங்கினார்கள். இனிமேல் தழும்பனை யாரும் எதிர்க்க முடியாது. அவனுடைய அட்டகாசம் மேலும் அதிகமாகும். என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள், மீனவர்கள்.

நாட்டுத் தலைவரான சுல்தானிடம் முறையிட்டால் பலன் கிடைக்கும். பூனைக்கு யார் மணி கட்டுவது? சுல்தானைப் பார்த்துத் தங்கள் குறையைச் சொல்லும் துணிவு அந்த மீனவர்களுக்கு இல்லை.

ஆனால், அவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தான் ஒரு சிறுவன். இறந்து போன கிராமத் தலைவனின் மகன்தான் அவன்.

"நீங்கள் யாரும் சுல்தானைப் பார்க்கச் செல்லாவிட்டால் நான் போகிறேன்!" என்றான் சிறுவன்.

மீனவர்களுக்கு வியப்பு. 'இவன் போனால் அரண்மனையில் யார் திரும்பிப் பார்ப்பார்கள்?' என்று முதலில் நினைத்தார்கள். ஆனாலும் கிராமத் தலைவனின் மகன் என்று சொன்னால் ஒருவேளை அனுமதி கிடைக்கும் அல்லவா?

உடனே புறப்படும்படி கேட்டுக் கொண்டார்கள்.

ஓட்டமும் நடையுமாகப் பல கல் தொலைவில் உள்ள அரண்மனைக்குச் சென்றான் சிறுவன்.

அவனுடைய நல்ல நேரம். சுல்தானைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள மிரட்டல்களை அவன் எடுத்துச் சொன்னான். சுல்தான் அக்கறையோடு கேட்டார். ரகசியமாக அவனிடம் அவர் எதையோ சொன்னார்.

சற்று நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டான். பாசிர் பாஞ்சாங்கை நோக்கி விரைந்து வந்தான்.

* * * * *

மாலை நேரம். கடற்கொள்ளைக்காரர்கள் திரும்பிவிட்டார்கள். கடற்கரையில் நங்கூரமிட்டிருந்த சில சீனக் கப்பல்களில் ஏராளமான பொருட்களைக் கொள்ளையடித்திருந்தார்கள். விலை உயர்ந்த நகைகள், பட்டுத் துணிமணிகள், கூடை கூடையாக உணவுப் பொருட்கள்...

தழும்பனின் பெருமைக்கும், இறுமாப்புக்கும் எல்லையே இல்லை. கொள்ளைப் பட்டாளங்களுடன் திரும்பிய அவன் கூட்டம் மீனவர்களை அழைத்தது.

தங்களுக்குத் தடபுடலாக இரவு விருந்து சமைக்கும்படி கொள்ளைக் கூட்டம் உத்தரவிட்டது.

வேறு வழியில்லாமல் கிராம மக்கள் அவர்கள் சொன்னதைச் செய்தனர்.

தழும்பனும் அவன் சகாக்களும் வயிறு புடைக்கச் சாப்பிட்டார்கள். கள்ளைக் குடித்து விட்டுத் தள்ளாடினார்கள். இருளில் என்ன நடக்கிறது என்றே அவர்களுக்குப் புரியவில்லை. குடிவெறியில் அப்படி அப்படியே விழுந்து உறங்கி விட்டார்கள்.

சில நாழிகை ஆகியிருக்கும். கிராமத்தை நோக்கித் தீப்பந்தங்களுடன் பலர் விரைந்து வருவது தெரிந்தது. அவர்கள் நெருங்கி வருவதைப் பார்த்தபடி மீனவர்கள் நின்றிருந்தனர்.

அருகில் வந்ததும் கிராமத் தலைவரின் மகன் எதிர்கொண்டு அழைத்தான்.

வந்தவர்கள் அனைவரும் சுல்தானின் வீரர்கள்!

அடுத்த வினாடியே வந்த வேலையைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

தழும்பனையும் அவன் சகாக்களையும் கயிற்றால் கட்டினார்கள். திடுக்கிட்டு விழித்துக் கொண்ட கொள்ளைக் கூட்டம் செய்வது அறியாது திகைத்தது.

கிராமத் தலைவரின் மகன் கடமை வீரனாக மீனவர்களிடையே நின்றிருந்தான்.

தழும்பனும் கொள்ளையர்களும் வீரர்களால் இழுத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் இனித் திரும்ப மாட்டார்கள்... இனி என்றும் அமைதிதான். சிறுவன்தான் இனி கிராமத் தலைவன் என்று மீனவர்கள் முடிவு செய்தார்கள்.

ஆனாலும் கொள்ளைக்காரத் தழும்பனை அவர்கள் வெகுகாலம் மறக்கவே இல்லை.



கண்டுபிடித்தவர்களைக் கண்டுபிடியுங்கள்!

கீழேயுள்ள விஞ்ஞானக் கண்டுபிடிப்பு ஒவ்வொன்றையும் கண்டு பிடித்தவர் யார்? மூவரில் சரியான ஒருவரைக் கண்டு பிடியுங்கள்:

1.	க்ளோரோபாரம்	: ஹாஃப்மேன், ஸிம்சன், காரியர்
2.	அலுமினியம்	: சிங்கர், பிரடரிக் ஒலர், ஜான்ஸன்
3.	ப்ரேல் முறை	: லூயி ப்ரேல், ப்ராங்க்ளின், ஸ்வின்டன்
4.	டைனமிட்	: மார்க்கோனி, ஸ்வான், ஆல்பிரட் நோபெல்
5.	டி.டி.டி. மருந்து	: ப்ரௌனிங், புல்மேன், ஒட்மர் ஜெட்லர்
6.	ரிவால்வார்	: சாமுவேல் கோல்ட், ஜேம்ஸ் வாட், கில்லட்
7.	பெனிசிலின்	: ஈஸ்ட்மேன், அலெக்ஸாண்டர் ஃப்ளெமிங், நிக்கல்ஸன்
8.	பிட்மென் சுருக்கெழுத்து	: வாட்டர்மென், ஐசக் பிட்மென், பர்ரோஸ்
9.	பீட்ரூட் சர்க்கரை	: ஹார்கிரீவ்ஸ், ஆண்ட்ரஸ் மார்க்கிரா, வால்டர் ஹன்ட்
10.	பொட்டாஷியம்	: ஜான் வாக்கர், ஒட்மர் ஜெட்லர், சர் ஹெச் டேவி

விடை: 1. ஸிம்சன்; 2. பிரடரிக் ஒலர்; 3. லூயி ப்ரேல்; 4. ஆல்பிரட் நோபெல்; 5. ஒட்மர் ஜெட்லர்; 6. சாமுவேல் கோல்ட்; 7. அலெக்ஸாண்டர் ஃப்ளெமிங்; 8. ஐசக் பிட்மென்; 9. ஆண்ட்ரஸ் மார்க்கிரா; 10. சர் ஹெச் டேவி.



குற்றவாளி யார்?

எம். லலிதா

மாலை மணி ஆறரை இருக்கும். இலேசாக இருட்டத் துவங்கி விட்டது. விளையாடிக் கொண்டிருந்த ரவி, சசி, சங்கர் மூவரும் அரைமனத்துடன் விளையாட்டை நிறுத்தினர். இனியும் விளையாடிக் கொண்டிருந்தால் அப்பாவிடம் உதை வாங்க வேண்டி வரும் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்களின் அப்பா மிகவும் கண்டிப்பானவர். அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலைகளைச் செய்து விட வேண்டும். குழந்தைகள் சிறு வயதிலிருந்தே ஒழுங்குடன் வளர வேண்டும் என்பதில் பிடிவாதமானவர்.

இவர்கள் உள்ளே நுழையும் போது "இன்று ஏன் இத்தனை லேட்?" என்று அப்பாவை அம்மா கேட்டுக் கொண்டிருந்தாள்.


அப்பாவின் கையில் புதிய கடிகாரம் பளபளத்தது. மூவரும் அதைப் பார்க்க அப்பாவின் அருகில் ஓடினர். "முதலில் கைகால்களைக் கழுவிக் கொண்டு வரவேண்டும் என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்"

என்று அப்பா சிறிது கண்டிப்புடனே கூறியவுடன் மூவரும் போட்டி போட்டுக் கொண்டு ஓடிப் போய்க் கைகால்களைக் கழுவிக் கொண்டு வந்தனர்.

அப்பா தன் நண்பர் ஒருவரிடமிருந்து வாங்கியதாக அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். ஆவலுடன் வந்து நின்ற குழந்தைகளுக்கு அந்த எலக்ட்ரானிக் கடிகாரத்தைக் காட்டினார். மூவர் கண்களிலும் ஒரே பளபளப்பு! கடிகாரத்தில் எண்கள் பளிச் பளிச் என்று மாறி நேரத்தைக் காட்டிக் கொண்டிருந்தன. அதிலேயே தேதியும் கிழமையும் தெரிந்தன. ஏதோ பட்டனை அமுக்கினார் அப்பா. அடக்கமாகச் சங்கீதம் போன்று ஒலித்தது. அது அலாரமாம்! அலாரத்திற்கு மூன்று விதமான இசைகளை அது வாசித்தது. ரவி, சசி, சங்கர் மூவருக்கும் அதைத் தங்கள் கையில் எடுத்து, தாங்களே பட்டன்களை அமுக்கிப் பார்த்து விட வேண்டுமென்று ஆசை. ஆனால்... இத்தனை விலையுயர்ந்த பொருளை அப்பா தங்கள் கைகளில் கொடுக்க மாட்டார் என்பதும் தெரியும். ஆனால்... மூவரும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதை எடுத்துப் பார்த்து விட வேண்டும் என்று மனத்திற்குள் தீர்மானம் செய்து கொண்டனர்.

இரண்டு மூன்று மாதங்கள் ஓடி விட்டன. அந்த சந்தர்ப்பம் மூவருக்கும் கிடைக்கவேயில்லை.

அன்று பள்ளியிலிருந்து திரும்பியதும் முதலில் ரவியின் கண்களில்



அது தெரியாது!

தந்தை: உன் வகுப்பிலே எத்தனை பேர் படிக்கிறாங்க?

மகன் : மொத்தம் 50 பேர் இருக்கிறாங்க. ஆனால், அதிலே எத்தனை பேர் படிக்கிறாங்கன்னு எனக்குத் தெரியாது!

—ஏ. வி. தேவன்.

அப்பாவின் கடிகாரம் பட்டது. சுற்றும் முற்றும் யாரும் இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு, ரவி அதைக் கையில் எடுத்தான். கடிகாரத்தில் எண்கள் எதுவும் தெரியவில்லை. ஒரே மங்கலாக இருந்தது. ரவிக்கு ஒரே பயமாகி விட்டது. அதை அப்படியே வைத்து விட்டுப் படபடப்புடன் வெளியே ஓடி விட்டான். ''யாரோ அப்பாவின் கடிகாரத்தை ரிப்பேராக்கியிருக்கிறார்கள். அப்பா தன்னைக் கேட்டால் என்ன செய்வது? — அதற்கு முன்பு தானே போய் அப்பாவிடம் அதை சசிதான் ரிப்பேராக்கினான் என்று சொல்லி விட வேண்டும்'' — என்று தீர்மானித்துக் கொண்டான்.

அதற்குள் அங்கு ஓடிவந்த சங்கர் ரவியிடம், ''ரவி, அப்பாவின் கடிகாரத்தை யாரோ என்னவோ செய்திருக்கிறார்கள். அதில் ஒன்றுமே தெரியவில்லை,'' என்றான்.

''ஒருவேளை சசிதான் ஏதாவது செய்திருப்பானோ?'' என்று இருவரும் பேசிக் கொண்டார்கள்.

''ரவிதான் கெடுத்துவிட்டு சசி மேல் பழியைப் போடுகிறான்'' என்று சங்கரும், ''சங்கர்தான் கெடுத்துவிட்டு சசி மீது பழியைப் போடுகிறான்'' என்று ரவியும் நினைத்துக் கொண்டார்கள்.

சங்கர் விளையாடப் போகாமல் அப்பாவுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அப்பா வந்ததும் நல்ல பிள்ளை போலப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான். அவன் விளையாடப் போகாதது அப்பாவுக்கு ஒரே ஆச்சரியம்.

''ஏன்? நீ விளையாடப் போகவில்லையா?'' என்று கேட்டார்.

அதற்குப் பதில் சொல்லாமல் சங்கர், ''அப்பா, ரவி என்ன பண்ணினான் தெரியுமா? உங்கள் கடிகாரத்தை எடுத்து, பட்டன்களை எல்லாம் அழுக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். நான் உள்ளே போனதும் அதை வைத்துவிட்டு ஓடிப்போய்விட்டான். போய்ப் பார்த்தால் கடிகாரத்தில் ஒன்றுமே தெரியவில்லை. அது ரிப்பேராகி இருக்கிறது அப்பா'' என்றான்.

''அப்படியா? ரவியா உடைத்தான்? வரட்டும் கேட்கிறேன். நீ போய் விளையாடு'' என்றதும், சங்கர், 'நல்ல காலம் நாம் தப்பித்தோம். பழியை ரவி மீது போட்டாகி விட்டது' என்ற நிம்மதியுடன் விளையாட ஓடினான்.

அப்பா வீட்டுக்குள் நுழைவதை அப்போதே பார்த்துவிட்ட ரவி, ''சசிக்குத் தெரியாமல் வீட்டுக்குப் போய் அப்பாவிடம் சசியைப் பற்றிச் சொல்லி விட வேண்டும்,'' என்று தீர்மானித்துக் கொண்டான். தண்ணீர் குடிக்கும் சாக்கில் வீட்டுக்குப் போனான். அப்பா பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். உள்ளே நுழைந்த ரவியைப் பார்த்து, ''என்ன, அதற்குள் விளையாட்டு முடிந்து விட்டதா?'' என்றார்.

''இல்லேப்பா... உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்... அதற்காக வந்தேன்'' என்று தயங்கினான்.

''என்ன?'' என்றார் அப்பா.

''இந்த சசி இருக்கானே பாருங்கப்பா — அவன் இன்னிக்கு சாயந்திரம் உங்கள் கடிகாரத்தை எடுத்துப் பார்த்திட்டிருந்தான். அதை ஒரு தடவை கீழே வேறே போட்டுவிட்டான். நான் பாக்கிறது தெரிஞ்சதும் ஓடிட்டான். நான் கடிகாரம் என்ன ஆயிற்று என்று பார்த்தால் அதில் ஒன்றுமே தெரியவில்லை. அதை அவன்

உலகப் பொன்மொழிகள்

1. உங்களுக்காகப் பொய் சொல்பவன், உங்களுக்கு எதிராகவும் பொய் சொல்வான். (அமெரிக்கா)

2. புத்தியுள்ளவன் மனத்தை மாற்றிக் கொள்வான்; முட்டாள் அதைச் செய்ய மாட்டான். (அயர்லாந்து)

3. மனிதனின் மன உறுதி, மலைகளையும் தகர்த்து எறியும். (அரேபியா)

4. அறிவாளியின் ஒருநாள் வாழ்வு, முட்டாளின் முழுவாழ்வுக்குச் சமம். (அரேபியா)

5. பேராசை முடிகிற இடத்தில் சந்தோஷம் தொடங்குகிறது. (அங்கேரியா)

6. போட்டியிடு; பொறாமைப் படாதே! (ஆப்பிரிக்கா)

7. நண்பர்களே அதிகம் நெருங்கிய உறவினர்கள்! (ஹாலந்து)

8. முட்டாள் கடைசியாகச் செய்வதை அறிவாளி முதலில் செய்கிறான். (இந்தியா)

9. குழந்தைக்கு முதற்பாடம் பணிவு. (இங்கிலாந்து)

10. ஜலதோஷத்திற்குச் சாப்பாடு போடுங்கள்; ஜுரத்திற்குப் பட்டினி போடுங்கள். (இங்கிலாந்து)

11. கோழையின் கண்களுக்கு பூனையும் பூதம் போல் தோன்றும். (ரஷ்யா.)

12. பயத்தைக் குறை; நம்பிக்கையைப் பெருக்கு. பேச்சைக் குறை; செயலைப் பெருக்கு. வெறுப்பைக் குறை; அன்பைப் பெருக்கு. (ஸ்வீடன்)

தொகுத்தவர்: ஏ. என். செல்வராஜ்.



உடைச்சிட்டான் போலிருக்கு'' என்றான்.

''சசியா உடைச்சான்? வரட்டும் கேட்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அப்பா பேப்பரில் மூழ்கினார். 'அப்பாடா!' என்ற பெருமூச்சுடன் ரவி வெளியே ஓடினான்.

சங்கர், ரவி இருவரும் அப்பாவிடம் கடிகாரம் பற்றிச் சொல்லுமுன் தான் முந்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய சசி, ஆட்டம் முடிவதற்கு சற்று முன்பே தனக்குக் கால் வலி என்று சொல்லிக் கொண்டு வீடு திரும்பினான். இத்தனை சீக்கிரம் வீடு திரும்பிய சசியைப் பார்த்ததும் அப்பாவுக்கு ஒரே ஆச்சர்யம். ''என்ன இத்தனை சீக்கிரம் வந்து விட்டாய்?'' என்றார்.

''இல்லேப்பா...'' என்று தயங்கிய சசியைப் பார்த்து, ''என்ன, சொல்லு,'' என்றார் அப்பா.

''இந்த சங்கர் இருக்கானில்லையா, அப்பா... அவன்... உங்க கடிகாரத்தைரிப்பேராக்கிவிட்டான் அப்பா. அந்தக் கடிகாரத்தைக் கையில் கட்டிக் கொண்டு... எதையோ திருகிப் பார்த்துக் கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் அதை அப்படியே வைத்து விட்டு ஓடிவிட்டான்ப்பா'' என்றான். அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ரவி, சங்கர் இருவரும் உள்ளே நுழைந்தனர். மூவரும் ஒருவரையொருவர் திருதிருவென்று பார்த்துக் கொண்டனர்.

''கைகால்களைக் கழுவிவிட்டு இங்கே வாருங்கள்'' என்று அப்பா கூறியதும் பேசாமல் சென்று கை,கால் கழுவி வந்தனர்.

''மூன்று பேரும் இப்படி உட்காருங்கள்'' என்றார் அப்பா.

''ஏ, சங்கர், ரவி என் கடிகாரத்தை உடைத்ததை நீதானே பார்த்தது?'' என்றார்.

''பொய்! பொய்!'' என்று ரவி கத்த, சங்கர் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

''சரி... ரவி! சசிதானே அதை உடைத்தது என்று சொன்னாய்?'' என்றார்.

சசியின் கண்களில் நீர் வந்து விட்



டது. ''இல்லலே இல்லை. அதை நான் தொடவே இல்லை'' என்று கத்தினான்.

''சரி... சசி... சங்கர்தானே அதை உடைத்ததாகச்சொன்னாய்?'' என்றார்.

சங்கருக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''நான் உடைக்கலே அப்பா... அவன் சொன்னது பொய்'' என்று கத்தினான்.

''கடிகாரம் வேலை செய்யாததற்கு யார் காரணம் என்பது எனக்குத் தெரியும்'' என்று சொல்லி அப்பா ஒரு நிமிடம் நிறுத்தினார். பிறகு மெல்ல எழுந்தார். கடிகாரத்துடன் பக்கத்திலிருந்த அறைக்குள் நுழைந்தார். சிறிது நேரத்தில் திரும்பி வந்து, மூவருக்கும் முன்னால் உட்கார்ந்தார்.

''இப்போது பாருங்கள்'' என்று கடிகாரத்தைக் காட்டினார். கடிகாரத்தை மூவரும் உற்றுப் பார்த்தனர். எண்கள் பளிச் பளிச்சென்று மாறி நேரத்தைக் காட்டின! தேதியும், கிழமையும் நன்றாகத் தெரிந்தன! அப்பா பட்டனை அமுக்கியதும் சங்கீதம் ஒலித்தது. மூவரும் வியப்போடு அப்பாவைப் பார்த்தனர்.

''சற்று நேரம் முன்பு வரை கடிகாரம் வேலை செய்யாததற்கு யார் காரணம் தெரியுமா?'' என்று கூறி, கடிகாரத்தின் பின்புறத்தைத் திறந்தார். ''இதோ இதில் இருக்கிறதே இது புது பாட்டரி. இதில் முன்பு இருந்த பாட்டரி தான் காரணம். அதன் சக்தி குறைந்துவிட்டதால்தான் கடிகாரம் சரியாக வேலை செய்யவில்லை. அதனால் தான் கடிகாரத்தில் எதுவுமே தெரியவில்லை. அதற்கு பாட்டரி மாற்ற வேண்டுமென்பதற்காகவே கடிகாரத்தை அலமாரியில் வைத்திருந்தேன். இன்றுதான் புது பாட்டரி வாங்கி வந்தேன்'' என்று விளக்கிக் கூறினார் அப்பா.

பிறகு, ''நான் என் குழந்தைகள் நல்ல ஒழுக்கங்களுடன் வளர ஆசைப்படுகிறேன். பொய், திருட்டு முதலிய கெட்ட குணங்கள் இல்லாமல் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் நீங்களோ...'' என்று நிறுத்தி மூவரையும் பார்த்தார். மூவரும் தலை குனிந்து உட்கார்ந்திருந்தனர்.

''நீங்கள் மூவருமே இப்போது

பொய் பேசி இருக்கிறீர்கள். சங்கர், கடிகாரத்தை ரவி உடைத்ததாகவும், ரவி அதை சசி உடைத்ததாகவும், சசி அதை சங்கர் உடைத்ததாகவும் என்னிடம் சொன்னார்கள்... அதை நீங்கள் கண்ணால் பார்த்தீர்களா?'' என்றார்.

மூவரும் பயத்துடன் 'இல்லை'யென தலையாட்டினர். ''கண்ணால் பார்க்காத ஒன்றை நீங்களாகவே கற்பனை செய்து கொண்டு ஏன் பொய் பேச வேண்டும்?''

''முதலில் பொய் பேசுவதே எனக்குப் பிடிக்காத விஷயம். இப்போது நீங்கள் மூன்று பேரும் ஒருவர் மற்றொருவர் மீது பழியைப் போட்டு உங்கள் மூவருக்குள்ளும் ஒற்றுமையோ, அன்போ இல்லை என்பதையும் தெரியப்படுத்திவிட்டீர்கள்...!

''ஒரு வீட்டில் இருக்கும் மூன்று பேருக்குள், அன்பு இல்லையெனில் நாம் எப்படி நம் நாட்டில் ஒற்றுமையை எதிர்பார்க்க முடியும்? நீங்கள்தானே நாளைய இந்தியாவின் குடிமக்கள்...? சே! நீங்கள் இந்த மாதிரி இருப்பதற்கு நான் வெட்கப்படுகிறேன்.''

தலைகுனிந்து உட்கார்ந்திருந்த ரவி, சசி, சங்கர் மூவரும் — ''அப்பா இனி ஒரு போதும் பொய் பேச மாட்டோம் —இந்த மாதிரி இனி நடந்து கொள்ள மாட்டோம் — ஒற்றுமையாக இருப்போம்'' எனக் கதற ஆரம்பித்துவிட்டனர்.


மூவரையும் அணைத்துக் கொண்ட அப்பா — ''வெறும் வாய்ச் சொல்லில் வீரராய் இருப்பதில் பயனில்லை. இதைச் செய்து காட்ட வேண்டும். நீங்கள் ஒழுங்காக இருப்பதுடன் பிறருக்கும் நீங்கள் முன் மாதிரியாக இருக்க வேண்டும் — வாருங்கள், இறைவன் முன்பு நின்று நீங்கள் மூவரும் ஒழுக்கத்துடனும், பண்புடனும் வளர அருள் புரிய வேண்டுவோம்'' என்று கூறி, பூஜை அறையை நோக்கி அப்பா முன்னால் நடந்தார். அவரைத் தொடர்ந்து மூவரும் நடந்தனர்.

இரண்டு மிருகங்கள் — ஒரே தலை!

வேலூர்க் கோட்டையில் காணப்படும் இந்தச் சிற்பத்தில் ஒரு யானையும், ஒரு காளையும் இருக்கின்றன. ஆனால், இரண்டுக்கும் தலை ஒன்றுதான்!

உடனே கண்டுபிடித்திருப்பீர்களே! இல்லையானால் 90ஆம் பக்கத்தைத் திருப்புங்கள்.

புகைப்படம்: **விடிவெள்ளி ஆறுமுகம்**



கடவுள் கொடுப்பார்



லட்சுமி ராஜரத்னம்.

பாலு அரச மரத்தடிப் பிள்ளையார் முன்பு வந்து நின்றான். தோளில் உள்ள பையை மேடையின் ஓரமாக வைத்து விட்டுத் தோப்புக் கரணம் போட்டான். பிறகு கண்களை மூடிக்கொண்டு பிள்ளையாரை மனத்திற்குள் தியானம் செய்தான். பிள்ளையாரைத் தரிசனம் பண்ண வந்த சீதாராமன் இக்காட்சியைப் பார்த்தார். கட்வுளிடம் பக்தியாய் உள்ள இந்தச் சிறுவனை அவருக்கு மிகவும் பிடித்தது.

பாலு மிகவும் நல்ல பையன். பொய் சொல்லமாட்டான். அடுத்தவர்களைத் திட்ட மாட்டான். வம்பு தும்புக்குப் போக மாட்டான். நன்றாகப் படிக்கும் பையன். வகுப்பில் முதல் மார்க் வாங்குவான். ஆனால், ஏழைப்பையன். அம்மா பலகாரம் செய்து விற்று வருவாள். அவன் அப்பாவோ ஓர் ஆஸ்துமா நோயாளி. அம்மா பலகார வியாபாரம் செய்து வருவதால் வயிற்றுப் பாட்டுக்குக் கவலை இல்லை.

என்றாவது மழை, காற்று என்று வந்து வியாபாரம் நின்று விட்டால் கொஞ்சம் சிரமப்படுவார்கள். வசதி இல்லாவிட்டாலும் பாலுவின் அம்மா கண்ணம்மா மகனைக் கண்டிப்புடனும், நேர்மையுடனும் வளர்த்து வந்தாள். பாலுவும், சோம்பேறித்தனமாக இருக்க மாட்டான். காலையில் எழுந்து பாடங்களைப் படித்துக் கொண்டே அம்மா சொல்லும் வேலைகளைச் செய்து விடுவான்.

படித்துக்கொண்டே அம்மா சொல்லும் வேலைகளைப் பாலுவால் எப்படிச் செய்ய முடிகிறது? புரியவில்லை அல்லவா? பாலு ஆசிரியர் நடத்திய பாடங்களை மனப்பாடம் செய்துகொண்டிருப்பான். பாலுவின் அம்மா கண்ணம்மாவிடம் சிலர் வாடிக்கையாகப் பலகாரங்களை வாங்கிக் கொள்வார்கள். நோயாளிக் கணவருக்குக் கண்ணம்மா சில சமயங்களில் அவசரமாகப் பணிவிடைகள் செய்ய வேண்டி இருக்கும்.

''பாலு, இதைக் கொண்டு கோடி வீட்டு ராமசாமி அண்ணாச்சி கிட்ட கொடுத்துட்டு ஓடி வாயேன்'' என்று கட்டளை இடுவாள்.

அம்மா தயாராக வைத்திருக்கும் இட்லித் தூக்கையும், சட்னி, சாம்பார் வைத்த சின்னக் கூடையையும் தூக்கிக்கொண்டு போவான். போகும் பொழுது சும்மா போக மாட்டான்.

படித்த பாடங்களை நினைவுக்குக் கொண்டு வந்து மனப்பாடம் செய்து கொண்டே போவான். இப்படித் தான் வேலை செய்து கொண்டே படிப்பான் பாலு.

ஒருநாள். பாலு ராமசாமி அண்ணாச்சிக்குப் பலகாரம் கொண்டு போனான். உள்ளே அண்ணாச்சி குளித்துக் கொண்டு இருந்தார் போலும். கதவைத் தட்டியும் திறக்கவில்லை. அதனால் வெளியே காத்துக் கொண்டு நின்ற பாலு, படித்தவற்றை முணு முணுத்துக் கொண்டு நின்றான்.

கதவைத் திறந்த அண்ணாச்சியைக் கவனிக்காத பாலு, ஒன்றிரண்டு வார்த்தைகளைத் தன்னையும் அறியாமல் சொல்லி விட்டான்.

"பாலு, என்ன சொல்றே? ஏதாவது சுலோகமா? இல்லை, நீயாகப் பேசிக்கறியா?" என்று அன்புடன் கேட்டார்.


"இல்லை அண்ணாச்சி, படிச்ச பாடங்களை ஒப்பிச்சுப் பார்த்துக்கறேன்," என்றான் பணிவாக.


இப்படி ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்காமல் படிக்கும் அவனை அவருக்கு நிரம்பப் பிடித்தது. "வா உள்ளே" என்று அழைத்து, "என்ன படிக்கிறே? மேலே என்ன படிப்பு படித்து முடிக்கப் போகிறாய்?" என்றெல்லாம் கேள்விகளைக் கேட்டார். பளிச் பளிச்சென்று பதிலைச் சொன்னான் பாலு.

"இந்தா, இந்தப் பேனாவை என் அன்பளிப்பா வச்சுக்க" தமது மேஜை மீது வைத்திருந்த பேனாவை எடுத்துக் கொடுத்து விட்டார்.

பாலுவுக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. ஏற்கெனவே அவனுடைய பேனா சரியாக இல்லாமல் கொர கொரவென்று எழுதியது. இங்க் வேறு

ஓவியமாகலாம்





கை எல்லாம் பட்டது. பேனா கேட்டு அம்மாவைத் தொந்தரவு பண்ணக் கூடாது என்றுதான் பேசாமல் இருந்தான். திடீர் என்று பேனா அன்பளிப்புக் கிடைத்ததும், அவனால் பேசவே முடியவில்லை. நன்றி சொல்லக் கூட மறந்து போய் நின்றான்.

''என்ன பாலு, பேனா பிடிச்சிருக்கா? நல்ல ராசியான பேனா! என் அலுவலகப் பரீட்சை எல்லாம் இதாலேதான் எழுதிப் பாஸ் பண்ணினேன். நீ இதிலேயே எழுது. நல்ல மார்க் வாங்குவே,'' என்றார்.

''ரொம்ப நன்றி ஐயா, பேனாவை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு,'' என்று கண்கள் மலரச் சொன்னான்.

வீட்டிற்குப் போய் அம்மாவிடம் சொன்னதும், ''உன்னோட பேனா நல்லாயில்லேன்னு எனக்குத் தெரியும் பாலு. ஆனால், என்னாலே வாங்கித் தர முடியல்லேன்னு பேசாமல் இருந்தேன். கடவுள் உனக்குக் கொடுத்துட்டார். இதுதான் கருணை'' என்றாள் கண்ணம்மா.

அன்றிலிருந்து பாலுவுக்குக் கடவுளின் மேல் உள்ள பக்தி மேலும் அதிகரித்தது. ஆனால், இன்று அவன் முகமோ வாடி இருந்தது. இரண்டு தினங்களாகப் பெய்த மழையினால் பலகார வியாபாரம் நடைபெறவில்லை. பலகாரம் செய்ய வைத்திருந்த தானியங்களில் முதல் தினம் தங்கள் உணவை முடித்துக் கொண்டு விட்டனர். அவன் அப்பாவுக்கோ இழுப்பு அதிகமாகியது. அம்மாவோ கையில் உள்ள காசை மருந்து வாங்கச் செலவு செய்து விட்டாள்.


''நீ பள்ளிக்கூடம் போ, பாலு, எப்படியாவது நடுப்பகல் சாப்பாடு செய்து வைக்கிறேன்'' என்று கூறிக் கண்ணம்மா அவனை அனுப்பி வைத்திருந்தாள்.

பாலுதான் சமர்த்துப் பையன் ஆயிற்றே? தவிர அம்மாவின் கஷ்டம் தெரிந்தவன். அதனால் கிளம்பி வந்து பிள்ளையாரின் எதிரில் பிரார்த்தனை செய்தான்.

''பிள்ளையாரே, பிள்ளையாரே, நான் நல்லாப் படிச்சு பெரிய வேலைக்கு வரணும், என் அம்மா அப்பாவுக்கு உதவியாயிருக்கணும்'' என்றெல்லாம் பிரார்த்தனை செய்தான்.

பால் வடியும் முகத்துடனும், நெற்றியில் சின்னக் கீற்றாக விபூதியுடனும்





நிற்கும் காரணம்?

ஒருவர்: பஸ்லே உள்ள பிரயாணிங்களெல்லாம் நின்னுக்கிட்டே போறாங்களே, ஏன்?

மற்றவர்: பஸ் விடியோவிலே தேசிய கீதம் போடுறாங்களாம்.

—தஞ்சை. சிவ. கனகசபை.

நிற்கும் பாலுவைத் தான் சீதாராமன் பார்த்தார், இல்லையா? பையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு செல்லும் பாலுவை "தம்பி, இங்கே வா" என்று அழைத்தார்.

"என்ன சார்?" என்று பணிவுடன் அவர் முன்னால் போய் நின்றான்.

"அம்மன் கோயிலில் இன்று பூஜை வைத்தேன். உனக்குப் பிரசாதம் தரத் தான் அழைத்தேன். தினமும் இந்த வழியில் காரில் போகும் போது உன்னைப் பார்க்கிறேன். டிரைவர், தம்பிக்குப் பிரசாதம் கொடு" என்றார்.

பாலு பிரமிப்புடன் நின்றான். டிரைவர் கார் டிக்கியைத் திறந்து ஓர் இலையை அரச மரத்தடி மேடை மீது வைத்தார். நெய் சொட்ட கேசரி, வெண் பொங்கல், புளியஞ்சாதம், தயிர் சாதம், வாழைப் பழம் என்று வைத்தார். பாலு கண்கள் மலரப் பார்த்தான்.

"சாப்பிடு தம்பி"

அம்மாவின் குரல் காதுகளில் ஒலித்தது. "கடவுள் கொடுப்பார் பாலு."

"என்ன தம்பி யோசிக்கறே?"

"ஐயா, இதுலே நிறையவே இருக்கு. வீட்டுக்கு எடுத்திட்டுப் போயி, எங்கம்மா, அப்பாவுக்குக் கொடுத்துட்டுச் சாப்பிடறேன், ஐயா" என்றான் கெஞ்சலாக.

"டிரைவர், இன்னும் கொஞ்சம் வச்சு அதை நல்லாக் கட்டிக் கொடு. தம்பி ரொம்ப நல்ல பையன்" என்று அந்தப் பெரியவரான சீதாராமன் பாராட்டினார்.

பாலு அவருக்கு நன்றி கூறிவிட்டு உணவுப் பொட்டலத்துடன் வீட்டுக்கு ஓடினான்.

மணியடிக்க இன்னும் ஐந்து நிமிடங்களே இருந்தன. பாலு வேகமாகப் பள்ளிக் கூடத்துக்கு ஓடிவந்தான். ரமணி தடுப்பதைப் போலக் குறுக்காக வந்து நின்றான்.

"என்னடா, பிள்ளையார் கோயில்லே யாரோ உனக்குப் பிச்சை போட்டாங்களே!" என்று சீண்டினான்.

பாலுவின் முகம் சிவந்தது. சினத்தை அடக்கு என்று அவன் படித்த படிப்பு கட்டளையிட்டது. அறிவுக்கு அடி பணிந்தான்.

"பிச்சை போடல்லே... பிரசாதம் கொடுத்தார் ரமணி" என்றபடியே உள்ளே போய் விட்டான்.

ரமணிக்கு எரிந்தது. 'ஓகோ... எடுக்கிற பிச்சைக்கு இது கௌரவப் பெயரா?" என்று கறுவினான். ரமணிக்கும் நல்ல குணத்திற்கும் வெகு தூரம். அதிலும் முதல் மார்க் எடுக்கும் பாலுவை அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது. ஆன வரைக்கும் பாலுவைத் தன் பக்கம் திருப்ப முயற்சி செய்து தோற்றுப் போனான் அவன்.

"பாலு, பள்ளிக்கூடம் விட்டதும் என்னோட வரியா! ரெண்டு பேரும் போயி ஹோட்டல்லே மசால் தோசை திங்கலாம்" என்று அழைத்தான்.

பாலுவா அவன் வலையில் விழுவான்? "எங்கிட்டே காசு இல்லே ரமணி."

"டேய் எவண்டா இவன்? உங்கிட்ட எவண்டா காசைக் கேட்டான்? பெரீ... ய காசு. எங்கிட்டே இல்லாத காசு... வாடா...ன்னா."

"வேண்டாம் ரமணி, ஒருத்தர் இட்ட எதையும் சும்மா பெறக் கூடாது. நீ இன்னிக்கு எனக்கு வாங்கிக் கொடுத்தா, நாளைக்கு நான் உனக்கு வாங்கித் தரணும்" என்றான் பாலு.

"ஓஹோ! அப்படிச் சொல்லுன்னேன்... அரச மரத்தடியிலே கொடுத்தா, அந்தப் பிச்சையைத்தான் வாங்கிப்பே.ஃ இல்லையா?"

"அது பிச்சை இல்லே ரமணி, பிரசாதம்."

''கௌரவப் பெயர் வச்சுட்டே... சரி... நான் வாங்கித் தர டிபனுக்கு ஒரு உதவி பண்ணு.''

''என்ன உதவி?''

''இந்த அரைப் பரீட்சைக்கு நான் எதுவுமே படிக்கல்லே... நீ மெல்லப் பேப்பரை எங்கிட்ட அனுப்பு'' ரமணி சொல்லச் சொல்ல பாலுவுக்கு உடம்பு நடுங்கியது.

''என்னாலே முடியாது... காப்பி அடிக்கறது ரொம்ப க் கெட்ட பழக்கம். எதுக்காகப் பள்ளிக்கூடம் வரீங்க? படிக்கவா, இல்லே காப்பி அடிக்கவா? வாத்தியார் கண்டுபிடிச்சா என்ன பண்றது?'' என்று பலமாகக் கத்தினான் பாலு.

பாலுவின் கத்தலைக் கேட்ட ரமணிக்கு எரிச்சல் வந்தது. ''எவண்டா இவன்... முடியாதுன்னு போயேன்... அதுக்கு ஏண்டா ஊரைக் கூட்றே... உன்னை வகையா கவனிச்சுக்கறேன்... போடா'' என்று கறுவிக் கொண்டு போனான்.

அவனுடைய கறுவல் இவ்வளவு சீக்கிரம் பலிக்கும் என்று பாலு நினைக்க வில்லை. அன்று பள்ளிக்கூடம் விட்டதும் எதிர் மைதானத்தில் கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்க்கும் பையன்களுடன் பாலுவும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். வீடு திரும்ப நினைத்து மரத்தடியில் வைத்த பையைப் பார்த்த பொழுது திக்கென்றது. மற்றவர்களின் பைகள் இருக்கும் பொழுது அவனுடையதை மட்டும் காணவில்லை!

பாலு அழுது கொண்டே தேடினான். மற்ற மாணவர்களும் தேடிக் களைத்தார்கள். பை கிடைக்கவில்லை.

''நாளைக்கு வாடா பாலு, ஹெச்.எம். கிட்டச் சொல்லி விசாரிக்கலாம்'' என்று ஒரு பையன் ஆறுதல் கூறினான்.

பாலு அழுது கொண்டே போனான்.

மறுநாள். தலைமையாசிரியர் பல பேர்களை விசாரித்தும் ஒன்றும் பலன் இல்லை. எப்படிக் கிடைக்கும்? ரமணி தான் அதை எடுத்து ஒளித்து வைத்து விட்டானே? புத்தகங்களுடன் அவன் எழுதிய கேள்வி பதில் நோட்டுக்கள், வரைந்த நோட்டுக்கள் என்று எல்லாமே போய் விட்டன.

''பாலு, நீ வகுப்புக்குப் போ... ஏதாவது ஏற்பாடு செய்யலாம்'' என்று தலைமையாசிரியர் கூறினார்.

''எங்கம்மாவாலே திரும்பப் பணம் போட்டு வாங்க முடியாது ஸார்... ஆனால் எங்கம்மா ''கடவுள் கொடுப்பார் பாலு. நீ பள்ளிக்கூடம் போ''ன்னு அனுப்பினாங்க ஸார்'' என்றான் அழுது கொண்டே.

வகுப்பில் பாடத்தில் கவனமே செல்லவில்லை, பக்கத்துப் பையன்கள் எல்லாம் புத்தகங்களை அவனுக்குக் காட்டினார்கள். இருந்தாலும் பாலு தன் புத்தகங்களை இழந்ததை நினைத்தே துன்பப்பட்டுக் கொண்டிருந்தான். இரண்டு பீரியட் முடிந்த பொழுது தலைமையாசிரியர் அழைப்பதாக வந்து பள்ளி வேலையாள் கூப்பிட்டான்.

பாலு எழுந்து போனான்.

''பாலு, நீ ஏ செக்ஷனா?''

''ஆமாம் ஸார்.''

''நீ கடவுள் கொடுப்பார்னு சொன்னியே... கடவுள் கொடுத்துட்டாரப்பா.''

''என் புத்தகங்கள் கிடைத்து விட்டதா?''

''இல்லையப்பா. பி. செக்ஷன் பையன் ஒருவனுடைய தந்தைக்கு வடநாட்டுப் பக்கம் மாற்றலானதால் போகப் போகிறான். அங்கு நம் பாடத்திட்டப்படி புத்தகங்கள் இல்லை. அதனால் இந்தப் புத்தகங்களை அவன் உனக்கு வழங்கி இருக்கிறான். அவன் யார் தெரியுமா? இந்தப் பையன் தான்!'' என்று சற்றுத் தள்ளி நின்ற ராமைக் காட்டினார்.

''ராம்... இவனை எனக்குத் தெரியும்... ரொம்ப நன்றி ராம்... ரொம்பத் தாங்க்ஸ் ஸார்'' என்றான் பாலு.

''கடவுள்தான் உனக்குக் கொடுத்திருக்கிறார் பாலு. அவரிடம் பிரார்த்தனை செய்'' என்றார் தலைமையாசிரியர்.

கையில் புத்தகங்களுடன் முகத்தில் மகிழ்ச்சி பொங்க வந்த பாலுவைக் கண்ட ரமணிக்கு ஒன்றும் புரியவில்லை. அந்தப் பீரியட் முடிந்து அடுத்த பீரியட் ஆசிரியர் வருவதற்குள் ரமணி பாய்ந்து வந்து பாலுவின் பக்கத்தில் நின்று விசாரித்தான்.

''ஏதுடா புத்தகங்கள்?''

பாலு அமைதியாகப் பார்த்தான். ''கடவுள் கொடுத்தார்'' என்றான். அவன் கண்களில் நன்றியும் பக்தியும் கலந்து மின்னின். ரமணி முதல் தடவையாகச் சிந்தித்தான்.

முன்கோபி ராஜா



வாஞ

வெங்காயபுரம் ராஜாவுக்கு எப்போதுமே முன் கோபம் அதிகம். அதனாலே அவரை எல்லோருமே 'முன் கோபி ராஜா', 'முன்கோபி ராஜா' என்றே அழைப்பார்கள். அவருடைய உண்மையான பெயர் என்ன என்பது எவருக்குமே தெரியவில்லை. ஆகையால், நாமும் அவரை 'முன் கோபி ராஜா' என்றே அழைப்போமா? சரி.

முன்கோபம் மிக அதிகமாக இருந்தாலும், அவருக்கு மூளை மிகக்கொஞ்சமாகவே இருந்தது.

அவருக்கு ஒரு மந்திரி இருந்தார். அவர் பெயர் அறிவொளி. பெயருக்கு ஏற்றபடி நல்ல அறிவாளியாக இருந்தார்; மிகவும் நல்லவர்.

முன்கோபி ராஜா திடும்திடுமென்று ஏதாவது முடிவு செய்வார். அது கெட்ட முடிவு என்றால், பட்டென்று சொல்லிவிடுவார் அந்த மந்திரி.

உடனே முன்கோபி ராஜாவுக்கு மூக்குக்குமேல் கோபம் வந்துவிடும். "நான் ராஜ’ ா? நீர்ராஜாவா? நான் சொல்கிறபடிதான் நீர் நடக்க வேண்டும்'' என்று சிறுவார்.

''நல்லது எது? கெட்டது எது? என்று எடுத்துச் சொல்லி, நல்லதைச் செய்யச் சொல்வதுதானே மந்திரியுடைய வேலை?'' என்று மந்திரி சமாதானமாகச் சொல்வார்.

'' ஆமாம், பெரிய்ய வேலை!'' என்று அலட்சியமாய்க் கூறுவார் முன்கோபி ராஜா.

ஒருநாள் அரண்மனை ஜோஸிய ரிடத்திலே ''ஏனய்யா, வரவர நம்ம நாட்டிலே பஞ்சம் அதிகமாயிருக்கிறதே! இதற்கு என்ன செய்யலாம்?'' என்று ராஜா கேட்டார்.

ஜோஸியர் பஞ்சாங்கத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஏதேதோ கணக்கெல்லாம் போட்டுப் பார்த்தார். பிறகு, ''நம்ம காளி கோயிலில் 51 சேவல்களைப் பலி கொடுத்தால் பஞ்சம் பஞ்சாய்ப் பறந்துவிடும்'' என்றார்.

அப்போது பக்கத்திலிருந்த மந்திரி சொன்னார்:

''அரசே, பஞ்சம் தீர வேண்டுமானால், விவசாயத்தைப் பெருக்க வேண்டும்; நெல் விளைச்சலுக்கு நல்ல உரம் போட வேண்டும். குளம் குட்டைகளிலே தண்ணீர் தங்குகிற மாதிரி ஆழமாக வெட்ட வேண்டும்...''

மந்திரி சொல்லி முடிக்கவில்லை.

''அட சட், வாயை மூடும். இல்லாத போனால், பிளாஸ்திரி போட்டு வாயை மூடிவிடுவேன்.... எனக்குத் தெரியும் என்ன செய்ய வேண்டுமென்று... நீர் என்ன, என்னைவிட அறிவாளியா? உமது தலையும் என் தலையும் ஒரே அளவுதானே இருக்கின்றன, உமக்கு மட்டும் எப்படி அறிவு அதிகமாக இருக்க முடியும்?'' என்று மிக மிகக் கோபமாகக் கேட்டார் ராஜா.

மந்திரி மிகவும் பொறுமைசாலிதான். இருந்தாலும் எத்தனை நாளைக்

குத்தான் இப்படிப் பொறுத்துப் பொறுத்துப் பார்ப்பார்? பொறுமை இழந்த அவர், ''அரசே, இனியும் நான் தங்களிடம் மந்திரியாக இருக்க விரும்பவில்லை. இன்றே என் பதவியை ராஜினாமாச் செய்கிறேன்'' என்று கூறி, அன்றைக்கே மந்திரி வேலைக்கு முழுக்குப் போட்டுவிட்டு வீடு போய்ச் சேர்ந்தார்.

''இவர் போனால் என்ன? இவரை விட மிக மிக மூளையுள்ளவரை விரைவிலே நியமித்துக் காட்டுகிறேன்'' என்று அலட்சியமாகக்கூறினார்ராஜா.

பிறகு, வெகுநேரம் யோசனையில் மூழ்கினார். திடீரென்று, 'அதுதான் சரி. பெரிய மண்டையிருக்கிற ஒருவரை மந்திரியாக்கி விடலாம். மண்டை பெரிதாக இருந்தால், நிச்சயம் மூளையும் அதிகமாக இருக்கும். மூளை அதிகமாக இருந்தால் நிச்சயம் அறிவும் நிறைய இருக்கும் என்ற முடிவுக்கு வந்தார்.

மறுநாளே நாடு முழுதும் தண்டோரா போடச் சொன்னார்.

'டமர டமர டம் டமர டமர டம். இதனால் அறிவிப்பதென்னவென்றால், யார் யாருக்கு மண்டை பெரிதாயிருக்கிறதோ, அவர்களெல்லாம் வருகிற வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அரண்மனை மண்டபத்திற்குவந்துவிட வேண்டும். அவர்களிலே ஒருவரை நம் ராஜா மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப் போகிறார்... தேர்ந்தெடுக்கப் போகிறார்... டும், டும், டும்; டும் டும் டும்.'

இந்த அறிவிப்பைக் கேட்டதும், தலை பெரிதாயிருந்தவர்களெல்லாம் அரண்மனை நோக்கி வெள்ளிக்கிழமை காலையில் வந்து சேர்ந்தார்கள். மொத்தம் 43 பேர் இருந்தார்கள்!

ராஜா நிறையச் சணல் கயிறு கொண்டுவரச்சொன்னார். ஒவ்வொருவர் தலையையும் சணல் கயிற்றால் சுற்றளவு பார்த்து அந்த அந்த அளவுக்குச் சணல் கயிற்றைத் தனித்தனியாக வெட்ட வேண்டுமென்பது அவரது திட்டம்!

அப்போது அவர் அருகிலிருந்த மெய்க் காப்பாளன், ''மகாராஜா, இஞ்ச் டேப்பும், தாளும், பென்சிலும் கொண்டு வரட்டுமா? அளவைப் பார்த்துத்தாளிலே குறித்துக்கொள்ளலாம்'' என்றான்.

உடனே ராஜாவுக்குச் 'சர்'னு கோபம் வந்து விட்டது. ''நீ ராஜாவா? நான் ராஜாவா? எனக்கா புத்தி சொல்கிறாய்! அதிகப்பிரசங்கி. இன்றிலிருந்து நீ என் மெய்க்காப்பாளன் இல்லை! வாயில் காப்பாளன்தான்! நேராக அரண்மனை வாசலுக்குப் போய் அங்கே நில்!'' என்று அவனை அடித்து விரட்டினார்.

அப்புறம் ஒவ்வொரு தலையையும் சணலால் அளந்து அந்த அளவுக்குச் சணலைத் தனித்தனியாக வெட்டினார். வெட்டிய துண்டுகளை அங்கேயிருந்த ஒரு நீண்ட மேஜைமேல் வைத்தார். பிறகு, எது மிகவும் நீளமானது என்று பார்த்தார். எல்லாவற்றையும் விட ஒன்று மிக நீளமாக இருந்தது.

''ஆ! இந்த அளவுத் தலைக்காரர்தான் இனி என்னுடைய மந்திரி!'' என்று குதித்தார். ஆனால், அந்த அளவு யாருடையது? அதுதான் தெரியவில்லை. அதில்தான் எந்த அடையாளமும் இல்லையே! அதனால் அவர் அந்தச் சணலை எடுத்துப் போய், ஒவ்வொரு தலையிலேயும் வைத்து வைத்துப் பார்த்தார். 41—வது ஆளுக்குத்தான் அது சரியாக இருந்தது! உடனே அவரையே மந்திரியாக்கிவிட்டார். மற்றவர்களையெல்லாம் திருப்பி அனுப்பி விட்டார்.

அந்த மண்டை பருத்த மந்திரியிடம், ''மந்திரி, நம் நாட்டு மக்களிலே பெரும்பாலோர் எலும்பும் தோலுமாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நன்றாகக் கொழு கொழு என்று ஆக வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்? உங்களுக்குத்தான் அதிகமான மூளை இருக்கிறதே! அதை உபயோகித்து ஒரு நல்ல யோசனையாகக் கூறுங்கள். அதன்படி செய்யலாம்'' என்றார் ராஜா.

உடனே அந்த மண்டை பருத்த மந்திரி சிறிதுகூடத் தயங்கவில்லை. "இது ரொம்பச் சுலபங்க. நல்லா கொழு கொழுன்னு இருக்கிறவங்களையெல்லாம் தண்டோராப் போட்டு வரவழைப்போம். அவங்களிலே ரொம்பக் கொழு கொழுன்னு இருக்கிற சில பேரைத் தேர்ந்தெடுப்போம். அவங்க எப்படிக்கொழுகொழுன்னு ஆனாங்க, அப்படி ஆகணும்னா என்ன என்ன செய்யணும்னு அவங்க ஒருத்தரை ஒருத்தர் கலந்து ஆலோசிச்சு முடிவு சொல்லட்டும்" என்றார்.

"அப்படியா! சரி, இதோ இன்றைக்கே தண்டோராப் போடச் சொல்றேன்," என்றார் முன்கோபி ராஜா.

அந்த நாட்டிலேதான் பஞ்சமாயிற்றே! தொந்தி பருத்த ஆள் எங்கே கிடைப்பார்கள்? இருந்தாலும், இந்தச் செய்தி அண்டை அயலில் உள்ள நாடுகளுக்கு எட்டவே, குறிப்பிட்ட நாளில் நன்றாகத் தொந்தி பருத்த 17 பேர் நடக்க முடியாமல் நடந்து அரண்மனைக்கு வந்தார்கள்.

"மந்திரி, சணல் கயிறு எங்கே? கொண்டு வரச் சொல்லுங்கள். இவர்களது தொந்திகளை அளந்து பார்ப்போம்" என்றார் ராஜா.

"அரசே, அதெல்லாம் வேண்டாம். இதோ இப்படிச் செய்தே தேர்ந்தெடுத்து விடலாம்" என்று சொல்லிவிட்டு அந்த மண்டை பருத்த மந்திரி என்ன செய்தார் தெரியுமா?

முதலிலே ஒருவரின் பின்புறமாகப் போய் நின்றார். தம் இரு கைகளாலும் அந்த மனிதரின் தொந்தியை வளைத்துப் பிடித்தார். மந்திரியுடைய முன் கைகள் இரண்டும் ஒன்றை ஒன்று தொட்டு விட்டன.

உடனே அவரை இடப்பக்கமாக நிற்கச் சொன்னார். இன்னொருவரின் தொந்தியை வளைத்துப் பிடித்தார். அவருடைய முன் கைகள் இரண்டும் ஒன்றை ஒன்று தொடவில்லை.

உடனே அவரை வலப்பக்கமாக நிற்க வைத்தார்.

இப்படி ஒவ்வொருவராய்ப் பார்த்தார். இடப்பக்கத்தில் 12 சின்னத் தொந்திக்காரர்களும், வலப்பக்கத்திலே 5 பெரிய தொந்திக்காரர்களும் நின்றார்கள்.



பெரிய தொந்திக்காரர் ஐவரையும் தேர்ந்தெடுத்து அரண்மனையிலேயே ஒரு மண்டபத்திலே தங்கச் சொன்னார் முன்கோபி ராஜா. எப்படி நாட்டிலே இருக்கிற பஞ்சத்தைப் போக்குவது என்று அவர்கள் கலந்து பேசி விரைவிலே தக்க ஆலோசனை கூறவேண்டும் என்று உத்தரவு போட்டார்.

பெரிய தொந்திக்காரர்கள் ஐவரும் நன்றாகச் சாப்பிடுவார்கள்; சாப்பிட்டவுடனே தூங்குவார்கள்; தூங்கி எழுந்தவுடனே சாப்பிடுவார்கள். இப்படியே காலங்கடத்தி வந்தார்கள். ராஜா ஆள் அனுப்பிக் கேட்கிற போதெல்லாம், கலந்து பேசிச் சீக்கிரம் முடிவு சொல்வதாகத் தகவல் அனுப்பினார்கள்.

இப்படி ஒரு வாரம் ஓடிவிட்டது. ஒரு நாள் ராஜா அந்தப்புரத்திலே இருக்கிறபோது, அரண்மனைத் தலைமைச் சமையல்காரர் கையில் கரண்டியுடன் ஓடிவந்து, "மகாராஜா, மகாராஜா, அரிசி, பருப்பெல்லாம் தீர்ந்து போச்சு. ஒரு மாசத்துக்கு வாங்கி வச்சதை ஒரே வாரத்திலே அந்த

அஞ்சு பேரும் தீர்த்துட்டாங்க மகா ராஜா'' என்று முறையிட்டார்.

உடனே ராஜாவுக்கு அபாரமான கோபம் வந்து விட்டது. அதைவிட அவருடைய பட்டத்து அரசிக்குக் கோபம் பீறிட்டது. ''நாட்டிலேதான் பஞ்சம் என்றால், நம் அரண்மனை யிலுமா பஞ்சம்?'' என்று அலறினாள்.

ராஜா, ராணியைச் சமாதானப் படுத்திவிட்டு நேராக அந்த ஐவரும் இருந்த மண்டபத்திற்கு வேக வேக மாகச் சென்றார். குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த அவர்களை மிகுந்த சிரமப்பட்டு எழுப்பி, ''என்ன இது! இப்படி ஒரு வாரமாக வயிறு முட்டத் தின்றுவிட்டுத் தூங்குகிறீர் களே! என்ன முடிவு பண்ணினீர் கள்?'' என்று ஆவேசமாகக் கேட் டார்.

அவர்கள் எழ முடியாமல் எழுந் தார்கள். நடுநடுங்கியபடி நின்றார்கள். என்ன சொல்வதென்று புரியாமல் விழி விழி என்று விழித்தார்கள். ராஜா வின் கோபம் மேலும் அதிகமாகிவிட் டது.

''தண்ட சோற்றுத் தடியன்களா! உங்கள் தொந்திகளைக் கலக்குகிறேன், பாருங்கள்'' என்று கூறிக் கொண்டே, ராஜா இரண்டு கைகளில் உள்ள விரல் களையும் மடக்கிக் கொண்டு, இருவரின் அருகிலே சென்றார். உடனே அவர்கள், ''ஐயோ! அப்பா!'' என்று அலறிக் கொண்டு ஓட முடியாமல் ஓடினார்கள். அவர்களைத் தொடர்ந்து மற்ற மூவரும் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடினார் கள்.

''தொலைந்தார்கள். இனியும் இவர் களை வைத்துச் சோறு போட்டால், பஞ்சம், கடும் பஞ்சமாகிவிடும்,'' என்று ஆறுதல் அடைந்தார் ராஜா.

உடனே அவர் மண்டை பருத்த மந் திரியை அழைத்து வரச் சொன்னார்.

''ஓய், உமது யோசனையைக் கேட் டால் உருப்பட்டாற் போலத்தான். பஞ்சம் போக வழி கேட்டால், பஞ்சம் அதிகமாக வழி சொல்லிவிட்டீரே! அந்த ஐந்து தூங்குமூஞ்சித் தடியன் களும் சேர்ந்து அரண்மனைச் சமையல் சாமான்களையே ஏப்பம் விட்டு விட் டார்கள். அவர்களிடமிருந்து ஒரு



யோசனையும் வரவில்லை. நான் மிரட்டிக் கேட்டதும் அவர்கள் திருட்டு விழி விழித்தபடி திரும்பி ஓடிவிட்டார்கள். இப்படிப்பட்ட யோசனையைச் சொல்லவா உம்மை மந்திரி ஆக்கினேன்! உமது மண்டைதான் பெரிதாயிருக்கிறது. உள்ளேயிருப்பதெல்லாம் களிமண், களிமண், வெறும் களிமண்!'' என்று கூறிக்கொண்டே, அந்த மந்திரியின் மண்டையை இரண்டு கைகளாலும்பிடித்துப்பலங்கொண்ட மட்டும்அமுக்கினார் முன்கோபிராஜா.

''ஐயோ! எனக்கு என்னங்க தெரியும்? பிச்சை எடுத்துக்கிட்டிருந்த என்னை நீங்கதானே மந்திரியாத் தேர்ந்தெடுத்தீங்க? இப்போ என்னைச் சும்மா விட்டிடுங்கோ. எனக்கு மந்திரி பதவியும் வேண்டாம்; மண்ணாங்கட்டியும் வேண்டாம்'' என்று அழாக் குறையாகக் கெஞ்சினார் அந்த மனிதர்.

அப்புறம்...?

அவர் ஓடிப் போய் விட்டார். ராஜாவுக்குப் புத்தி வந்தது. பழைய மந்திரி அறிவொளியை அழைத்துவரச் சொல்லி அவரையே-மீண்டும் மந்திரியாக்கி விட்டார்.

அப்பொழுது மந்திரி அறிவொளி சொன்னார்:

''அரசே, கோபம் குடியைக் கெடுக்கும் என்பார்கள். சாதாரண ஒரு மனிதனுடைய கோபம் அவனுடைய மனைவி மக்கள், அக்கம் பக்கத்திலுள்ளவர்களைத்தான் கெடுக்கும். ஆனால், தாங்களோ ஒரு ராஜா. இந்த ராஜ்யத்திலுள்ள எல்லாக் குடிமக்களும் உங்கள் குடும்பம் போல். ஆகையால், கோபம் கூடாது'' என்றார்.

''மந்திரி, இனி உம்முடைய யோசனையைக் கேட்டுத்தான் எதுவும் செய்வேன்'' என்றுகூறிமந்திரியைக்கட்டிப் பிடித்து, அவர் முதுகிலே தட்டிக் கொடுத்தார். அன்று முதல் அவருடையமுன்கோபமும்மெல்லமெல்லப் பறக்கத் தொடங்கியது!

நண்பரை நாட...

1. நண்பரைத் தேர்ந்தெடுக்குமுன் கண்களை நன்கு திறந்து வைத்துக் கொள்ளுங்கள்; தேர்ந்தெடுத்தபின் சிறிதே மூடிக் கொள்ளுங்கள்!

2. நண்பரைப் பற்றி யாரும் அவதூறு சொன்னால், ஆராயாது நட்பை முறித்து விடாதீர்கள்.

3. நண்பரின் யோசனையைக் கேட்டுக் கொள்ளுங்கள்; முடிவை நீங்கள் எடுங்கள்!

4. நடுநடுவே ஏதாவது 'சின்னப் பரிசு' கொடுங்கள்!

5. நண்பரிடம்விளையாட்டுக்காகக் கூடப் 'பொய்' சொல்ல வேண்டாம். அதனால், அவர் உங்களை நம்ப மாட்டார்.

6. அடிக்கடி அவரிடம் 'தொண தொண'க்க வேண்டாம்!

7. வெளியூர் செல்ல நேரிட்டால் நண்பரை நலம் விசாரித்துக் கடிதம் எழுதுங்கள்.


8. உங்கள் வீட்டில் நடைபெறும் விசேஷங்களுக்கு, அவரை மறக்காமல் வரவழைத்து உபசரியுங்கள்.

9. உங்கள் வீட்டுப் பெரியோர்கள் அவரை விரும்பாவிடில், வீட்டுக்கு வரவழைப்பது கூடாது.

10. நண்பருக்கு உடல்நலம் சரியில்லாவிடில், அவரை உடனே பார்த்து ஆறுதல் சொல்லுங்கள்.

11. நட்பு ஒரு வரப்பிரசாதம், அது நல்லதாக இருக்கும் பட்சத்தில்.

—ஆர் நாச்சியப்பன் (75).



சகுனம் என்பதெல்லாம்...

எஸ். கனகவல்லி சாரங்கபாணி

க்ரீம் கலர் ஸஃபாரி சூட் அணிந்து அமர்க்களமாய் டிரஸ் செய்து கொண்டு உற்சாகமாகக் கிளம்பினான் ராஜன். அவனுடைய பள்ளி மாணவர்கள் அன்று ம. வி. நிலையத்தில் வினாடி — வினா நிகழ்ச்சியில் பங்கு கொள்கிறார்கள். நகரின் நான்கு பள்ளிகள் பங்கு பெறும் அந்நிகழ்ச்சியில் ராஜன், அவன் பள்ளியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களில் ஒருவன்.

"ராஜன், பர்ஸ், கர்சீஃப் எடுத்துக் கொண்டாயா? சுவாமிக்கு நமஸ்காரம் செய்தாயோ? ஜாக்கிரதையாகப் போயிட்டு வா. புத்திசாலித்தனமாய் யோசித்துச் சரியாய்ப் பதில் சொல்லு!" என்றாள் பாட்டி.

"ஆகட்டும்பாட்டி. அம்மா, தாத்தா, நான் போய்விட்டு வருகிறேன்," உற்சாகமாய் ஷூக்களை அணிந்து கிளம்பினான் ராஜன். அவன் வாசற்படி தாண்டுமுன், 'அக்கூ...!' என்று பலமாகத் தும்மினாள் தங்கை பரிபூரணா.

"முட்டாள் பெண்ணே, அவன் வெளியே கிளம்பும் சமயம் பார்த்து என்ன தும்மல்...? சுத்த அபசகுனம்... உள்ளே ஓடு... ராஜன், நீ வாப்பா... ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டு, சுவாமிக்கு நமஸ்காரம் போட்டுவிட்டுக் கிளம்பு... கிளம்பற சமயத்துக்கு அபசகுனமாட்டம்... சரியான அசட்டுப் பொண்ணு...' பாட்டி பொரிந்து கொட்டினாள். பரிபூரணா, விம்மலுடன் உள்ளே போனாள்.

"ராஜன், இங்கே வா... உன் பாட்டி சரியான கர்நாடகம்... சகுனம், அபசகுனம்... அது இதுன்னு மூட நம்பிக்கையுடையவள்.... நீ வளரும் பயிர்... புதிய பாரதத்தைத் தோளில் சுமக்க வேண்டிய நாளைய தலைவன்... நீ மூட நம்பிக்கைகளைப் பற்றி நினைக்கக் கூடாது. சொல்லு, தும்மல் எப்படி வருகிறது தெரியுமோ?" என்றார் தாத்தா.

இதற்குள் ராஜனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்த பாட்டி, தாத்தா கூறியதைக் கேட்டு முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டாள். தண்ணீரைக் குடித்து முடித்த ராஜன், "தெரியாது தாத்தா!" என்றான் பணிவாய்.

தாத்தா ராஜனைத் தட்டிக் கொடுத்தார். "தும்மல் எந்த வகைச் சகுனமுமல்ல. அதற்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் சொல்கிறேன் கேள். இருமல் காரணமாகவோ, வேறு ஏதேனும் ஒரு தடைப்பொருள், தூசி, துணுக்கு, போன்றவை, மூச்சுக் குழாயில் நுழைந்துவிட்டாலோ, தும்மல் ஏற்படும். அப்படி ஒரு தூசி, துணுக்கு நுழையும் போது நம் உடல் முழுவதிலுமே, ஒரு நடுக்கமும், குறுகுறுப்பு உணர்ச்சியும் தோன்றும். அந்தக் குறுகுறுப்புத் தாங்காமல், தடைப்பொருளை நீக்க—ஒரு அழுத்தத்துடன் காற்று வெளிப்பட்டு மூச்சுக்குழலை விட்டு வெளிவருகிறது. அதுவே தும்மல். தும்மலால் நம் உடல் முழுவதும் நடுங்குகிறது. தும்மியவுடன், மூச்சுக் குழலில் இருந்த தடைப்பொருள் நீங்கியதால் ஒரு வகை, சுக உணர்வு உண்டாகும். அது சரி, ராஜன், இப்போது பரிபூரணா தும்மியபோது கண்களை மூடிக்கொண்டாளே கவனித்தாயோ... பரிபூரணா மட்டுமல்ல... நாம் எல்லோரும் தும்மும் போது கண்களை மூடிக் கொள்வோம். நாம் முயன்றாலும் கண்களைத் திறந்து வைத்துக் கொள்ள முடியாது. ஏன் தெரியுமா? காற்று அழுத்தத்துடன் அந்தத் தடையான தூசித் துணுக்கை மூச்சுக் குழலை விட்டு வெளிப்படுத்தும்போது ஒரு மணிக்கு நூறு மைல் வேகத்தில் அழுத்தமாய்த் தள்ளுகிறது. அந்த வேகத்தால் நம் கண்கள் தாமாகவே மூடிக் கொள்கின்றன. உடம்பும் அதிர்கிறது. நீ எவ்வளவு



முயற்சி செய்தாலும் தும்மும் போது கண்களைத் திறந்து வைத்திருக்க முடியாது. இயல்பாகவே அது மூடிவிடும். சரி, இப்பொழுது மனதைரியத்துடன் போய் வா...!'' என்றார் தாத்தா.

''சரி தாத்தா. நீங்கள் கூறியதை நான் நன்றாகப்புரிந்து கொண்டேன். போய் வருகிறேன்'' என்று கிளம்பிச் சென்றான் ராஜன்.

வீடு திரும்பிய ராஜன், உற்சாகமும், பெருமிதமுமாக வீட்டுக்குள் நுழைந்தான்.

''தாத்தா.... ஆ...!'' என்று ராகத்துடன் அழைத்தான்.

தோட்டத்தில் ரோஜாச் செடியின் மொட்டுக்களை ஆராய்ந்து கொண்டிருந்த தாத்தா, புன்னகையுடன், ''என்ன ராஜன், என்ன சந்தோஷம்? க்விஸ் நிகழ்ச்சியில் நல்ல முறையில் பதில் சொன்னாயா?'' என்று கேட்டார்.

''ஆமாம், தாத்தா... க்விஸ் ப்ரோக்ராமில் முதல் கேள்வியே 'தும்மல் எதனால் ஏற்படுகிறது?' என்பதுதான். நான் ஒருவன்தான் சரியான விடை சொன்னேன். அதுவும் 'காலையில் நீங்கள் விளக்கியதால்தான்...!' என்றான் ராஜன்.

''அதுவும் உன் தங்கை தும்மியதால்தான்... அவள் தும்மாவிட்டால் நான் உனக்கு விவரித்திருப்பேனா? இப்போது புரிகிறதா....? தும்மல் உன் பாட்டி கூறியது போல் கெட்ட சகுனமல்ல... சொல்லப் போனால் உனக்கு நன்மையே செய்திருக்கிறது...'' என்றார் தாத்தா.

''உண்மைதான் தாத்தா. நான் இப்போதே போய் பரிபூரணாவிற்கு நன்றி சொல்ல வேண்டும்'' என்று உள்ளே சென்றான் ராஜன்.



பழைய கதை;
புதிய பாடல்

ஓய்வும் உணவும்

குழந்தைக்கவிஞர்



"பச்சடி கூட்டு, பொரியல் எனப்
பற்பல கறிகள் இனி வேண்டாம்.
நிச்சயம் பாயசம், வடை வேண்டாம்
நீ என் சொற்படி நடந்திடுவாய்.

அப்பளம் கூட்டு ரசம் வைத்து
அத்துடன் ஒரு கறி சமைத்திடுவாய்.
முப்பது வருடம் பணியாற்றி
முற்றிலும் ஓய்வு பெற்றேன் நான்.

இன்றுடன் ஓய்வு பெற்றதனால்,
இனியும் எதற்கு அறுசுவைகள்?"
என்றனர் நீதி பதி— ராஜன்,
எதிரே நின்ற முருகனிடம்.

மனைவியை இழந்த ராஜனுக்கு
வாய்க்கு ருசியாய்ச் சமைக்கும் அவன்,
பணிவுடன் 'சரி சரி' என்றுடனே
பலமாய்த் தலையை ஆட்டினனே.

எசமானுடைய விருப்பம் போல்
இரண்டு நாட்கள் எளிமையுடன்
சமையல் முருகன் பரிமாறச்
சாப்பிட் டனரே ராஜனுமே.

அடுத்த நாளில் பகல்உணவை
அருந்திப் படுத்த ராஜனுக்கே
எடுத்தது தாகம் ஆதலினால்,
எழுந்து சென்றனர் அடுக்களைக்கே.


அடுக்களை சென்ற ராஜனையே
அங்கே தெரிந்த காட்சியுமே
திடுக்கிட வைத்தது! அருகினிலே
சென்றார்; உற்றுப் பார்த்தனரே.

பொரியல், கூட்டு, பச்சடியும்
பூந்தி, வடையும் சாம்பாரும்
பொரித்த அப்பளம், தயிருடனே
புசித்திடும் முருகனைக் கண்டனரே!

"எனக்கே எளிய உணவளித்தாய்
இதுபோல் தின்கிறாய் அறுசுவை நீ.
உனக்கே எத்தனை திமிர்?" என்றே
உரத்த குரலில் கேட்டனரே.

"ஓய்வு பெற்றீர் நீர், அதனால்
உணவைக் குறைத்தீர். ஆனாலோ,
ஓய்வு பெறாது இருக்கும்நான்
உணவைக் குறைப்பது ஏன்?" என்றான்.

மேடையில் ஓர் எலும்புக் கூடு



தில்லையாடி ராஜா

திரை விலகியது.

ஒருநடுத்தரவயதுமனிதர்தோன்றினார்.

ஜிப்பா அணிந்திருந்தார்.

தடிமனான கண்ணாடி போட்டிருந்தார்.

இப்போது நீங்கள் பார்க்கப் போவது ஒரு எலும்புக் கூடு ஆடப் போகும் டிஸ்கோ நடனம்.

'எலும்புக் கூடு டிஸ்கோ நடனம் ஆடுவதா?' மனத்திற்குள் எனக்கு ஆச்சரியம்.

மேடையில் விளக்கு அணைந்து, மீண்டும் உயிர் பெற்ற போது —

என்ன ஆச்சரியம்?

என் கண்களையே நம்ப முடியவில்லை.

இதென்ன விட்டலாச்சார்யா படமா!

மேடை ஒளி வெள்ளத்தில் மூழ்கியிருக்க —

டிரம்கள் உச்ச ஸ்தாயியில் அதிர —

ஒரு எலும்புக் கூடு, இசைக்கேற்றபடி 'டிஸ்கோ' டான்ஸ் ஆடிக்கொண்டிருந்தது.

மக்கள் அனைவரும் கை தட்டி ரசித்தனர்.

'விசில்' சத்தமும் கேட்டது.

'எலும்புக் கூட்டிற்கு உயிர் ஏது?'

'எப்படி டான்ஸ் ஆடுகிறது?'

என்பதைப் பற்றி யாரும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை.

நானும், மகிழ்ச்சியில் கை தட்டி ரசித்த போதுதான் அந்த எலும்புக் கூட்டின் டிஸ்கோ டான்ஸ் ஓய்ந்தது.

"இந்தக் கூட்டத்தில் ஸ்ரீதர் என்ற பையன் இருக்கிறானா? ஏ. எஸ். வி. பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கும், அவன் தந்தை பெயர் சரவண முத்து."

எலும்புக் கூடு குரல் கொடுத்து ஓய்ந்தது.

எலும்புக் கூடு டான்ஸ் ஆடுவதோடு மட்டுமல்லாமல் பேச வேறு செய்கிறதே! அது எப்படி?

அதுவும் என் பெயரையும் என் தந்தையின் பெயரையும் சரியாகச் சொல்கிறதே! அப்படியென்றால் அந்த எலும்புக் கூடு யார்?

எலும்புக் கூடு மீண்டும் பேச ஆரம்பிக்கும் போது என் சிந்தனை அறுபட்டது.

"அந்தப் பையன் கூட்டத்தில் இருந்தால் மேடைக்கு வரவும்".

அவ்வளவுதான்.

என் நண்பர்கள் என்னைக் கிளப்ப ஆரம்பித்து விட்டனர்.

''ஏய் ஸ்ரீதர், எழுந்திருடா!''

''எலும்புக் கூடு கூப்பிடுது''.

''போடா மேடைக்கு''.

''உன்னையும் டான்ஸ் ஆடக் கூப்பிடுதோ என்னவோ!''

எந்திரம் போல் நடந்தேன் மேடையை நோக்கி.

என் நண்பர்கள் ஆரவாரம் செய்தனர். கரவொலி எழுப்பினர். கோஷம் போட்டனர்.

மேடைக்குச்சென்ற போது —

''வா, வா'' என்றது எலும்புக் கூடு.

என் இதயம் பயத்தில் அடித்துக் கொண்டது.

''பயப்படாதே! என் அருகில் வா!'' என்றது எலும்புக் கூடு.

அருகில் சென்றேன்.

''உனக்குத் தாத்தா இருக்கிறாரா?''

தாத்தா —

என் தாத்தா என்னிடம் எவ்வளவு அன்பாய் இருப்பார்? ஆசையாய் சாக்லெட் வாங்கித் தருவார். நான் கூப்பிடும்இடத்துக்கெல்லாம்அழைத்துச் செல்வார்? கேட்டதெல்லாம் பிரியமாய் வாங்கித் தருவார்? என்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தார்? அவர்தான் குளிக்கப் போகும் போது ஆழமான குளத்தில் மூழ்கி இறந்து விட்டாரே?

கண்களில் நீர் சுரந்தது.

''தாத்தா இல்லே. செத்துப் போய்ட்டார்'', என்றேன்.

''தாத்தா மேல் உனக்குப் பிரியம் உண்டா?''

''ஆமாம். எனக்குத் தாத்தான்னா ரொம்பப் பிடிக்கும். தாத்தா என் மேலே உயிரையே வச்சிருந்தார்!'' என்றேன்.

''உன் தாத்தா வேறு யாருமல்ல. நான்தான் உன்னோட தாத்தா ரகுராம ஷண்முகம்''.

அவ்வளவுதான்!

ஓடிச் சென்று கட்டி அணைக்க முற்பட்டேன்.

அந்த எலும்புக் கூடு மறைந்து விட்டது!

ஆச்சரியம் ஒரு பக்கம்.

வருத்தம் ஒரு பக்கம்.

''தாத்தா, என்னை விட்டுட்டுப் போகாதே! நானும் உன்னோட வர்றேன்''.

நான் அழ ஆரம்பித்து விட்டேன்.

''டேய்! ஸ்ரீதர், ஏண்டா அழறே?'' விளக்கைப் போட்டுவிட்டு அப்பா அருகில் வந்து நின்றார்.

விழித்துப் பார்த்தேன்.

''கனவு கண்டுட்டு பயந்துட்டியா?''

கனவா?

காலையில் பள்ளியில் எலும்புக் கூட்டைப் பார்த்தேன்.

அறிவியல் பாடம் நடத்தும் போது ஆசிரியர் காட்டினார்.


இன்று தாத்தாவின் திதி,

இரண்டும் நினைவிலிருந்து கனவுகளாக வந்து விட்டனவோ?

இருக்கலாம்.

நான் மீண்டும் தூங்க முற்பட்டேன்.

விடை: இரண்டு மிருகங்கள் — ஒரே தலை!



உருவகக் கதைகள்

மரமும் வேரும்



ஒரு நாள் ஒரு புளிய மரத்தின் வேர் தனக்குள் நீண்ட நேரம் சிந்தனை செய்தது. 'நான் தாங்கி நிற்கிறேனே இந்தப் புளியமரம், இதன் கிளைகள் தரைக்கு மேல் தழைத்து நிற்கின்றன. அவை தங்களைச் சுற்றிலும் உள்ள காட்சிகளைக் கண்டு களிக்கின்றன. பறவை நண்பர்களிடம் பேசி மகிழ்கின்றன. தேன் சிட்டுக்கும், அணிலுக்கும் விருந்தளித்துக் களிக்கின்றன. ஆனால், நான் மட்டும் ஏன் இப்படி இருட்டறையில் —மண்ணடியில்— வாடிக்கிடக்க வேண்டும்? எனக்கு மட்டும் விடுதலை உணர்ச்சியும், இன்ப வாழ்வும் இல்லையா?'' என்று தனக்குள் கேட்டது.

ஒருநாள் அம்மரத்திடமே இது பற்றிக் கேட்டது. அதற்கு அந்த மரம் சொன்னது:

''வேரே! தரைக்குள் இருக்க வேண்டும் என்பது உனக்கு இட்ட கட்டுப்பாடு. ஆனால், தரைக்குள் எந்தப் பக்கம் வேண்டுமானாலும் நீ செல்லலாம். அதற்கு உனக்கு முழு விடுதலை உண்டு. எனவே, கட்டுப்பாட்டுக்குள் விடுதலை உணர்வு வழங்கப்பட்டுள்ளது. அப்படி இருந்தால்தான் வளர்ச்சியும், வாழ்வும் இருக்கும். முழுக் கட்டுப்பாடு அடிமைத்தனமாகும். கட்டுப்பாடற்ற விடுதலை வெறித்தனமாகும். கிளைகளும் இம்முறைப்படியே செயல்படுகின்றன,'' என்று எடுத்துரைத்தது.

ஆனால், மரவேர், இதை ஏற்றுக் கொள்ளவில்லை. அது மண்ணின் மேல் தலையை நீட்டியது. அருகிலிருந்த பள்ளிப் பிள்ளைகள் அதைப் பிடித்து இழுத்தனர். சிலர், அதைப் பாம்பு என்று எண்ணிக் கற்களை எறிந்தனர். இன்னும் சிலர், அதனுடன் மாட்டைக் கட்டி, மாடு கயிற்றை இழுத்த போது வேரும் இழுக்கப்பட்டது. பலவாறு துன்புற்ற வேர் ஒன்றும் பேசாமல், தன் தலையை மறுபடியும் தரைக்குள் இழுத்துக் கொண்டது.

மனிதனும் பலாப்பழமும்

ஒரு மனிதன் ஒருநாள் ஒரு பெரிய பலாமரத்திடம் சென்றான். அதன் கிளைகளில் மத்தளம் போன்று பெரிய பலாப்பழங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றை அறுத்தான். அதன் உள்ளே இருக்கும் சுளையை எடுப்பதற்கு மிகவும் தொல்லைப்பட்டான். அதனால் அவனுக்கு அப்பழத்தின் மீதே வெறுப்பு உண்டாயிற்று.


அவன் அந்த மரத்திடம் ''ஏ! பலா மரமே! ஏன் இப்படி, உன் பழத்தை விரும்பி உண்பவரை இவ்வளவு தொல்லைப்படுத்துகிறாய்? பலாச்சுளை எளிதாகக் கிடைக்கும்படி ஏன் அவற்றை அமைக்கக் கூடாது?'' என்று கேட்டான்.



அதற்கு அந்தப்பலா மரம், "என் பலாச்சுளைகள் மிகவும் இனிமையானவை. துன்பத்திற்குப் பிறகு கிடைக்கின்ற இன்பமே உண்மையான இன்பமாகும். எவ்விதத் தொல்லையுமின்றி எளிதில் இன்பம் கிடைத்தால் அது சுவையாகாது. மேலும், இப்பழங்கள் எளிதில் கிடைக்கும்படி இருந்தால் உன் போன்றவருக்குக் கூடக் கிடைக்காது" என்று கூறியது.

ஆனால், அவன் மீண்டும் மீண்டும் தன கருத்தைக்கூறவே, முடிவில் அவன் வேண்டுகோளுக்குப் பலாமரம் இணங்கியது. முள், கனத்த தோல், நார் எதுவுமற்ற ஒரு பலாக்காய் அதில் காய்த்தது. அது நன்றாகப் பழுக்கட்டும் என்று அவன் காத்திருந்தான். ஆனால், அது கனிவதற்குள் பறவைகளும், குரங்கு முதலிய விலங்குகளும், எல்லாச் சுளைகளையும் சாப்பிட்டு விட்டன. இறுதியாக, பழம் தொங்கிய காம்பே அவனுக்குக் கிடைத்தது!

கோழியும் குருவியும்



ஒரு வீட்டுத் தோட்டத்தில், சில கோழிகள் கொத்திக் கொண்டிருந்தன. அப்போது, அங்கே ஒரு குருவி வந்தது. அதுவும் கீழே இருந்த உணவு மணியைக் கொத்தத் தொடங்கியது.

அதைப் பார்த்த ஒரு சேவல் உரத்த குரலெடுத்து ஆணவச் சிரிப்பு சிரித்தது. அதன் பக்கத்திலிருந்த பெட்டை, "ஏன் அப்படிச் சிரிக்கிறாய்?" என்று கேட்டது.

"ஒன்றுமில்லை, இதோ பார், இதன் முழு உடம்பு, நம் கழுத்தளவு கூட இல்லை. இந்தச் சுண்டைக் காய்க் குருவி நம் முன்னே, சிறிதும் வெட்கமின்றி வருகிறது. கொஞ்சமும் நாணமின்றி இரையைக் கொத்துகிறது. இதைப் பற்றி நினைக்கும் போது எனக்கு அடக்க முடியாத சிரிப்புத்தான் வருகிறது" என்று சொல்லிவிட்டு, இரும்புத் தகட்டில் உரல் உருள்வதைப் போல, மறுபடியும் 'கடகட' வெனச் சிரித்தது.

குருவ, இதைக் கேட்டு, கொஞ்சமும் வருத்தம் அடையவில்லை. அது கோழிகளைப் பார்த்து, "நீங்கள் மெலிந்த என் சிறு உருவத்தைக் கண்டு ஏளனமாகச் சிரிக்கிறீர்கள். சிறுமை, பெருமை என்பது உடலைப் பொறுத்தல்ல. அது உள்ளத்தைப் பொறுத்தது. ஒருவரது எண்ணம், முயற்சி, திறமை, இவற்றை ஒட்டியே ஒருவருக்குச் சிறுமையோ, பெருமையோ ஏற்படும்" என்றது.

குருவியின் பேச்சைக் கேட்டதும், மறுபடியும் கோழிகளெல்லாம் எள்ளி நகைத்து ஆரவாரம் செய்தன. இந்தச் சமயத்தில் ஒருவர் அங்கு வந்தார். கோழிகளைப் பிடிக்க முயன்றார். உடனே குருவி, 'விர்'ரென்று அருகிலிருந்த மரத்திற்குப் பறந்து சென்றது. மூலைக்கு ஒன்றாகக் கோழிகள் ஓடின. ஆயினும் அவை பிடிபட்டுக் கட்டைத் தொண்டையில் கதறின. குருவி அவற்றைத் துயரத்துடன் பார்த்துப் பெருமூச்சு விட்டது.

—மலையமான்.

அடுத்த இதழில்:

எம். சோலையன் எழுதும்

சட்டிக் காத்தான், 6D

பிருந்தாவனம்

ஒன்பதின் மர்மம்

உங்கள் வீட்டில் தொலைபேசி உள்ளதா? இருந்தால், அதில் உள்ள எண்களைக் குறித்துக் கொள்ளுங்கள். உதாரணமாக 63725 என்ற எண்ணை ஒன்பதாக மாற்ற வழி:

63725 — இதில் உள்ள எண்களைக் கூட்டினால் 6+3+7+2+5 = 23.

இந்த 23—ஐ டெலிபோன் எண்ணில் கழிக்க வேண்டும். 63725—23= 63702. இந்த விடையிலுள்ள எண்களைக் கூட்டினால் 6+3+7+0+2 = 18.

இந்த 18 என்ற எண்ணை மீண்டும் கூட்ட வேண்டும் 1+8 = 9.

இதுபோலவே நீங்களும் ஏதாவது ஒரு எண்ணை வைத்து விடையைச் சரிபாருங்கள்; விடை ஒன்பதே வரும்.

—எஸ். பிரபாகர் (9040), சேலம் டவுன்.



ரொட்டியும் வெண்ணெயும்



பக்த கபீர்தாசர் ஒரு முறை ரொட்டித் துண்டையும் வெண்ணெயையும் வைத்துக் கொண்டு சாப்பிட அமர்ந்தார். அப்பொழுது ஒரு நாய் ரொட்டித் துண்டைக் கவ்விக் கொண்டு ஓடி விட்டது.

கபீர்தாசர் தரையிலிருந்த வெண்ணெயைக் கையில் எடுத்துக் கொண்டு நாயின் பின்னால் ஓடினார். நாய் நின்றபாடில்லை. அப்போது கபீர்தாசர், "கடவுளே, ரொட்டித் துண்டு நன்றாக உலர்ந்து விட்டது. இந்த வெண்ணெயையும் சேர்த்துச் சாப்பிட்டால்தான் சாப்பிட முடியும். ஆகையால் நாயை நிற்கச் சொல்லுங்கள்" என்று வேண்டினார்.

நாய் நின்றது. கபீர்தாசர் ரொட்டியை வெண்ணெயில் தொட்டுத் தொட்டு நாய்க்கு ஊட்டி விட்டார். நாய் வாலை ஆட்டிக் கொண்டே சாப்பிட்டது.


—எம். கோகுலமுரளி (8203), கோவிந்தாபுரம்.

தேர்வு

தேர்வு என்பது ஒரு சோதனை.
திறமை மிகுந்தோர்க்கு சாதனை.
திறமை குறைந்தோர்க்கு வேதனை.
சாதனையும், வேதனையும்
சமமாகப் பார்ப்பான் — ஒரு
சராசரி மாணவன்.

—அ. சாகிர் (5450), மழையூர்.






யார் முட்டாள்?

ஒரு பணக்கார முட்டாள் இரவு நேரத்தில் புதிதாக வாங்கிய தன் மோட்டார் சைக்கிளைச் சாலையில் ஓட்டிக் கொண்டு சென்றான். எதிரே தூரத்தில் ஒரு லாரி வருவது தெரிந்தது. அது லாரி என்பது அவனுக்குத் தெரியவில்லை. "இதோ எதிரே வரும் இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கு நடுவே என்றால் என் மோட்டார் சைக்கிளை ஓட்ட முடியாதா?" என்று கூறிக் கொண்டே லாரிக்கு எதிரே சென்றான். மறுவிநாடி, லாரியில் நன்கு அடிபட்டு ஆஸ்பத்திரியை அடைந்தான். சுயநினைவு வந்தது. அப்போது அவன் நண்பன், "இது எப்படி நேர்ந்தது?" என்று கேட்டான்.

"முட்டாள்கள். எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த அவர்கள் கைகோத்துக் கொண்டு வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை" என்றான்.

—இரா. சதீஷ்குமார் (1516),
தஞ்சாவூர்—9.

ஆராய்ச்சி மணி



அரசன்: மந்திரி, இங்கே கட்டியிருந்த ஆராய்ச்சி மணி எங்கே, காணோம்?

மந்திரி: அந்த மணி பொன்னா, வெள்ளியா.. தங்கமா என்று ஆராய்ச்சி பண்ண யாரோ எடுத்துப் போயிருக்காங்க அரசே!


—பானுகோ ஜோபார் (5079),
புதுச்சேரி—8.

டம்ளர் எங்கே?

ஒருவர் மகளுக்குத் திருமணம் நடந்தது. திருமண விருந்தும் நடந்தது. அவர் வாடகைக்கு 250 எவர்சில்வர் டம்ளர்களை எடுத்திருந்தார். விருந்து முடிந்து டம்ளர்களை எண்ணிப் பார்க்கும் போது 249 டம்ளர்களே இருந்தன. யாரிடமும் கேட்க அவருக்கு மனம் வரவில்லை. அப்போது அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

எல்லோரும் விருந்து முடிந்து, பிளாஸ்டிக் பையில் தேங்காய், பழம் வாங்கிக் கொண்டு போகும் போது 'டேய், திருடா!' என்று கூவினார். உடனே, ஒருவரைத் தவிர வேறு யாரும் திரும்பிப் பார்க்கவில்லை. அவரைச் சோதனை போட்ட போது, அவர் மடியில் இருந்தது காணாமல் போன டம்ளர்!

—சோ. கணேசன் (8883), கோவை—1



23 பேர்..!

"என் பிறந்த நாளுக்கு 23 பேர் வந்திருந்தாங்கடா!"

"அப்படியா! யார் யாரு?"

"ஆறுமுகம், ஏழுமலை, பத்மநாபன்."

—ஹெச். பாரூக் (2467), லால்குடி



எத்தனை பேர்?



ஒரு திரைப்படத்திற்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மொத்தம் 40 பேர் சென்றனர். அங்கு ஆண்கள் 3 ரூபாய் டிக்கெட்டும் பெண்கள் 2 ரூபாய் டிக்கெட்டும், குழந்தைகள் 50 பைசா டிக்கெட்டும் எடுத்தனர். அவர்கள் டிக்கெட்டிற்குச் செலவழித்த ரூபாய் அவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவு தான். அப்படியானால், ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்? குழந்தைகள் எத்தனை பேர்?

விடை: ஆண்கள் 5 பேர்.
பெண்கள் 5 பேர்.
குழந்தைகள் 30 பேர்.

—கே. ரவிக்குமார் (7324),
வண்டலூர்.

கால் இல்லாக் குறள்கள்!



கீழே உள்ள நான்கு குறள்களிலும் கால் (ா) இருக்கிறதா? தேடிப் பாருங்கள்:

சிறப்பீனும் செல்வமும் ஈனும்
அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு?

அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை;
அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

தண்ணம் துறைவன் தணந்தமை
நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

இம்மைப் பிறப்பில் பிரியலம்
என்றேனக்
கண்நிறை நீர்கொண் டனள்.

—ச. பத்மநாபன் (8406),
கோவை—9.

அப்புறம் என்ன?



"A. B. C. D. E. F என்று சொல்லிக் கொண்டிருந்த என் அக்காள் மகன் திடீரென்று கீழே விழுந்துட்டான்!"

"அப்புறம் என்ன ஆச்சு?"

"G. H.—க்குக் கொண்டு போக வேண்டியதாயிடுத்து."

(G. H. = ஜெனரல் ஹாஸ்பிடல்)'

—ஆர். ஜானகிராமன் (6081),
சேலம்—1.

ஓட்டப் பந்தய முதல்வன்.



ஒருவர்: ஓட்டப் பந்தயத்தில் எல்லாம் முதலாவதாக வருவானே உங்க பையன், அவன் இப்போ எங்கே? ஆளைக் காணோமே!

மற்றவர்: அவன் ஓடிப் போயிட்டான் வீட்டை விட்டே.

—நிரந்தரம் த. பாபு (1207), காரைக்குடி—I.

கடிகாரத்தில் அப்பா பெயர்



என் அப்பாவின் பெயர் HARI KRISHNAN என்கிற 12 எழுத்துக்கள் கொண்டது. எனவே எங்கள் வீட்டுச் சுவர்க் கடிகாரத்தில் 12 எண்களுக்குப் பதிலாக என் அப்பாவின் பெயரிலுள்ள 12 எழுத்துக்களும் எழுதப்பட்டுள்ளன.

—ஹ. பிரசித் கண்ணு (8507), பட்டுக்கோட்டை.

வல்லவனுக்குப் புல்லும் ...




பெஞ்சமின் கான்ஸ்டன்ட் (1767—1830) புகழ் பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர்; அரசியல்வாதி. இவர் ஐந்து [illegible] புத்தகங்களை [illegible]ர். இதில் என்ன [illegible] என்றால். இந்தப் புத்தகங்களின் மூலப் பிரதி முழுவதையும் சீட்டுக் கட்டுகளின் பின்புறம்தான் எழுதினார்! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் போலும்!

—எஸ். மாதவன் (204), திருச்சி—14.

இரவல் கொடுக்கும் போது ...

* பேனாவை மூடியைக் கழற்றிக் கொண்டு கொடுங்கள். அப்போது தான் மறக்காமல் பெற முடியும்.
* யாராவது தெரிந்தவர்கள் 10 பைசா சடன் கேட்டால், ஒரு ரூபாயாகக் கொடுங்கள். அப்போதுதான் திருப்பிக் கேட்கக் கூச்சப்படத் தேவையில்லை.
* பொதுவாக பால்பாயின்ட் பேனா உபயோகித்தால் மை இரவல் பிரச்சினை இருக்காது.



* புத்தகத்தை இரவல் கொடுக்கும் போது, ஏதேனும் ஒரு புத்தகப் பொன்மொழியைச் சொல்லிக் கொடுங்கள்.

—என். செல்வக்குமரன் (4858), பண்ணுருட்டி.

சித்திரப்புதிர்—5 விடைகள்:

1. நீர்க்காகம், நீர்த்தேள், நீர் யானை, நீர்க் கோழி, நீர் நாய்.
2. (ஆ) சித்தன்னவாசல்,
3. நீரில் வாழும் ஆமை. (நீரில் நீந்துவதற்கு ஏற்ப அதன் பாதங்கள் உள்ளன.)
4. வட்டத்தின் முதல் பகுதியில்:

   காந்திஜி, வ. உ. சிதம்பரம், லாலா லஜபதிராய், திலகர்.

   வட்டத்தின் இரண்டாம் பகுதியில்:


   சர்தார் வேதரத்தினம், நேருஜி, ராஜாஜி, பகத்சிங்.

   வட்டத்தின் மூன்றாம் பகுதியில்:

   சரோஜினிதேவி, வாஞ்சிநாதன்.
5. (இ) இந்தியா.

Printed and published by V. Murea on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431642)

Editor: K. Rajendran



ஹென்றி ஃபோர்டு

பிறந்த நாள்: 30·7·1863

மறைந்த நாள்: 7·4·1947

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

இன்சுவை ஜோடி!
சக்திக்கும் சுவைமிகு மொறுமொறுப்புக்கும் ஸ்பென்ஸர்ஸ் ஹைமில்க் மற்றும் நைஸ் பிஸ்கெட்டுகள்



ஸ்பென்ஸர்ஸ் ஹைமில்க்—கறந்த பாலின் இனிமையுடன் சக்தி தரும் புரதச் சத்துக்களும் சேர்ந்த முத்தான பிஸ்கெட்.

அதனுடன் இணைசேர்ந்து தெவிட்டாத சுவை அளிப்பது தேங்காயும் சர்க்கரையும் பாங்குறக் கலந்த மொறுமொறுப்பான நைஸ் பிஸ்கெட். ஸ்பென்ஸர்ஸ் நைஸ்.



FAME/S/1128 TAM

ஸ்பென்ஸர்ஸ்
பிஸ்கெட்டுகள்
சுவைத்திடச்சிறந்தவை

ஸ்பென்ஸர்ஸ்
ஸ்பென்ஸர் & கோ. லிமிடெட்
769, அண்ணா சாலை,
சென்னை 600 002